அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

' எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	ஸ்ரீமுக௵ பங்குனி௴ 1௳	இதழ்
5	1934௵ மார்ச்சு௴ 14௳	3

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புக்கள் ... 160
'மனக் கோட்டை' ... 163
கிராமபோன் பிளேட்டுகள் எப்படி எடுக்கப்படுகின்றன? 167
வறுமையின் கொடுமை ... 169
ஜப்பான் செய்திகள் ... 174
அழகன் ... 175
மேனாடும் கீழ்நாடும் ... 178
தடுக்கி விழுந்ததும் காதல் ... 183
கிளி ... 190
கவிச் சித்திரமும் பண்டைத் தலைவியரும் ... 191
பெண்ணின் பெருமை ... 195
ஒரு கதை ...
மகத்தான நியாயங்கள் ... 2
குழந்தை வளர்ப்பு ... 204
பேராசையுள்ள குள்ளநரி ... 208
ஜோதிடம் சோணாசலம் ... 210
வெளி விகடம் ... 213
கிள்ளைவிடு தூது ... 219
காய்ச்சல் ... 221
கட்டுரை எழுதும் நேயர்களுக்கு ... 224
வெறும் பேச்சுக்கள் ... 226
'யான் என் பெண்ணைப் பிறந்தேன்' ... 228
கமிஷன்பேட்டி ... 236

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

போட்டிப் பரிசு நிற்காது

பத்திரிகைகளில் வெளிவரும் போட்டிப் பரிசுகள் நிறுத்தப்பட மாட்டாது என்பது திண்ணம். ஏனெனில் 5000 ரூபாய் பரிசு கொடுக்கும் பத்திரிகைக்கும் பிரவேசக் கட்டணம் மூலம் 200 ரூபாய் வருமானம் வந்தாலும் போதுமானது. பிரவேசக் கட்டணப் பணம் எவ்வளவு வருகின்றதோ அவ்வளவும் லாபம். எப்படி யெனில் பரிசு கொடுத்ததாய்ப் பிரசுரமாகும் பெயராளர்களுக்குக் கொஞ்சமும் பரிசு கொடுக்காமலேயே பிரசுரிக்கப்படுகிறது. பிரசுரிக்கச் சம்மதிப் பவர்கள் நெருங்கிய பந்துவும், வைப்பாட்டியும், நண்பரும், அவர் களின் புத்திர புத்திரிகளுமே யாதலால் பிரசுரமாவதால் புகார் இல்லை. எனவே போட்டிப் பரிசு ஓய்வடையாது நடந்துவரும். ஏமாந்தவர் ...ரின் பணமே பத்திராதிபரின் குடிக்கும், கூத்திக்கும், மோட்டார் ...ாரிக்கும் உதவியாகும். ஆதலால் இதை நல்ல கைங்கரியமாய்க் கருதும் நண்பர்கள் போட்டிப் பரிசில் கலந்து கொள்ள வேண்டு மாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவர் யாருக்குக் குரு?

மதுரையில் ஒரு கூட்டத்தில் காந்தியை 'மகாத்மா' எனக் கூற வேண்டும் என்று ஒரு நண்பர் ஸ்ரீ சங்கராச்சாரியாரிடம் சொன்ன போது 'உமக்கு அவர் மகாத்மாவாய் இருக்கலாம். எமக்குக் காந்தியே' எனப் பதில் கூறின அவர் தம்மை ஜகத்குரு என்று சொல்லிக் கொண்டு ஒரு வெள்ளி நாற்காலியை ஊர் ஊராகத் தூக்கிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றித் திரிவதை ஒருவரும் அறியாரென [illegible]லும். இவர் எங்கோ ஒரு மூலையிலுள்ள தம்முடைய இனத்தார்களுக்குக் குருவாய் இருக்கலாம். ஜகத்திலுள்ள மற்றவர் களுக்கு இவர் எப்படி குருவாவார் என்று நாம் கேட்கிறோம். ஒன்று மில்லாத ஒரு சாதாரண சந்நியாசியான இவர் தம்மை ஜகத்குரு

என்று சொல்லிக் கொள்ளும்போது உலகம் போற்றும் உத்தமான காந்தி அடிகளை மகாத்மா என்று அழைப்பது தவறு தானே?

பெரியார் பிரிவு

செம்பூர் வித்வான் வீ. ஆறுமுகம் சேர்வையார் அவர்கள் 5-2-34-ல் தஞ்சை நகரில் காலமானர் என்ற செய்தி அறிந்து கலங்கிப் போனோம். வித்வான் ஆறுமுகம் சேர்வையாரைப் போன்ற ஆழ்ந்த கல்வி அறிவு வாய்ந்தவரை இக் காலத்தில் காண்பது அருமையாகும். இவர் பழந் தமிழ் நூல்களை எழுத் தெண்ணிப் படித்த பெரும் புலவர்; சிறந்த கவி; உயர்ந்த உரையாசிரியர்; நல்ல வசன நூலாசிரியர். இவர் உரை எழுதிய செய்யுள் நூல்கள் பல; இயற்றிய வசன நூல்கள் அனேகம். இவர் பள்ளிச் சிறுவர்களுக்கும் படித்த பெரியவர்களுக்கும் உபயோகமாகும் பல வித புத்தகங்கள் எழுதி இருக்கிறார். இவரது அரிய புலமையும், ஆராய்ச்சித் திறமும், நுட்ப அறிவும் இவர் எழுதிய நாலடியார் விரிவுரையில் நன்கு புலனாகிறது. பெரும் புலவராகிய இவர் பத்திரிகை அநுபவமும் பெரிதும் பெற்றிருந்தார். நாடகக் கலை வளர்ச்சியில் சேர்வையாருக்கிருந்த ஆர்வம் அளவிட முடியாதது. 'இவரும் ஒரு ஜைனரோ' என்று எண்ணும்படி ஜைன சமய சம்பிரதாயங்களை இவர் மிகவும் அறிந்திருந்தா[ர்]. இராமநாதபுரம் ஜில்லாவில் மது விலக்குப் பிரசாரகரா யிருந்து இ[வர்] செய்த சேவை மறக்க முடியாதது. குணத்தில் சேர்வையார் குன்றாக விளங்கினர். பழம் புலவராக இருந்தாலும் புதுமையில் இவருக்கு விருப்பமிருந்தது. கல்விச் செருக்கு இவரிடம் கடுகளவும் காணப்படவில்லை. இளையவரிடத்திலும் இன்பமாக நடந்து கொள்வார். இத்தகைய எல்லா நலன்களும் இவர் வாய்ந்திருந்தாலும் செல்வ நலன்மட்டும் இவர் பெற்றிருக்கவில்லை. இவரால் பெரும் செல்வரானோர் பலராயினும் இவர் மட்டும் புலவர்களுக்கு இயற்கையாகவுள்ள வறுமை நோயால் இறக்கும் வரையில் வாட வேண்டியதாயிற்று. ஒரு சிறந்த புலவரை—அரிய கவியை—உயர்ந்த உரையாசிரியரை—நல்ல நாடகாபிமானியை—மிகுந்த குணசாலியை—பண்பட்ட பத்திரிகாசிரியரைத் தமிழ் நாடு இழந்து விட்டது. இவரது மனைவியாருக்கும், ஒரே பெண்ணுக்கும், தஞ்சை நண்பர்களுக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர் ஆன்மா சாந்தி யடைக.

அடிகளின் யாத்திரை

காந்தி யடிகள் தீண்டாமையை ஒழித்துத் தாழ்த்தப்பட்ட சோதரரை உயர்த்தும் பொருட்டு தமிழ் நாட்டில் செய்த யாத்திரை வெற்றியோடு முற்றுப் பெற்றது. மகாத்மா தமது தள்ளாத வயதில் கொஞ்சமும் ஓய்வு ஒழிவில்லாமல் அனேக ஊர்களுக்கு—என் மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களுக்கும் சென்று சேவை செய்தது என்றும் மறக்க முடியாத செயலாகும். அடிகள் விஜயம் செய்த இடங்களி லெல்லாம் மக்கள் காட்டிய உற்சாகத்தையும் உபசாரத்தையும் அளவிட்டு உரைக்க முடியாது. அடிகளிடம் இந்தச் சுற்றுப் பிரயாணத்தால் சற்றேறக் குறைய இரண்டு லட்சம் ரூபாய் வசூலாயிருக்கிற தென்று அறிகிறோம். மகாத்மா இந்தத் தொகையை எந்தப் புண்ணிய காரியத்திற்காக வசூல் செய்தாரோ அந்தப் புனித கைங்கர்யம் நல்ல முறையில் விரைவில் நடைபெறுமென்று நம்புகிறோம். தமிழ் நாட்டார் மகாத்மாவின் வரவேற்பில் காட்டிய அளவு கடந்த உற்சாகத்தைத் தாழ்த்தப்பட்டு மிகவும் தத்தளிக்கும் ஏழைச் சகோதரர்களின் முன்னேற்றத்தில் காட்டுவார்களென்று எதிர் பார்க்கிறோம். அடிகள் வாழ்க. அவர்கள் புனித நோக்கம் பூர்த்தி பெறுக.

பசுவைக் கொன்று செருப்புத் தானமா?

சென்னைச் சட்ட சபையில் சென்ற 21-ஆம் தேதி 1934-35 ஆம் வருஷ வரவு செலவு திட்டத்தைப் பொக்கிஷ மந்திரி கனம் ஸ்டோக்ஸ் ஆஜர் செய்தபோது புரிந்த பிரசங்கத்தில் இந்த மாகாண விவசாயிகளின் கஷ்ட நஷ்டங்களை ஒப்புக் கொண்டு கண்ணீர் வடித்தார். ஆனால் சட்ட சபை தீர்மானம் செய்தவாறு நிலவரியில் 100-க்கு 25 வீதம் குறைக்க முடியாதென்று சொல்லி ஏதேதோ கவைக் குதவாத காரணங்களைக் காட்டினார். வருகிற வருஷத்திற்கு அவர் தயாரித்துள்ள திட்டப்படி அரசாங்கத்தார் தாமே குறைத்துள்ள நிலவரிக் குறைவையும் நீக்கிப் பார்த்தால் $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மிச்சமாகிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இப்பொழுதே உலகத்தில் எங்குமே இல்லாத கொழுத்த சம்பளங்களை விழுங்கிக்கொண் டிருக்கிறார்கள். இந்தச் சம்பளங்கள் குறைவென்று இன்னும் அவர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று பொக்கிஷ மந்திரி கூறுகிறார். ஏழை விவசாயிகளின் வயிற்றி லடிக்கும் இச் செயல் பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வதை ஒத்திருக்கிற தல்லவா?

‘மனக் கோட்டை’

——:o:——

[வி. ஏ. எம். எஸ். என்]

ஒருநாள் காலை பத்து மணி இருக்கும். அப்பொழுது மெதுவாய்க் கதவைத் திறந்து வீட்டினுள் நுழைந்தேன். திடீரென்று ஒரு குரல் கிளம்பிற்று. ‘ஏண்டா மணி. இவ்வளவு நேரம் எங்கே சென்றிருந்தாய். காலையில் போறதும், மத்தியானம் சாப்பிட வருவதும், மத்தியானம் சாப்பிட்டுப் போறதும் தீபம் வைக்க வருவதுமா இருக்கிறாயே. இனியும் சாப்பிட என்ன செய்யலாமென யோசித்து இருக்கே? பதினெட்டு வருஷமாக அழுது அழுது ரூபாய்களைத் தொலைத்துப் பத்தாவது வரை படிக்க வைத்தேனே. இன்னும் என்னை என்ன பண்ணச் சொல்லுகிறாய். சாப்பாடு உனக்குப் போடுவது காணு[illegible]தென்று உன் பெண்டாட்டி[illegible]கும் போட வேண்டியிருக்கே. உன் தகப்பனாருக்கு வயோதிகம் மேலிட்டு விட்டதால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நானும் எத்தனை நாளைக்கு இப்படியே இருப்பேன். ஒரு நாளைக்காவது உன் தகப்பனாரைப் போல் ஆக வேண்டியதுதானே. அப்பொழுது உன் மனைவி மக்களுக்கு என்ன செய்வாய்? பத்து வரை படித்துவிட்டு எங்கேயாவது ஒரு வேலையில் அமராமல் சுத்திக் கொண்டு திரிகிறாயே. தண்ட சோறு தின்ன குண்டு போட்டதும் வருகிறாயே. இது உனக்கு நன்றா இருக்கா’ என்று என்னை என் தாயார் அதட்டினாள்.



உடனே நான் இன்றைக்கு இந்த மட்டிலாவது விட்டு விட்டாளே என்ற சந்தோஷத்துடன் என் அறைக்குள் சென்று என் கட்டிலின் மீது சாய்ந்துகொண்டு ‘என் நம் தாய் இன்று நம்மை இப்படித் திட்டினாள்’ என்று யோசித்துக் கொண்டே சாய்ந்து இருந்தேன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் எனக்கு ஒரு தந்தி கிடைத்தது. அதை வாங்கிப் பார்த்ததில் அது எனது ஊரைச் சேர்ந்த ஒரு போலீஸ் கமிஷனரிடமிருந்து என்னை ஒரு சப்இன்ஸ்பெக்டர் உத்தியோகத்துக்காக அமர்த்தி இருப்பதாயும் உடனே திருநெல்வேலி ஜில்லாவில் தம்மை வந்து கண்டு கொள்ளும்படியும் எழுதி இருந்தது. எனக்கு இதை வாசித்ததும் ஆச்சரிய மேற்பட்டது. ஏனெனில் நான் ஒருவருக்கும் எனக்கு வேலை தரும்படி எழுதவில்லை. அப்படி இருக்க எனக்கு எப்படி கிடைத்தது? நிற்க, என் பக்கத்து வீட்டில் பீ. ஏ, படித்த ராஜன் என்ற என் சிநேகன் ஒரு வேலையில் அமர எவ்வளவோ பிரயத்தனப்பட்டான். முடியவில்லை. கடைசியில் பத்திரிகை ஆபீஸில் சந்தாதாரர்களுக்குத் தினம் நியூஸ் பேப்பர் போட்டு வரும் வேலையில் 10 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்து இருக்கிறான். அப்படி இருக்கிற ராஜன் அந்த போலீஸ் கமிஷனருடைய கண்ணுக்குத் தெரியவில்லை போலும். 10 வரை படித்த நான்தான் அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தேனே? நான் இருந்தது அவருக்கு எப்படித் தெரியும் என்ற ஆச்சரியம்தான்.

(ஆனால் இன்னொரு ரகசியம். எனக்கு ஒரு வேலைக்கும் போக இஷ்டமில்லை. அப்படி போய்விட்டால் நண்பன் கிருஷ்ணனோடு பத்து மணி வரையில் யார் சீட்டாடுவது? அப்படி இன்னொருவர் ஆடினாலும், அதைப் பார்த்து இருக்க எனக்குச் சகியாது. ஆகலால் தான் என் தாயார் எப்படி பேசினாலும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இல்லா விட்டால்.........தெரியுமா)

உடனே எப்படியும் எழுதிவிட்டுப் போகிறார். நான் வேலைக்குப் போகமாட்டேன் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது 'எண்டா மணி! வக்கீல் ராமகிருஷ்ணரிடம் உனக்கு ஏதாவது ஒரு வேலைக்குச் சிபார்சு பண்ணும்படி சொன்னேன். அவர் தமக்குத் தெரிந்த யாரோ ஒரு பெரிய மனுஷாள் இருப்பதாகவும், அவரிடம் சொல்லி உனக்குத் தெரிவிப்பதாயும் சொன்னார். எங்கே உனக்கு ஏதாவது லெட்டர் வந்ததோ. அதுதானா அந்தத் தந்தி' என்று என் தகப்பனார் கேட்டார்.

'என்னடா இது! எழவாய் வந்து சேர்ந்தது. இந்தச் சனியன் போய்தான் கலக்கிவிட்டதுபோ விருக்கிறது' என்று நினைத்து 'ஆமாம்' என்று அதிலிருந்த விஷயத்தைச் சொன்னேன். உடனேயே என் தகப்பனார் என்னை அங்கே போகச் சொன்னார். 'சரிதான் இனி நம்பாடு திண்டாட்டம்தான் என்று நினைத்துக்கொண்டு கமிஷனரை வாயார சபித்துக்கொண்டே திருநெல்வேலிக்குச் சென்று அங்கே அவரைக் கண்டேன். அவர் என்னிடம் சில கேள்விகளைக் கேட்டார். சரியான பதில் சொல்லக்கூடா தென்று நினைத்தேன்.

வீட்டிற்கு வந்தால்......என் தாயாரிடம் சொன்னால்'......என்று பயந்து சரியான விடைகளைச் சொன்னதால் அவர் என் கெட்ட காலத்தின் பயனாக என்னை அவ்வூர் சப்இன்ஸ்பெக்டராய் அமர்த்தினார்.

சில நாளைக்குப் பிறகு வீரராகவபுரத்தில் காங்கிரஸ் மறியல் ஏற்பட்டது. உடனே என்னைப் பத்து சேவகர்களுடன் அங்கே பந்தோபஸ்துக்காகப் போக ஆர்டர் வந்தது. என்ன செய்வேன் நான். எனக்குப் பந்தோபஸ்துக்குப் போய்ப் பழக்கமில்லை. ஆர்டருக்குக் கீழ்ப் படிந்து, என் உத்தியோக உடைகளை அணிந்துகொண்டு என் வீட்டிலிருந்த நிலக் கண்ணாடியைப் பார்த்தேன். ஆஹா! என்ன அழகு. என்னக் கம்பீரம். என்ன துணிவு. அவை அணிந்த பிறகு எனக்கு ஏற்பட்ட அழகே எனக்குத் தைரியத்தைக் கொடுத்து உடனே போகத் தூண்டியது. நானும் அப்படியே என் துவிச்சக்கர வண்டியிலேறி அந்த இடத்தை அடைந்தேன்.

முன் சொல்லியபடி நான் வேலையில் அதிகப் பழக்க மில்லாததால் சட்டத்துக்கு மீறிய வேலைகள் எல்லாம் செய்ய எனது அழகும் கெம்பீரமும் தூண்டியது. உடனே கண்டபடி ஒவ்வொருவரையும் அடிக்க ஆரம்பித்தேன். சிறிது நேரம் சென்றது.

ஐயோ இனி நான் என்ன செய்வேன். நான்கு பேர்கள் வந்து என் காலையும் தேகத்தையும் கயிற்றால் இறுகப் பிணித்துத் தத்தம் கையில் இருந்த தடிகளால் புடைத்தார்கள். உடனே பலர் கூடினர்.



எனக்கு உதவிக்கு வருகிறார்களென நினைத்தேன். அவர்களும் என்னைத் தடியால் அடித்தனர். பிறகு எல்லோரும் கூடி என்னைத் தூக்கிக் கொண்டு போய் பக்கத்தில் தாம்பிரபாணி நதியின் நீர்ப் பிரவாகத்தில் வீசி எறிந்தனர்.

கடவுளே இனி நான் என்ன செய்வேன். நல்ல வேளையாய் என் கையைக் கட்டவில்லை. கையால் தண்ணீரைத் தடால் தடாலென அடித்துக் கொண்டு சிறிது நேரம் நிலப்பில் நின்றேன். கையோ சோர்ந்து விட்டது. இனி நிற்க முடியாது என்று கண்டதும் கடவுளே ஏ அம்மா கமலா, என் கண்ணே உன்னை

விட்டுப் பிரிகிறேன். இதுதான் என் கடைசி பேச்சு என்று கதறித் தடீர். தடீர் என்று தண்ணீரில் அடித்தேன்.

'ஆமாம் இதற்குக் குறைவில்லை. வேளைக்கு வேளை வயிற்றை நிரப்பி விட்டு அப்பாவையும் அம்மாவையும் கூப்பிடுவதில் குறைவில்லை' என்று என் தாயார் நான் கட்டிலின்மேல் அடித்த சத்தத்தைக் கேட்டு மேற் கூறியவாறு கர்ஜித்துக் கொண்டே என்னைத் தட்டினாள் திடீரென்று நான் விழித்தேன். என் மனைவி கதவண்டை நின்று சிரித்துக் கொண்டிருந்தாள். எழுந்தேன். என் தம்பி மேஜைமேல் எழுதி விட்டு வைத்துப் போன ரூல் கம்பு உருண்டு என் கையில் விழவே மறுபடியும் அவர்கள் தடியால் அடிக்கிறார்களோ

என்று திடுக்கிட்டுக் கண்களைக் கசக்கிக் கொண்டு நன்றாய் உற்றுப் பார்த்தேன். ஆனால் நல்ல வேளையாய் அப்படி இல்லை!

தகப்பனார்:—கிட்டு உன் மனைவியைத் தவிர மற்றவர்களை யெல்லாம் நீ தாயாராக எண்ண வேண்டும்.

கிட்டு (யோசித்து):—அப்படி யென்றால், அப்பா, நீ மிகவும் சிரமப்பட்டு சம்பாதிக்க நேரிடுமே.

தகப்பனார்:—என்னடா?

கிட்டு:—எல்லாரும் என் தாயாராய் விட்டால் உமக்கு சம்சாரங்கள் ஜாஸ்தியாய் விடுமே. —ஆர். எஸ். சாமிநாதன்

தடியனும், மடையனும் டி. பி. ராஜலட்சுமி நடித்த பேசும் படமான வள்ளித் திருமணம் பார்த்து விட்டு,

தடியன்:—ஏண்டா, நீயும் நானும் வள்ளி திருமணம் பார்த்தோமே அதிலே ஒரு அதிசயம் பார்த்தியா?

மடையன்:—என்னடா அதிசயம்?

தடியன்:—சுப்ரமணியர் மயில் மேலே ஏறிக்கினு போம்போது மயிலு இறக்கையை விரிக்காமல் பறந்துதே!

மடையன்:—அது தாண்டா சுப்ரமணியர் மகிமை.

—சி. மதுரை

கிராமபோன் பிளேட்டுகள் எப்படி எடுக்கப்படுகின்றன ?

[திரு. ஸி. எம். இராமச்சந்திரன் பி. ஏ.,]

முதலில் சில விஷயங்களை விளக்கிக் காட்டினபிறகு எப்படி பிளேட்டுகள் எடுக்கப்படுகின்றன என்று சொல்லுகிறேன்.

ஒரு குட்டையில் ஒரு கல்லைப் போட்டால், தண்ணீரில் சில வட்ட வடிவமான அலைகள் கல்விழுந்த இடத்தி லிருந்து புறப்பட்டுக் கரையை அடைவதை எல்லோரும் கவனித் திருக்கலாம். ஆனால் ஜலமட்டும் நகருகிறதில்லை. இதைப் பரீக்ஷிப்பதற்காக ஒரு துண்டு காகிதத்தைக் குட்டையில் மிதக்க வைத்து, பிறகு ஒரு சிறு கல்லைப் போட்டால் வட்ட வடிவமான அலைகள் எவ்வளவு உயரக் கிளம்பின போதிலும் காகிதத் துண்டு இருந்த இடத்திலேயேதான் இருக்கும். அதே மாதிரி சப்தமும் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து சுற்றுப் பக்கங்களுக்கு இம்மாதிரியே வட்ட வடிவமான அலைகளின் மூலமாய்ப் பரவுகிறது.

இரண்டாவதாக நாம் ஒரு வீணையை எடுத்து அதிலுள்ள ஒரு கம்பியை மட்டும் இழுத்து விட்டால், உடனே ஒரு வித சப்த முண்டாகிறது. ஒரு பாட்டை வீணையில் வாசிக்க வேண்டுமானால் பல கம்பிகளைத் தேய்த்து விட வேண்டும். கூட இடது கையும் வீணையின் அடிபாகத்திலுள்ள கம்பிகளின் மேல் ஓட வேண்டும். இப்படி செய்வதினால் ஒரு ரம்யமான பாட்டு உண்டாவதை நாம் கவனிக்கிறோம். இதி லிருந்து நமக்கு என்ன தெரிகிறது? ஒரு பாட்டு என்பது பல வித ரம்யமான சப்தத்துடன் கூடியது என்று நன்றாய்த் தெரிகிறது.

முதன் முதலில் எப்படி பிளேட் எடுக்கப் பட்டதென்று கவனிப்போம். அலுமனியம் என்ற உலோகம் மிக லேசானது என்று யாவரும் அறிந்த விஷயம். இந்த அலுமனியத்தைக் கொண்டு, மெல்லிய தகடுகள் அடிக்க முடியும். டைப்மிஷினில் எப்படி நீளமான ரிப்பன் ஒன்று இருக்கிறதோ, அம்மாதிரி அலுமனியத்தில் ஒரு நீளமான ரிப்பன் செய்யப்படுகிறது. இந்த ரிப்பனின் தடிப்பு மயிரிழை அவ்வளவுதான் இருக்கும். எப்படி ரிப்பன் டைப் ரைட்டிங் மிஷினில் சுற்றப்பட்டிருக்கிறதோ அம்மாதிரியே இந்த அலுமனிய ரிப்பனும் இரும்புக் குழாயில் சுற்றப்பட் டிருக்கிறது.

இந்தக் குழாயி லிருந்து 10 அடி தூரத்தில் இதேமாதிரி மற்றொரு குழாய் வைக்கப்பட்டிருக்கிறது. அலுமனிய ரிப்பனின் ஒரு நுனியானது இரண்டாவது குழாயுடன் இணைக்கப்பட் டிருக்கிறது. இரண்டாவது குழாயைச் சுற்றிக் கொண்டே வந்தால் அலுமனியம் முதல் குழாயிலிருந்து இரண்டாவது குழாயிற்கு வந்து சுற்றிக்கொள்ளும். ஒரு நீராவி இயந்திரத்தைக் கொண்டு இம்மாதிரி குழாய்களைச் சுற்ற ஏற்பாடு செய்யப்படுகிறது. இரண்டு குழாயிற்கும் மத்தியில் சிறு ஊசி ஒன்று அலுமனியத்தின் மேற்பாகத்தைத் தொட்டுக்கொண் டிருக்கும். இந்த ஊசி ஒரு சப்தப் பெட்டியின் அடிபாகத்தில் சொருகப்பட்டிருக்கும். இது மிக்க உறுதியாக யிருக்கும்.

கிராமபோன் குழாயில் இந்தச் சப்தப் பெட்டி இணைக்கப்பட் டிருக்கும். இந்தக் குழாயின் வாயில்தான் ஒருவன் பாட வேண்டும்.

ஏற்கனவே ஒரு பாட்டு என்பது பலவித ரம்யமான சப்தத்துடன் கூடினது என்று நான் சொல்லி யிருக்கிறேன். ஒவ்வொரு சப்தம் உண்டாகும் பொழுதும் ஊசி ஒவ்வொரு விதமாக ஆடும். ஏன்? சப்தம் உண்டாவதால் சப்தப் பெட்டியிலுள்ள காற்று ஒரு வித ஆட்டத்தில் விடப்படுகிறது. அந்தக் காற்று ஊசியின்மேல் போய் மோதுவதால், ஊசியும் காற்றைப்போல் ஆடுகிறது. இந்த ஊசி அலுமனிய ரிப்பன்மேல் தொட்டுக்கொண் டிருப்பதால் ரிப்பனில் ஒரு வித அடையாளம் உண்டாகும்.

இந்த ஊசி ரிப்பனைத் தொட்டுக்கொண் டிருக்கு மிடத்திலிருந்து ஒரு அடிக்கு முன் ரிப்பன் மின்சார சக்தியினால் இளகும்படி செய்யப்படுகிறது. ஊசி ரிப்பனின்மேல் ஆடும் பொழுது, ரிப்பன் இளகி யிருக்கும். ஆதலால் ரிப்பனில் ஒரு வித அடையாளம் ஏற்படும். ஆனால் இப்படி இளகின ரிப்பனை இரண்டாவது குழாயில் சுற்றி விட்டால் ரிப்பன் கெட்டுப்போய் விடும். ரிப்பனின் மேல் ஊசி அடையாளம் செய்தவுடன் மிகக் குளிர்ந்த ஜலம் ரிப்பனின்மேல் விடப்பட்டு அதைக் கெட்டியாகச் செய்யப்படுகிறது. உடனே இரண்டாவது குழாயிற்குப் போய் ரிப்பன் சுற்றிக் கொள்ளுகிறது.

இதில் ஒன்று முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். பாட்டு எவ்வளவு வேகமாய்ப் பாடப்படுகிறதோ அதற்குத் தகுந்தபடி இந்த ரிப்பனும், ஒரு நீராவி இயந்திரத்தால் சுழற்றப் படுகிறது.

கடைசியில் அதை எடுத்துப் பார்த்தால் அதில் என்ன தெரியும். பாம்பு பூமியில் ஊர்ந்துச் சென்றால் எப்படி அநேக கோணல்கள் உண்டாகுமோ அப்படியே இந்த வரிகளிலும் அநேக கோணல்க ளிருக்கும். பூதக் கண்ணாடியைக் கொண்டு நாம் அதைப் பார்த்தோ மானால், அந்த வரிகளில் அநேகப் பள்ளங்களும் மேடுகளும் இருக்கும். கிராமபோன் ஊசி இந்த வரிகளின் மேல் ஊர்ந்து செல்வதால் தொட்டில் ஆடுவதைப்போல் இந்த ஊசி ஆடும். ஒரு செகண்டில் ஆயிரக் கணக்காக இந்த ஊசி ஆடும் பள்ளங்களிலும் மேடுகளிலும் ஊசி அழுந்தும் பொழுது உரக்கவும் மெதுவாகவும் சப்தம் கேட்கும்.

பிறகு இந்த அலுமனிய ரிப்பனை எடுத்து, அவைகளில் வரிகள் படிந்திருக்கும் இடத்தை மட்டும் விட்டு மற்ற இடங்களை வெகு ஜாக்கிரதையாக வெட்டி எடுத்துவிடப் படுகிறது. பிறகு ரிப்பனின் ஒரு நுனியை ஓரிடத்தில் ஊர்ஜிதப் படுத்திவிட்டு நத்தை ஓட்டிலுள்ள வரிகளைப்போல் ரிப்பன் சுற்றிக் கொண்டே போகப்படுகிறது. போட்டோ படங்களில் எப்படி பிரதிகள் எடுக்கப்படுகின்றனவோ அம்மாதிரியே இதிலிருந்தும் பிரதிகள் எடுக்கப் படுகின்றன.

ஆனால் தற்காலத்தில் ஒரு பிளேட் எடுக்க இவ்வளவு சிரமப்படவேண்டாம். இளமெலில் தட்டு ஒன்று செய்து அது சுழன்றுகொண் டிருக்கும் பொழுதே மின்சார சக்தியின் உதவியால் அதை இளகும்படி செய்து, மேலே சொன்னப் பிரகாரம் பாட்டுகள் எடுக்கப்படுகின்றன. தற்காலத்தில் மின்சார சக்தியைக் கொண்டு வெகு சுலபமாய் இதே வழியில் பிளேட்டுகள் எடுக்கப் படுகின்றன.

வறுமையின் கொடுமை

[திரு. மு. வே. நல்லசாமி]

நீலாமங்கலம் என்பது மதுரை ஜில்லாவைச் சேர்ந்த 150 வீடுகளுள்ள ஓர் சிற்றூர். அதில் நமசிவாயம் பிள்ளை குடும்பம் பரம்பரையாய்ச் செல்வாக்குள்ள குடும்பம். இப்பொழுது ரொம்ப ஏழ்மை நிலைக்கு வந்து விட்டது. காலத்தின் கோலம்!

கடைசியாய் அக்குடும்பத்தில் சுந்தரம் என்னும் 24 வயதுள்ள வாலிபனும், மீனாம்பாள் என்ற அவன் தங்கையுமே இருந்தார்கள். வறுமையால் வாடிய அவர்களுடைய தேகங்கள் எலும்புந் தோலும் போர்த்திய கூடுகள் போலத் தோன்றின. இரத்தப் பசையும், தசைப் பிடிப்பும் உண்டோ இல்லையோ என்ற நிலைமையி லிருந்தன.

தாய் தந்தையரும், பெரியோர்களும் அற்ற அக் குடும்பம், ஒரு காலத்தில் எவ்வளவோ மேன்மையுற்று விளங்கியது. சுந்தரத்துக்கு வயது 24 ஆகியும் அவனுடைய பந்துக்கள் அவனுக்குப் பெண் கொடுக்கவில்லை. மீனாம்பாளுக்கு வயது 18 முடிந்து விட்டது. அவளை மணப்பதற்கு அவர்கள் பந்துக்களில் யாருக்குமே விருப்பமில்லை. ஏழைக் குடும்பங்களின் கதி இதுவே!

சுந்தரம் நன்றாய்ப் படித்திருக்கிறான். ஒரு மளிகைக் கடையிலோ அல்லது புடவைக் கடையிலோ வேலைக் கமரலாம்; ஆனால் நம்பி வேலைக்கு வைத்துக் கொள்வது யார்? சொந்தத்தில் ஒரு ஓட்டுக் கடை (வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட், சோப்பு முதலியன விற்பது) வைத்துக் கொள்வதற்கும் அவனுக்குப் பணமில்லை. என்றாலும் ஒரு நாள் இரண்டு நாள் பட்டினியோடு ஏதோ உயிர் பிழைத்திருக்கும்படி, எப்படியோ சமாளித்துக்கொண் டிருந்தான்.

சுந்தரத்தின் சுற்றத்தார்கள் நீலாமங்கலத்திலும், மற்ற ஊர்களிலுமாக சுமார் 50 குடும்பத்தார்கள் இருக்கிறார்கள்; இருந்து என்ன செய்ய? வறுமையால் வாடிய ஒரு குடும்பத்தை-இரண்டு உயிர்களைத் தாங்காத சுற்றத்தார்கள் இருந்தென்ன இறந்தென்ன? தனவந்தர்களான பிரபுக்கள், ஏழைகள் எதிரே வரினும் கண்கொண்டு பார்ப்பதில்லை யன்றோ?

சுந்தரத்துக்கு எங்கும் வேலையகப்படவில்லை. மீனும்பாள் தினந்தோறும் இரவு பகல் என்ற பேதமின்றித் தன் பாட்டியின் பழைய 'ராட்டின'த்தில் நூல் நூற்றுக் கிடைக்கும் ஒன்றரையணுவில், தன் தமையனுக்கும், தனக்கும் உணவு தேடிக் கொள்ளலானுள். மிகவும் பொறுமைசாலியான அவளால் வேறு வேலை எதுவுமே செய்ய முடியவில்லை. இரத்த மற்ற அவள் மேனி என்ன வேலை செய்யக்கூடும்!

சுந்தரத்துக்குத் தன் தங்கையைப் பார்க்குந்தோறும் கண்ணீர் பெருகும். தன் பொருட்டு அவள் இராப் பகலாய்ச் செய்யும் வேலை, அவன் மனத்தை அறுத்தது. ஒரு தங்கைக்கும், தனக்கும் உணவுக்கு வழி தேடிக்கொள்ள முடியாத தான், ஒரு ஆண் பிள்ளையாய் ஏன்? இருக்க வேண்டுமென்று பல தடவைகளில் மனம் நொந்து உருகுவான்.

எந்த வேலை கிடைத்தாலும் செய்யத் தயாரா யிருந்தான். வேலை யில்லாத் திண்டாட்டத்தால் தொழிலாளர்களெல்லாம் உப்பில்லாக் கஞ்சிக்குத் தாளம் போடும் இக்கஷ்ட காலத்தில், சுந்தரத்துக்கு எங்கே வேலை அகப்படும்? வேலை அகப்படுவது குதிரைக் கொம்பாகவே யிருந்தது. அவனது மனம் ஒரு நிலையிலில்லை. பல பல எண்ணங்கள் தோன்றின. இன்னது செய்வதென அவனுக்கு விளங்கவில்லை. அனுதரவான அவனுடைய நிலை கண்டோருள்ளம் கரையும்படியா யிருந்தும், பந்துக்களின் மனசு மட்டும் இரங்குவதைக் காணும். அவன், வீதியில் வேலை ஏதேனும் கிடைக்குமா என யோசித்த வண்ணம் செல்வான். ஆனால் அவனுடைய காதுகளில், 'அஷ்ட தரித்திரம் அதோ போகிறது' என்ற சொற்கள் விழும். அவன் மனம் சபலித்து விட்டது.

சுந்தரன் இயற்கையில் நல்ல அழகு வாய்ந்தவனே. எனினும் அவனுடைய அழகெங்கே? வாலிபத்தின் பொலிவு எங்கே? நெஞ்சு வற்றி உலர்ந்து விட்டது. அவனுடைய அழகு ஏழ்மைத் திரைக்குள் மறைந்து விட்டது. கண்ணெளி தரித்திரத்தை எதிர்நோக்கச் சக்தியற்றதாய் விட்டது. ஏழ்மையின் நிலைதான் என்னே? அந்தோ துரதிர்ஷ்ட இந்தியனே!

* * *

நீலாமங்கலத்தின் தென்பாகத்தில் ஒரு கள்ளுக்கடை நீண்ட காலமாய் இருக்கிறது. காங்கிரஸ் கிளர்ச்சிக்கு முன், நாள் ஒன்றுக்கு ரூ 20 க்குக், கள் விற்பனை நடந்தது. ஆனல் இப்பொழுது 4 வருட காலமாய்க் காங்கிரஸ் தொண்டர்கள் மறியல் செய்ததிலிருந்து, நாள் ஒன்றுக்கு ரூ. 5-க்கு விற்பதுகூட ரொம்ப பிரயாசையா யிருக்கிறது.

கள்ளுக் கடை கந்தசாமி என்பவன் தேசப் பற்றற்ற ஒரு துரோகி. காங்கிரஸ் தொண்டர்கள் மறியல் செய்ய வந்தால் அவர்

களைக் கல்லா லடிப்பதற்கு அஞ்ச மாட்டான். முதல் நம்பா போக்கிரி. அவன் கடையில் வேலைக் கமர்ந்து கள் விற்றுக்கொண் டிருந்த, பாகன் என்பவன், சில மாதங்களுக்கு முன் காங்கிரஸ் தொண்டர் கருணைகான் செய்த பிரசங்கத்தைக் கேட்ட மறுநாளே வேலையை விட்டு விலகிவிட்டான். கந்தசாமி அவனுக்குச் சம்பளம் கூடக் கொடுக்கவில்லை. ஆனாலும் அதைப் பாகன் சட்டை செய்ய வில்லை. அது முதல் கந்தசாமியின் கள்ளுக்கடைக்குச் சம்பள ஆள் அகப்படாமலே இருந்து வந்தது.

கந்தசாமி ஒரு நாள் தெரு வழியாய்ப் போகும்போது, சுந்தர னைக் கண்டான். அவனைக் கண்டதும் தன்னிடம் வேலைக் கமரும் படியும், மாசம் ரூபா 10 தருவதாகவும் கந்தசாமி சொன்னான். சுந்தரனுக்கு ஒரு வித உணர்ச்சி தட்டியது. அவனுடைய மனச் சாக்ஷி போகாதே என்று தடுப்பதுபோ லிருந்தது. என்றாலும் வறு மைப் பிணி அதைக் கவனிக்காதபடி செய்துவிட்டது. அப்படியே செய்வதாகவும், அன்று மாலை வேலைக்கு வருவதாகவும் சற்று தடு மாற்றத்துடன் ஒப்புக் கொண்டான்.

சுந்தரன் தன் தங்கையிடம் தான் கள்ளுக்கடையில் வேலை பார்க்க ஒப்புக்கொண்டதைப் பற்றித் தெரிவித்தான். அதைக்



கேட்ட மீனும்பாள் திடுக்கிட்டு விட்டாள். 'அண்ணா! இதென்ன? நீங்கள் இதற்குச் சம்மதித்தீர்களா? உங்கள் சுய உணர்ச்சியுடன்தா னிருக் கிறீர்களா? அன்றி மன வெறுப்பால் இவ்வாறு சொல் கிறீர்களா?' என்று கேட்டாள். 'வாஸ்தவமே தங்காய், வேறு வழியில்லை. உயிர்மேல் விருப்ப மிருக்கிற வரையில் உனக்காக வும், என் பொருட்டும் நான் கள்ளுக் கடையிலே வேலை செய்துதா னாக வேண்டும். இதைவிட வேறு வழியில்லை' என்றான் சுந்தரம்.

மீனும்பாள் கண் கலங்கி விட்டாள். அவள் மனது நரக வேதனை யடைந்தது. 'அண்ணா தாங்கள் அந்த வேலை செய்ய வேண்டாம்! வேண்டாம்! என்னால் முடிந்தவரையில், 'ராட்டின'த் தில் நூல் நூற்று, நமது பசிப்பிணியை நீக்கிக் கொள்ளலாம். இதற்குத் தாங்கள் கவலைப்பட வேண்டாம் அண்ணா!' என்று கண்ணீர் கலங்கக் கூறினாள்.

'தங்காய்! இதனால் என்ன பிரயோஜனம்? உனக்கோ வயது 18 ஆகிவிட்டது. நீ ஒரு நல்ல கணவனுடன் வாழ முடியாதபடி செய்யும் இந்த நிலையில் நீ இருக்கலாகாது. இந்த மாதிரி எத்தனை நாளைக்கு நாம் உயிர் வாழ்வது? உன்னை இந் நிலையில் பார்க்க என் மனம் இடந் தரவில்லை. நான் கட்டாயம் கள்ளுக் கடையிலேயே வேலைக் கமர்வேன்! தங்காய் என்னைத் தடுக்காதே!' என்றான் சுந்தரம்.

'அண்ணா! தாங்கள் என் பொருட்டு யாதும் கவலை யடைய வேண்டாம். நம் இந்தியாவில் எத்தனையோ கோடி மக்கள் வறுமைப் பிணியால் வாடும்போது, நம் கவலை ஒரு பெரிதல்ல. நான் கணவனுடன் வாழவில்லை யென்று தாங்கள் ஒரு சிறிதும் கவலைப் பட வேண்டாம். இந்த 'ராட்டின'மே எனது கவலையைப் போக்கும்' என்றாள் மீனாம்பாள்.

மீனாம்பாள் மிகுதியும் தேசபக்தி யுடையவள். கள்ளுக்கடையாலும், கட்குடியாலும் எத்தனையோ குடும்பங்கள், எத்தனையோ மனிதர்கள் அழிந்து போனார்கள் என்று அடிக்கடி கேட்டும் பார்த்துமிருக்கிறாள். ஆகவே, அவள் அடைந்த வருத்தம் கொஞ்சமல்ல.

* * *

சுந்தரம் கள்ளுக்கடையில் வேலைக் கமர்ந்து மீ 4 ஆகிவிட்டது. மீனாம்பாள் மிகுதியும் விசனத்துடன் மனோ வேதனை யடைந்து கொண் டிருந்தாள். சுந்தரம் சிறிது சிறிதாய்க் குடிக்கவும் பழகிக் கொண்டான். சம்பளப் பணம் அவனுடைய கட் குடிக்கே போதாததா யிருந்தது. ஒவ்வொரு சமயம் வீட்டுக்கு வரும் வழியிலேயே தடுமாறி விழுந்து கிடப்பான். மீனாம்பாள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். சுந்தரம் மனது கெட்டுப்போய் விட்டது. சில சமயம் 'தங்கை' என்பதைக்கூட மறந்து அடித்தும் விடுவான். மீனாம்பாளால் துயரம் தாங்க முடியவில்லை.



ஒரு மாதத்துக்குப் பிறகு மீனாம்பாள் பாயும் படுக்கையுமாய் விட்டாள். சுந்தரன் ஒரு நாள் குடிவெறியில் தன் தங்கையின் ராட்டினத்தை எடுத்து ஒடித் தெறிந்து விட்டான். தன் தங்கை நோய் வாய்ப் பட்டுக் கிடப்பதைக் கண்டதே அவனுக்குச் சற்று மனம் இளகியது. அன்று காலையில் சிறிது மனக் கசப்புடன் வேலையை விட்டு விடுவதாய் யோஜித்துக்கொண்டு போனான்.

கள்ளுக் கடைக்யை சமீபித்தவுடன் கள் வாசனை அவன் மூக்கில் தட்டியது. தன் தங்கையின் நிலைமையை மறந்தான். அன்று கள்ளுக் கடையில் வேலை பார்த்துவிட்டு இரவு வீடு திரும்பும் பொழுது களை தீர பசி யடங்க கள்ளை வேண்டுமட்டும் குடித்தான். வீட்டுக்கு வரும் வழியில் எங்கோ தள்ளாடி சாய்ந்தான். வீதியில் இருந்த கல்லில் மண்டை யடிபட்டு குற்றுயிராய் விழுந்துவிட்டான்.

மீனும்பாள் அன்றிரவு மிக்க கடுமையான சுரத்தாலும் ஜன்னியாலும் பிதற்றினுள். அவள் அருகில் ஒருவருமில்லை. வீட்டில் தீபமும் ஏற்றப்படவில்லை. சுமார் இரவு ஒரு மணிக்கு, இம் மண்ணுலகையும், வறுமைப் பிணியையும், சகோதரனையும் விட்டுப் பிரிந்தாள்.

வீதியில் குற்றுயிராய்க் கிடந்த சுந்தரம் விடிந்தவுடன் எல்லோர் கண்களுக்கும் காக்ஷி யளித்தான். அவனை ஜனங்கள் தூக்கி அவன்



வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள். வீட்டிற்குள் ஜனங்கள் சென்றதே யாருமற்ற அனாதையாய் மீனும்பாள் இறந்து கிடக்கக் கண்டார்கள். குற்றுயிரா யிருந்த சுந்தரத்துக்கும் எதோ அவன் உள் மனத்தில் தெரிந்திருக்கக் கூடுமோ என்னவோ! அவன் ஒரு விதப் பேச்சும் பேசவில்லை. காலை சுமார் 9 மணிக்குத் தன் தங்கையைத் தேடிக்கொண்டு அவனுடைய ஆவியும் நீங்கிவிட்டது. அவனுடைய பந்துக்கள் மனத்திலும் கொஞ்சம் இரக்கம் தட்டிற்று. தமையனும் தங்கையும் மயானத்தில் புதைக்கப் பட்டார்கள். வறுமைப் பிணியே! செல்வச் சீமான்களே! உங்களின் சோதனை இம்மட்டோ?

ஜப்பான் செய்திகள்

ஓர் சம்பாஷணை

சுமார் 15 ஆண்டுகளாக ஜப்பானிலிருந்து இவ்வாரம் சென்னைக்கு வந்த ஒரு வியாபாரியிடம் செய்த சம்பாஷணையின் விவரங்கள்:—

கே:—ஜப்பானில் சாவி கொடுத்து ஓட்டும் மோட்டார் இருக்கிறதாமே?

வி:—இல்லை. இது கட்டுக் கதை. இக் கதையானது இந்தியா முழுமையும் பரவியிருப்பது ஆச்சரியமே.

கே:—அவ்விடம் பெட்ரோல் விலை என்ன?

வி:—பெட்ரோல் காலன் ஒன்று 9 பைக்கு விற்கப்படுகின்றது. ஆதலால் 10 மைல் மோட்டாரில் போகக் கட்டணம் 0-4-0 வாங்கப் படுகின்றது. தவிர ஆகாய விமான யாத்திரையும் மலிவாக இருக்கிறது. மஞ்சூரியாவில் எண்ணெய்க் கிணறுகள் கிடைத்திருக்கின்றன. தவிர ரஷியாவில் பெட்ரோலை முக்கால் அணுவுக்குக் காலன் ஒன்றாக வாங்கி அதே விலைக்கு ஜப்பானில் விற்கப்படுகிறதால் ஜனங்களுக்குப் பல சௌகரியங்கள் கிடைத்திருக்கின்றன. மஞ்சூரியாவில் எண்ணெயும், நிலக்கரியும், பொன்னும் ஏராளமாய்க் கிடைப்பதால் ஜப்பானியர் அதைக் கைப்பற்றி ஆதிக்கம் கொள்ள யுக்தி செய்து தமக்கு வேண்டிய ஒரு சீன அரசனை அங்கு நியமித்து அது சீனாச்சியம் போல பிற அரசுகளுக்குக் காட்டித் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கின்றனர்.

கே:—ஜப்பானில் நெல் உற்பத்தி எப்படி? எந்த நாட்டிற்காவது அரிசி அனுப்பப்படுகின்றதா?

வி:—ஜப்பானில் நெல் உற்பத்தி அதிகம். வருடம் ஒன்றுக்கு 3 போகம் விளைகின்றது. மல எருவே அங்கே போடப்படுகின்றது. அதனால் விளைவு அதிகம். மலத்திற்கு அங்கு அதிக மதிப்பு. ஜப்பானியர்களுக்கு இப்போது வைத்திருக்கும் இருப்பு நெல் 10 வருஷத்திற்குப் போதுமானது. மிகுதிப்படும் நெல்லை அரிசியாக்கி சையாமில் கொண்டுவந்து சேர்த்து பிறகு சையாமிலிருந்து ஏற்றுமதி செய்யப் படுவதாகப் பாவனை காட்டி இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றது.

(தொடரும்)

அழகன்

[த. நீ. கி]

அழகனுக்கு என்ன குறை? தனது தந்தை காலையில் வயலுக்குச் செல்லும்பொழுது தானும் கூடச் செல்லுவான். அவர் வயலை உழும் சமயத்தில் பக்கத்திலுள்ள வனத்தில் புற்றரையின் மீது படுத்துக்கொண்டு, மரங்களில் விளையாடும் அணில்களையும், புஷ்பங்களில் கூடும் தேனீக்களையும் பார்த்துக் கொண்டு, பறவைகளின் இனிய கானத்தையும் கேட்டுக்கொண் டிருப்பான். சூரியன் உச்சியை யடையும்பொழுது, வீட்டுக்குச் சென்று கஞ்சியைக் குடித்துவிட்டு, தனது தகப்பனாருக்கும் கஞ்சியைக் கொண்டுவந்து கொடுப்பான். பிறகு, வயலுக்குப் பக்கத்திலுள்ள கறிகாய்த் தோட்டத்தில் ஜலம் பாய்ச்சுவதும் நிலத்தைக் கொத்துவதுமாக யிருப்பான். தன் தந்தை வயலிலிருந்து திரும்பி வரும் நேரத்தில், வீட்டுக்குச் சில கனிகளையும், இளநீர்க் காய்களையும் எடுத்துக்கொண்டு செல்வான். இவைகளைக் கண்டு திருப்தி யடைந்த அவன் தகப்பனார், தம் மகனைப் போன்றவர்கள் 'உலகத்தில் அதிகம் இருக்கமாட்டார்கள்' என்று பெருமையுடன் சொல்லுவார். உண்மையில், எனக்கு அவன்மேல் பொறாமைதான்.

அவனுக்குப் படிக்கத் தெரியாது; எழுதவும் தெரியாது. அதனால் என்ன குறை?—தூய இருதயமும், அன்பும் அவனிட மிருக்கையில்? அசம்பாவிதமாக, அவன் தந்தை சென்ற மாதம் இறந்து விட்டார். அதிலிருந்து அவனுக்கு மன நிம்மதியே யில்லை. அவனுக்கு வயது பத்தொன்பதுதான் ஆகிறது. ஆனால் அவன் ஒரே பிள்ளை யாதலால் வயலை அவனே உழவேண்டியதாயிற்று. தோட்டத்தையும் அவனே பார்த்துக்கொள்ள வேண்டும். நிலம் சொந்தமானதனால் அவன் பிறரிடம் கைகளைக்கட்டிக்கொண்டு நிற்க வேண்டியதில்லை. இதைப்பற்றிச் சில சமயம் அவன் என்னிடம், 'ஐயா! இது எனது சொந்த நிலம். என் உழைப்பினால் நான் மகிழ்ச்சி யடைகிறேன். ஏனென்றால் ஒரு பொழுதும் நான் சோம்பலா யிருந்ததில்லை. ஆனால் 'என்னைக் கண்ணாக மதித்துவந்த எனது தகப்பனார் இறந்ததினால் என் இருதயம், அவரை நினைக்கும் பொழுதெல்லாம் வேகமாக அடித்துக்கொள்கிறது' என்று சொல்லுவான். நானும் பெரிய வேதாந்திபோல், 'அப்பா!

இது மனுஷ்ய சரீரம். இது உலகத்தில் வந்ததுமுதல், அதன் அந்திய அழிவை நோக்கிக் காலத்தையும் சட்டை செய்யாமல் வெகு வேகமாகத் திருடனைப்போல் ஓட்டம் பிடிக்கிறது; இவ்வாத்மாவுக்கு அழிவு கிடையாது, நிரந்தரமானது. ஆகையினால், ஏன் உன் தந்தையைப் பற்றிக் கவலைப்படுகிறாய்? அவருக்கு நல்ல கதி கொடுக்கும்படி ஆண்டவனை வேண்டு!' என்பேன். அவனும் தலையை யாட்டிக்கொண்டே தேறுதலை யடைவான்.

ஒரு நாள், அவன் என் வீட்டுக்கு வந்து என்னைக் கூப்பிட்டான். என்ன சமாசாரம் என்று விசாரித்தேன். தன் கையில் தம்பிடிகூட இல்லை யென்றும், நிலவரி அதிகமாய் விட்டதனால் அதைச் செலுத்துவதற்குத் தன்னுடைய வயலையே விற்றுவிட்டதாகவும் சொன்னான். உடனே, நான் அவனுக்கு ரொக்கமாகக் கையில் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கிறேன்; அதைக் கொண்டு வயலை வாங்கிவிடலாம்; எனக்கு வட்டி அவசியமில்லை' என்று கூறினேன். ஆனால், அவன் 'அது! பிச்சைக்காரத்தனம். என் வயலை விற்றுவிட்டதனால் நான் ஒருவரிடமும் கடன் கேட்க வேண்டாம் என்றுதான் செய்தேன். இப்பொழுது உம்மிடம் நான் கடன் வாங்கினால் கடன் கொடுக்க வேண்டுமே' என்ற கவலையினால் ஒரு பொழுதும் மனம் நிம்மதியா யிருக்காது. எனக்கு ஒரு தோட்டமும் வீடும் இருக்கின்றன. அவை போதும். காய்கறிகளை விற்றால் அதன் மூலமாக வாழ்க்கையை நடத்தலாம். மேலும், என் மனைவி இப்பொழுது நூல் நூற்கிறாள். அதற்காக, எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் தச்சன் இலவசமாக ஒரு ராட்டினம் செய்து கொடுத்திருக்கிறான்? இதுபோராதா?' என்றான். 'நான் என்ன சொல்லுவது' என்று திகைத்தேன்; அவனுடைய வாழ்க்கையின் பணிவைக் கண்டு ஆச்சரிய மடைந்தேன்.

அதற்குப் பிறகு, இரு வாரங்களாக அவனை என்னால் பார்க்க முடியவில்லை. நான் அவனுடைய வீட்டுக்குச் சென்றேன். வாசலில் அவன் உட்கார்ந்திருந்தான். அவன் தேகத்தில் அசௌக்கியக் குறிகள் காணப்பட்டன.

'என்ன உடம்பு?' என்று கேட்டேன்.

'இரண்டு வாரமாக ஜுரம்; இப்பொழுது தேவலை. வைத்தியனைப் பார்க்கும்படி என் மனைவியும் தாயாரும் வற்புறுத்தினர்கள். 'ஒன்றும் வேண்டாம். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். வீட்டு முதல் அறையின் எல்லாக் கதவுகளையும் திறந்து விடுங்கள். நான் அங்கே படுத்துக்கொள்ளுகிறேன்; பசி யேற்பட்டால் கொஞ்சம் பாலும் கஞ்சியும் கொடுங்கள்' என்றேன். அவர்களும் ஒப்புக்கொண்

டார்கள். அதனால்தான் இப்பொழுது உடம்பு குணமடைந்து வருகிறது. இன்று வேலைக்குப் போகப்போகிறேன்' என்றான்.

'உனக்கு இப்பொழுது பணக் கஷ்டம் ஒன்றுமில்லையே?' என்று விசாரித்தேன்.

அவன் பேசுவதாகவே எனக்குத் தோன்றவில்லை. சாந்தமும், தியாகமும், பணிவும் மனித உருவெடுத்துப் பேசுவதுபோ லிருந்தது.

'என்ன பணக் கஷ்டம்? தோட்டத்தை வேண்டுமானால் சர்க்



கார் வரிபோட்டு எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் அதோ பாலை எடுத்துக்கொண்டு வரும் என் மனைவியின் இருதயத்தில் ததும்பும் அன்பையும், காதலையும் வரி போட்டுத் தடுக்க முடியுமா? பூமியில் அவள் தான் எனக்குச் செல்வம். நான் அவள் ஆஸ்தி. எங்கள் மனது ஒன்று யிருக்கும் வரையில் எங்களுக்குக் குறைவு கிடையாது. என் னுடைய மனைவி சுற்றும் ராட்டையின் இன்ப கீதம் என்னுடைய காதில் விழும்வரையில் எனக்கு ஒரு குறைவும் இல்லை' என்று மொழிந்தான்.

வீடு திரும்பும் பொழுது, அந்தி ஒளி மழுங்கி யிருந்தது; ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்கள் பிரகாசித்துக்கொண் டிருந்தன. ஆனால், அவைகளில் சில நக்ஷத்திரங்களே மிகவும் சோபையுடன் விளங்கின.

மேனாடும் கீழ்நாடும்

[திரு. தாரகநாத் தாஸ்]

'தேகத்தில் ஓர் அங்கம் நோயடைந்து விட்டால் மற்றெல்லாக் கூறுகளும் எப்படி வேலை செய்ய முடியாமல் தடைப்பட்டு நிற்கின்றனவோ அப்படியே, ஒரு சமூகத்தார் மட்டும் பிற்போக் கடைந்தவர்களா யிருப்பின், உலக முழுவதும் பின்னடைந்தே நிற்கிறது.' இஃதோர் சீனப் பழமொழி. ஒரு தேசத்து ஜனங்கள் வறுமை நிலையில் வருந்திக்கொண் டிருக்கும்போது அதனால் பிற நாட்டு ஜனங்கள் சாதக மடையக் கூடும் என்ற எண்ணம் தவறென்று பொருளாதார நிபுணர்கள் இதனாலேயே கூறுகின்றனர். ஏனெனில், இந்த வறுமை தேசத்தின் செல்வாக்கானது, செழுமையான தேசங்களின் மீதும் பரந்து அவைகளைப் பாதிக்கக் கூடும். நாகரிகத்தில் மிக உயர்ந்துள்ள ஒரு தேசத்தின்மீதும், காட்டுமிராண்டு ஜாதியார் திடீரென்று படையெடுத்து நசுக்கி விடுகின்றனர். பரஸ்பரம் ஏற்பட்டிருக்கும் பகைமை எண்ணத்தினால், நாகரிக நாடுகள்கூட தற்போது நசுங்கிவிடக் கூடிய நிலையில் இல்லையா? இதற்கு மூல காரணங்களா யுள்ள மத, சமூக, பொருளாதார, அரசியல் சச்சரவுகளை நீக்கிவிட நாம் முயற்சி செய்ய வேண்டாமா? முக்கியமாக இப்பொழுது மேனாடும் கீழ்நாடும் கையோடு கை பிணைத்து நிற்க வேண்டிய காலம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விரண்டும் பிணங்கி நிற்பதன் காரணங்களையும், இவைகளைப் பரிகரிக்கும் விதத்தையும் சிறிது சுருக்கமாகக் கூறுவோம்.

*　　　　*　　　　*

முதலில் மேனாட்டார், தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும். இந்த எண்ணம் மேனாட்டு ஜனங்களிடத்தில் பரவியதற்குத் தற்கால சரித்திர ஆசிரியர்களே காரணம். எகிப்து, அரேபியா, பர்ஷியா, இந்தியா, சைனா முதலிய நாட்டு ஜனங்கள் எவ்விதத்திலும் நாகரிகத்தில் மேனாட்டாரைவிடக் குறைந்தவர்க ளல்லரென்றும் இவர்கள் மனித சமூக முன்னேற்றத்திற்கு அதிக உதவி செய்திருக்கிறார்க ளென்றும் சில சரித்திர ஆசிரியர்கள் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள் என்ப துண்மை. ஆயினும், எல்லா விதமான தீச்செயல்களையும் புரிந்த மேனாட்டாரை, சிறந்த வீரர்களென்றும் 'ஏகாதிபத்தியத்தை நிர்மாணஞ் செய்தவர்கள்' என்றும் புகழ்வதில் சில மேனாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் பின் வாங்குவதில்லை. உண்மையான சரித்திர சம்பவங்களென்று சில விஷயங்கள் மேனாட்டுப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படுகின்றன. கீழ்நாட்டில் சுயேச்சாதிகாரமே அதிகமாக இருந்து வந்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இந்தச் சுயேச்

சாதிகாரம் கீழ்நாட்டுக்கு மட்டுந்தான் உண்டானதா? மேனாடுகளிலும் இந்த அதிகாரம் நிகழ்ந்து வந்ததென்பது சரித்திர உண்மை. மற்றும், மேனாட்டார் சமாதானப் பிரியர் என்றும், சட்ட வரம்புக்குட்பட்டு நடப்பவர் என்றும், ஆனால் கீழ்நாட்டாரோ நன்றி கெட்டவர்களென்றும், இரத்த வெறி கொண்டவர்களென்றும் போதிக்கப்படுகின்றன. கீழ்நாட்டைப்பற்றி மேனாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் பொதுப் படையாகவே குறிப்பிட்டுக் கொண்டு செல்கிறார்கள். 19 அல்லது 20-வது நூற்றாண்டு மேனாட்டுடன், 15 அல்லது 16-வது நூற்றாண்டுக் கீழ்நாட்டை ஒப்பிட்டுக் காட்டுகிறார்கள். உண்மையை நாம் ஆராயவேண்டுமெனின், குறிப்பிட்ட ஒரு ஜனத்தொகையைக் கொண்ட ஒரு பிரதேசத்தில் எத்தனை யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன வென்று நாம் கணக்கிட்டுப் பார்த்தால், மேனாட்டாரே அதிக யுத்தங்கள் புரிந்திருக்கின்றனர் என்றும், உலகத்திலுள்ள மற்றெல்லாச் சமூகத்தினரையும் விட அவரே பொருளுக்கும் உயிருக்கும் அதிக சேதத்தை விளைவித்து வந்திருக்கின்றனர் என்றும் நன்கு தெரிந்து கொள்ளலாம். இந்திய சரித்திரத்தையும் ஐரோப்பிய சரித்திரத்தையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ருஷ்யாவைத் தவிர்த்த ஐரோப்பா அளவு இந்தியா பெரியது. இத்தகைய இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட, ஹிந்து - முஸ்லிம் மன்னர்கள் ஆண்ட காலத்தில் அதிக அமைதியாக இருந்ததென்று கூறலாம். கீழ் நாட்டாருக்குச் சுயஆட்சி போதனை செய்விக்க வேண்டுமென்று காரணங் கூறி, தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள மேனாட்டார் முயல்கின்றனர். ஆனால் உண்மையாகப் பார்க்கப் போனால், மேனாட்டில் சுய ஆட்சி முறை தொடங்கப்படுவதற்கு நெடுங்கால முன்னர் இருந்தே கீழ்நாட்டில் இந்த முறை இருந்து வந்தது. சீன சரித்திரத்தையும் இந்தியா தேச சரித்திரத்தையும் எடுத்துப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும்.

* * *

மேனாட்டார், கீழ்நாட்டாரை விட உயர்ந்தவரா யிருந்தா லல்லது, பின்னவரை முன்னவர் ஜெயித்திருக்க முடியாதென்று ஒரு சமாதானம் கூறப்படுகிறது. ஒரு தேசத்தார், மற்றொரு தேசத்தை வெற்றி கொண்டு விடுவதனாலேயே, அவர் உயர்ந்தவர் என்று சொல்லிவிட முடியாது. ரோமர்கள் கிரேக்கர்களை ஜெயித்தார்கள். இதனால் கிரேக்கர்கள் தாழ்ந்தவர்கள் என்று யாரேனும் கூறத் துணிவரா? ரோமர்கள், சில காட்டுமிராண்டு ஜாதியினரால் நசுக்கப்பட்டார்கள். இதனால் ரோமர்களுடைய நாகரிகம் தாழ்ந்ததென்று கூறிவிடுவதா? சீனர்களைத் தார்த்தாரியர்கள் வெற்றிகொண்டார்கள். இதனால் தார்த்தாரியர்களை உயர்ந்தவர்களென்று சொல்லி விடுவதா? பல நூற்றாண்டுகள் வரை, துருக்கியர்கள், மேனாட்டு ஜனங்களிற் பெரும்பாலோரை ஆண்டு கொண்டு வந்தார்கள். இதனாலேயே துருக்கியர் அறிவிற் சிறந்தவர் என்று கூறி விடுவதா? தேசங்கள், வாழ்ந்த காலமும் உண்டு; வீழ்ந்த காலமும் உண்டு. இந்த ஏற்ற இறக்கங்களில், மேனாடு கீழ்நாட்டை ஆதிக்கங் கொண்டதும் ஒன்றாகும். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே, அரசியல் சம்பந்தமாகக் கீழ்நாடு தனது உரிமையை நிர்ணயித்துக் கொள்ள முனைந்திருக்கிறது. மீண்டும் அது தனது சுதந்திரத்தை எப்பொழுது அடையும் என்பது காலத்தைப் பொறுத்திருக்கிறது. இஃது

அடையப்படும்வரை, மேனுட்டாரிடை பரவியுள்ள, 'தாங்கள் உயர்ந்தவர்' என்ற எண்ணம் நீங்காது.

* * *

கிறிஸ்தவ மதம் ஒன்றுதான் மனிதனுக்கு உய்வளிக்கக் கூடிய மதம் என்று பல நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவப் பாதிரிமார் போதனை செய்து வந்திருக்கின்றனர். கீழ் நாட்டாரிற் பெரும்பாலோர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவர்க ளல்லவாகையால் இவர்கள் கேவலமாகக் கருதப்படுகிறார்கள். இந்த எண்ணம் பரவி யிருக்கிறவரை, மேனுட்டாருக்கும் கீழ் நாட்டாருக்கும் உண்மையில் சிநேக பாவம் ஏற்படாது. கிறிஸ்தவ மதம் கீழ் நாட்டி லிருந்தே உற்பத்தியாயிற்று. இந்த உயரிய மதத்தின் உண்மையான தத்துவங்களை மேனுட்டார் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். தவிர, பிற மதங்களில் பிறங்கும் உண்மைகளையும் மேனுட்டார் அறிந்து பாராட்ட வேண்டும். சர்வ தேச அரசியல் விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் மேனுட்டார் அநுசரிக்கும் ஒழுக்க முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். முக்கியமாக மேனுட்டுக் கல்வி முறையை மாற்ற வேண்டும்.

* * *

கீழ் நாடுகளில் தங்களுக்கு விசேஷ உரிமைகள் வேண்டுமென்றும், வியாபாரம் முதலிய விஷயத்தில் பாதுகாப்புகளும் வேண்டுமென்று மேனுட்டார் கேட்கின்றனர். ஆனால் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளி லிருந்து கீழ் நாட்டார் விரட்டி யடிக்கப்படுகின்றனர். கீழ் நாட்டார் குடியேறவே கூடாதென்று ஆஸ்திரேலியாவினின்று தடுக்கப்படுகின்றனர். அரசியல், பொருளாதார காரணங்களுக்காக, வட அமெரிக்காவி லிருந்து கீழ் நாட்டார் தடுக்கப் படுகின்றனர். தென் னமெரிக்கா பிரதேசங்கள் சிலவற்றிலும் இந்த வேற்றுமை பாராட்டப்படுகிறது. ஆப்பிரிக்காவிலும் இதே மாதிரி நடைபெறுகிறது. இந்தியர்களின் உழைப்பினாலேயே செழுமையாக்கப்பட்ட தென்னாப்பிரிக்கா, கிழக்காப்பிரிக்கா ஆகிய இப்பிரதேசங்களினின்று இப்பொழுது இந்தியர்கள் விலக்கப்படுகிறார்கள். ஒரு நாட்டார் மற்றொரு நாட்டார் மீது ஆதிக்கங்கொண்டு, அவர் பொருளைக் கவர்வதென்ற முறை எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதே பரஸ்பர ஒத்துழைப்பு என்பதும் போய் விடுகிறது. இந்த முறை மாற்றப்பட்டால்தான் மேனுட்டாரும் கீழ் நாட்டாரும் ஒற்றுமையுடன் வாழ முடியும்.

* * *

எடித்காவல் என்ற தாதி பெல்ஜியர்களுக்குத் துணை செய்யப்பட்ட போது, பெல்ஜியர்களின் விடுதலைக்காகக் கார்டினல் மெர்சியர் ஆதரவளித்த போது, ருஷ்யாவிலுள்ள ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாக டால்ஸ்டாய், தமது கண்டனத்தைச் செய்தபோது, இவர்களுடைய முயற்சிகளை, மேனுட்டுக் கிறிஸ்தவர்கள் வியந்து பாராட்டினார்கள். ஆனால். அமிருத சரஸ் படுகொலையைப்பற்றி, எந்தக் கிறிஸ்தவ சங்கங்களும் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. மகாத்மா காந்தி சிறை வைக்கப்பட்டபோது எவரும் கண்டனம் செய்யவில்லை. சமீபத்தில் சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றிய 65,000

பேர்கள் சிறைபிலடைக்கப்பட்டார்கள். பல ஸ்திரீகள் கொடுமைகளுக்குட் படுத்தப் பட்டார்கள். இவைகளைக் கண்டித்து எவரும் கூறினாரில்லை. இந்திய உரிமைப் போராட்டத்திற்கு ஆதர வளித்த ரெவரெண்டு கெய்தான் என்ற ஓர் அமெரிக்கப் பாதிரி, தமது மிஷனினின்றும் வெளியேற்றப்பட்டார். இவர், இந்தியர்கள் கதர் தரிக்க வேண்டுமென்று கூறினர்; காந்தியடிகளின் நண்பரான ஸ்ரீமான் ரெய்னல்ட்ஸ் என்ற ஓர் ஆங்கிலேயரைத் தமது வாச ஸ்தலத்தில் ஓரிரவு விருந்தினராக வைத்துக் கொண்டிருந்தார். இவை காரணமாக, இவர், இந்தியாவினின்று வெளியேறும்படி கூறப்பட்டார்.

* * *

சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னர் துருக்கிய ராட்சியினின்று விலகிக் கொள்ள, பிரித்தானியர்கள் கிரேக்கர்களுக்கு உதவி புரிந்தார்கள். ஸ்பானிஷ் ஆட்சியை ஒழிக்க, க்யூபர்களுக்கு அமெரிக்கர் உதவி செய்தனர். ஐரோப்பிய யுத்தத்தின் போது, துருக்கியருக்கு விரோதமாக அராபியர் கிளப்பி விடப்பட்டனர். போலந்து, ஐர்லாந்து முதலியவைகள் சுதந்திரம் பெறுவதற்கு அமெரிக்கர் ஆதரவு செய்தனர். ஆனல் இந்தியா சுதந்திரம் அடைய முயற்சி செய்துகொண் டிருக்கும்போது, மேனுட்டாரிடமிருந்து அதிகமான ஆதரவு கிடைப்பதில்லை! மேனுட்டு இராஜ தந்திரிகள் பலர் உலக சமாதானத்தைப்பற்றிப் பேசுகின்றனர்; யுத்தம் வேண்டாமென்று வெறுக் கின்றனர். ஆனல் இவர்கள் நிராயுதபாணிகளான ஜனங்களின்மீது ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் பொழியப்படுவதை ஆதரிக்கிறார்கள். இந்தச் சம்பவங்களைப் பற்றி, உலகத்தில் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காக ஏற்பட்டிருக்கும் சர்வதேச சங்கத்தார் வாதம் செய்வதுகூட இல்லை.

* * *

மேனுட்டார் எப்பொழுதும் போராட்டத்திலேயே முனைந்து நிற்பதனல் அவருக்கு வாழ்க்கையில் எவ்வித இலட்சியமும் இல்லையென்று கீழ்நாட்டு அறிஞரிற் சிலர் நினைக்கின்றனர். கீழ் நாட்டார் மிகுந்த அடக்கமுடையவர் களா யிருத்தலினல், கீழ்நாட்டு நாகரிகம் பயனுடைத்தல்ல வென்றும் அவரைச் சீர்திருத்த வேண்டுவது தமது கடமையே யென்றும் மேனுட்டார் கருதுகின்றனர். இரண்டு கொள்கைகளும் ஒருவாறு தவறென்றே கூற வேண்டும். கீழ்நாட்டார், மேனுட்டாரிடமிருந்து சாஸ்திரீய முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். மேனுட்டாரும் கீழ்நாட்டாரிடமிருந்து பல கலைஞானப் பயிற்சிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். கீழ்நாட்டார் குறுகிய நோக்கமுள்ளவர் என்று தவருகக் கருதப்பட்டு வந்தது. அஃதவ்வா றில்லை என்பது இப்பொழுது நன்கு புலனுகிக் கொண்டு வருகிறது. முக்கியமாகச் சென்ற ஐம்பது ஆண்டுகளில் அதிக மாறுதல் ஏற்பட்டு வந்திருக்கிறது. கீழ் நாட்டிலுள்ள இலட்சக் கணக்கான பேர், இப்பொழுது மேனுட்டுக் கலை ஞானப் பயிற்சியில் தேர்ச்சி யடைந்து கொண்டு வந்திருக்கின்றனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்திய பாகத்தி லிருந்து, ஒரு சாரார், தங்க ளுடைய ஸ்தாபனங்களில் மேனுட்டு முறைகளைப் புகுத்திப் பயனடைந்து வந்திருக்கின்றனர். ஓர் உண்மையை நாம் அனைவரும் அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். என்ன வெனின், மேனுட்டு வாழ்க்கை முறைதான் சிறந்ததென்று கீழ்நாட்டு இராஜதந்திரிகள் எப்பொழுதும் ஏற்றுக்கொண்டதில்லை என்பதே

யாகும். ஆனல் மேனட்டு அரசியல் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. மற்றும் தங்களுடைய தேசீயப் பாதுகாப்புக்காக அவசியமானவைகளையே அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதற்காக, தங்களுடைய கல்விமுறை, வாழ்க்கை முதலியவைகளையும் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மற்றும் மேனட்டாரின் சில முறைகளைப் பின் பற்ற வேண்டுமென்ற தீவிரமான எண்ணம் கீழ் நாட்டாரிடை நன்கு பரவி யிருக்கிறது. கீழ் நாட்டாரும் மேனட்டாரும் பரஸ்பரம் ஒற்றுமையுடன் வாழ வேண்டு மென்பதே எனது பெரும் விருப்பம். இந்த ஒற்றுமையை வளர்க்க அனைவரும் பாடுபட வேண்டும்.

—'ஓர்ல்ட் யூனிடி மாகசீன்'

ஒருவர் ஒரு ரிக்ஷா வண்டியில் சென்றுகொண் டிருந்தார். ரிக்ஷா இழுப்பவனைப் பார்த்து 10 நிமிஷத்துக்குள் போகக்கூடிய இடத்துக்கு ஒரு மணி ஆகியும் போய்ச் சேரவில்லையே.

ரிக்ஷாகாரன்:—கோபிக்காதேயுங்கள். தாங்கள் இந்த ஊர் என்று எனக்குத் தெரியாது.

—ஜி. சுப்பையராஜு

வீட்டில் கிட்டுவும் அவனது பாட்டியுந்தான் இருந்தார்கள்.

பாட்டி:—அடே, நான் ஒருத்திதான் இருக்கிறே னென்று என்னைச் சட்டை செய்கிருயா?

கிட்டு:—பாட்டி! நீ என்ன துணியா நான் உன்னைச் சட்டை செய்வதற்கு?

—ஏ. ராமகோவிந்தன்

தந்தை:—நீ யாரை அம்மா கல்யாணம் செய்துகொள்ளப் போகிருய்?

மகள்:—உலக அனுபவம் உள்ளவரை.

தந்தை:—ஓ! கிழவனையா! —மே. ஜானகிராமன்

தடுக்கி விழுந்ததும் காதல்

[திரு. வி. சுப்பையா]

19 MAR 1934
MADRAS

அன்று நடந்துகொண்டிருந்த மாரியம்மன் பண்டிகையில் முழுக் கவனத்தையும் செலுத்தி அம்மனுக்குத் தொண்டு செய்தவர்களில் பாவாயிதான் முதன்மையாக விளங்கினாள். பாவாயி அப்புறமும் இப்புறமும் சென்றபொழுதெல்லாம் கோவிலின் திண்ணையின் மீது உட்கார்ந்திருந்த வெள்ளையனது உயிரும் அவளுடன் போவதும் வருவதுமாக ஊசலாடியது. மாரியம்மன் விழாவின் புதுப்புடவையும் குங்குமப் பொட்டும் அன்று பாவாயியை அதிக அழகு செய்வதாக வெள்ளையன் எண்ணினான். வெள்ளையன் பாவாயியைச் சிறிது நேரமாக ஒரு விதமாகப் பார்த்து வந்தான்.

அப்பொழுது ஏதோ எடுத்துச் செல்வதன் பொருட்டு கோவிலின் உட்பிரகாரத்தை விட்டு வெளிவந்த பாவாயி வாயிற்படி தடுக்கிக் கீழே விழுந்தாள்—இல்லை விழப்போனாள். அதற்குள் திண்ணையின் மீது உட்கார்ந்திருந்த வெள்ளையன் அவளை விழாமல் பிடித்துக் கொண்டு விட்டான். பாவாயி சிரித்துக் கொண்டு வெள்ளையனின் பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு ஒரு பக்கம் நாணிக்கோணி ஒதுங்கினாள்.

‘என் அதிக காயம் பட்டதோ?’ என்றான் வெள்ளையன். ‘இல்லை. நீங்கள் பிடித்துக் கொண்டிருக்கா விட்டால் உண்மையில் அக் கல்பட்டு என் மண்டை

உடைந்துபோயிருக்கும்' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் பாவாயி. 22 வயது வாலிபனான வெள்ளையன் 16 வயதுப் பெண்ணான பாவாயியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். பாவாயி வெள்ளையனைப் பார்த்தாள். இருவருக்கும் காதல் ஏற்பட்டது—கண்டதும் காதல் அல்ல. தடுக்கி விழுந்ததும் காதல்.

பாவாயி அப்பக்கம் வந்தது தற்செயலாகவா? அல்லது வேண்டும் என்றுதானா? என்னும் ஆராய்ச்சியை வாசகர்களே செய்து கொள்வார்களாக.

* * *

'நாம் இருவரும் ஒன்று சேர்ந்து பேசிக்கொண்டிருப்பதை உனது தந்தையாவது எனது தந்தையாராவது கண்டால் பின்னால் என்ன நடக்கும்?' என்று பாவாயியை நோக்கி வெள்ளையன் கேட்டான். வயலைக் காப்பதில் பாதி கவனத்தைச் செலுத்தி இருந்த பாவாயி 'என்ன நடக்கும்! ஆறிப்போயிருக்கும் பகை மறுபடியும் கிளர்ந்தெழுந்து இரு திறத்தாருக்கும் சண்டைதான்' என்று கூறி ஒரு கவண் கல்லால் வயலில் இருந்த நெற்கதிரை உண்ண வந்த குருவிகளை ஓட்டிவிட்டு மறுபடியும் 'இத்தனை நாட்கள் நடந்த சண்டை வாய்ச் சண்டை. இனி நடப்பது கைச் சண்டை. முன்னுக்குப் பின் வித்தியாயம் வாயும் கையுந்தான்' என்றாள். 'இருவரும் ஏன் சமாதானமாகிவிடக் கூடாது? அப்பா எவ்வளவோ பணிந்து கொடுக்கிறார். உன் தந்தை மாத்திரம் ஏன் இப்படி விரைப்பாக நடந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் இத்தனை நாட்களாகக் கோர்ட்டுச் செலவு 5000 ரூபாய் வரைக்கும் ஆகியிருக்கலாம். பக்கம் பக்கமாக உள்ள இருவர் இப்படி சண்டை பிடித்துக்கொண்டிருந்தால் மிகவும் அழகாக இருக்கிறதல்லவா?' என்று வெள்ளையன் மறுபடியும் கேள்விகேட்டு தனது எண்ணங்களை ஒருங்கே குவித்தான். பாவாயி சலிப்புத்தோன்றி, 'பழைய விஷயத்தைக் கிளறுவதில் என்ன பிரயோசனம். இனிமேல் ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்கலாம். உமது அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னீர்களா? அவர்தான் பணிந்து கொடுக்கிறவர் ஆச்சே. நேற்று என்ன நடந்தது சொல்லுங்கள்' என்று பாவாயி வேறொரு கேள்வி பிறப்பித்தாள்.

'நேற்று? இனி நான் எங்கள் அப்பா வீட்டிற்குப் போக முடியாது. இவ்விஷயத்தைச் சொன்னேன். அவருக்கு அதிக கோபம் வந்து விட்டது. பெற்றவன் பேரை எடுக்கப் பிறந்த பிள்ளை நானல்லவாம். 5000 ரூபாய் செலவு செய்து அவர் மனம் இப்பொழுது உடைந்துபோயிருக்கிறது. என்னை இனி இவ்வெண்ணத்துடன் வீட்டிற்குள் கால்கூட வைக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார்....' என்று கூறினான் வெள்ளையன். அதற்குள் பாவாயி இடைமறித்து, 'இனிமேல் நீங்கள் என்ன செய்வதாக யோசனை? பெற்ற தகப்பனுருக்கும் மேலா பாவாயி?' என்று குறுநகையுடன் கூறினாள். வெள்ளையன், 'அப்படிசொல்லாதே பாவாயி! பாவாயிக்குப்பிறகுதான் எல்லாம் அது இருக்கட்டும். இவர்களைச் சமாதானப் படுத்த இந்த வழிகளெல்லாம் உதவாது. நான் ஒன்று யோசித்திருக்கிறேன். அப்படி செய்யலாமா?' என்று தான் தீர்மானித்துள்ள சூழ்ச்சியைச் சொன்னான். 'பலே! பாவாயி புருஷன் வெள்ளையன் அல்லவா? அதுதான் சரியான வழி. இதில்தான் நம் சாமர்த்தியம் முழுவதும் காட்ட வேண்டியிருக்கிறது' என்று ஆவலுடன் கூறி அவன் கன்னத்தைக் கிள்ளிக்கொடுத்து ஒரு முத்தமிட்டாள் பாவாயி.

சின்னக் கவுண்டன் வெள்ளையனது தகப்பன். புஞ்சையும் நஞ்சையும் கலந்த ஐந்து ஏகரா நிலத்திற்குச் சொந்தக்காரன். வருடத்திற்கு இரண்டு மாசூலுக்குத் தப்பாது. இந்த நிலத்திற்குப் பக்கத்திலுள்ள நான்கு ஏகரா வயல்வெளி சாமிநாதக் கவுண்டனுக்குச் சொந்தம். இவன் பெண்தான் பாவாயி. இவ் விரண்டு வயல்களுக்கும் மத்தியில் ஒரு பாழடைந்த வேலி சீர்திருத்துவாரற்றுக் கிடந்தது. சின்னக் கவுண்டன் வேலியைப் பழுது பார்க்க ஆரம்பித்தால் சாமிநாதன் 'உர்' என்று சண்டைக்கு வருவான். சாமிநாதன் வேலியைத் திருத்தப்போனால் சின்னக் கவுண்டன் 'வள்' என்று விழுவான். இங்நிலையில் அவ்வேலி கவனிப்பாரற்றுக் கிடந்தது. இவர்கள் பகைக்கே முக்கிய காரணமாக இருந்தது ஒரு இறந்து கிடந்த கோழிக் குஞ்சுதான். சாமிநாதன் அக் கோழிக்குஞ்சு தன்னுடையது என்றான். சின்னக் கவுண்டன் அக் கோழிக் குஞ்சின் மீது அவன் பெயர் எழுதியிருக்கவில்லை யென்றும், அதனால் அது தனக்குத்தான் சொந்தமாக வேண்டும் என்றும் மறுக்க முடியாத விதம் கூறிக் குமுறினான். கோர்ட்டில் இரு திறத்தாரும் சுமார் 10 ஆயிரம் ரூபாய்வரையில் செலவு செய்த பின்னர்தான் ஓய்ந்து உட்கார்ந்தனர்.

இப்படி ஓய்ந்து உட்கார்ந்த ஆரும் மாதம்தான் வெள்ளையனுக்கும் பாவாயிக்கும் 'தடுக்கி விழுந்ததும் காதல்' ஏற்பட்டது. வெள்ளையன் சமாதானமாகிவிட்டால் நல்லது என்று தனது தகப்பனுரிடத்தில் சொன்னவுடன் அனுவக்குக் கோபம் வந்து வெள்ளையனை

வீட்டை விட்டுத் துரத்திவிட்டான். இதைக்குறித்துத்தான் முன்னர் பாவாயி வெள்ளையனைக் கேட்க அவன் ஒரு சூழ்ச்சியைச் சொன்னது.

* * *

காலை நேரம். சாமிநாதக் கவுண்டன் அப்பொழுதுதான் வயலி னின்றும் ஏர் உழுதுவிட்டுத் திரும்பி வந்துகொண் டிருந்தான். அப் பொழுது அவன் மகன் மாரப்பன் ஓடிவந்து 'அப்பா! யாரோ ஒரு பிரபு வந்திருக்கிருர். தங்களைப் பார்க்க வேண்டுமாம்' என்ருன். சாமிநாதன் தன்னை ஒரு பிரபு பார்க்க வந்திருப்பதாகக் கேள்விப் பட்டவுடன் காரண மறிய விரைந்து தன் வீட்டிற்கு வந்தான். அங்கு ஒரு கட்டிலின்மீது ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர்தான் தன்னைப் பார்க்க வந்திருக்கும் பிரபு என்று அறிந்ததும் அவரை நோக்கி நமஸ்காரம் செய்தான். பிரபு தன் முகத்தைத் துடைத்துக் கனைத்துக்கொண்டு இளம் மீசையை முறுக்கிக்கொண்டே, 'நீதான சாமிநாதக் கவுண்டன்? இந் நிலம் உனக்குத்தானே சொந்தம்?' என்று கேட்டார். சாமிநாதன் 'அடியேன் பெயர் அதுதான் சாமி. இந்நிலம் சென்ற இரண்டு தலைமுறையாக எங்களுக்குச் சொந்தமாக இருந்து வருகிறது' என்ருன். பிரபு 'சரி இதை நீங்கள் என்ன விலைக்கு வாங்கினீர்கள்?'

சாமிநாதன்:—5500 ரூபாயுக்கு.

பிரபு:—நிலத்தின் விஸ்தீரணம்?

சாமி:—4 ஏகர்.

பிரபு:—பக்கத்து நிலத்துக்காரன் தன் நிலத்தை எனக்கு விற்றுவிட்டான். உன் நிலமும் எனக்கு இருந்தால் மிகவும் சௌகரிய மாக இருக்கும். மிகவும் விஸ்தீரணமான நிலம் அவசியம். இருவ ருடைய நிலமும் சேர்ந்து 9 ஏகர் ஆகிறது. நீ கேட்கும் விலையைக் கொடுத்துவிடுகிறேன். நம்மிடத்தில் வள வளா, கொழ கொழா என்கிற பேச்சு எல்லாம் கிடையாது. வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான்.'

சாமி:—பிரபுக்கள் மன்னிக்க வேண்டும். இந்நிலம் நமக்கு வெகு நாட்களாகச் சொந்தமாக இருந்து வருவதால் விலைக்குக் கொடுக்க முடியாதென்று அஞ்சுகின்றேன். இதிலிருந்து வரும் மாசூல்தான் நமக்குச் சோறு போடுவது.

பிரபு:—சாமிநாதா! அப்படி சொல்லாதே. அவனுடைய ஐந்து ஏகரா நிலத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு ஒன்றும் செய்ய முடி யாது. விலை சிறிது அதிகமானுலும் பாவாயில்லை. உன் நிலத்தை நான் வாங்கித்தான் ஆகவேண்டும். நீயும் கொடுத்துத்தான் ஆகவேண் டும். இதை சிநேகித பாவத்தில் கட்டளை யிடுகிறேன். நீங்கள்

நிலத்தை எனக்குச் சொந்தமாக்கினவுடன் உங்களைத் துரத்திவிட மாட்டேன். குடியானவர்கள் தங்கள் நிலங்களின்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். இந்நிலத்தில் நீயே வேண்டுமானாலும் வேலை செய். நான் வேறு பண்ணையாட்களை வைப்பதில்லை. பக்கத்து வயல்காரனுக்கும் அப்படித்தான் ஒப்பந்தம். சீக்கிரம் சொல்லு. 6500 ரூபாய் வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறேன். நீ வாங்கின விலைக்கு 1000 ரூபா அதிகம்.

இப்பொழுது பணப் பேராசை தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது.

சாமி:—நீங்கள் வந்து இப்படி கேட்கும்போது இல்லை என்று சொல்வதற்கு முடிகிறதா? எதற்கும் என் பெண் பாவாயி யினிடம் ஒரு பேச்சு கேட்டுவிடுகிறேன். பாவாயி! பாவாயி!! இங்கேவா.

பாவாயி வீட்டினின்றும் வெளியில் வந்து 'ஏன் அப்பா! நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்களா?' என்று கேட்டுக்கொண்டே தந்தையின் அருகில் வந்து நின்றாள். சாமிநாதன் நடந்த எல்லா விஷயங்களையும் சொல்லி 'என்ன உனது இஷ்டம்? கொடுத்துவிடலாமா? 'சொல்லு' என்றான். பிரபு அதற்குள் பாவாயியை நோக்கித் தமது இளம் மீசையை முறுக்கிக்கொண்டு கண்ணைச் சிமிட்டினார்.

பாவாயியும் சைகையை அறிந்துகொண்டு தனக்கு வந்த சிரிப்பைத் தந்தைக்குத் தெரியாமல் மாற்றிவிட்டு 'நாம் இத்தனை நாட்களாக உழுது பயிர் செய்து வந்த நிலத்தைக் கொடுத்துவிடுவ தென்றால் எனக்கு மனம் வரவில்லைதான். ஆனாலும் உமக்கு இஷ்டம் இருக்கிற தென்று சொல்லுகிறீர்களே! நீங்கள் பண்ணையாளாக இருப்பதாயின் பக்கத்து வயல்காரன் சின்ன கவுண்டனுடன் சேர்ந்துதானே வேலை செய்யவேண்டும்?' என்று கேட்டாள்.

சாமிநாதன் யோசனையி லாழ்ந்தான்.

பிரபு 'என்ன யோசிக்கிறீர்கள்?'

பாவாயி தனக்கு வந்த சிரிப்பை மறுபடியும் மறைத்துக்கொண்டு 'பக்கத்து வயல்காரனுக்கும் எங்கள் அப்பாவுக்கும் பல நாட்களாக ஆகாது. அதுதான் எப்படி இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து வேலை செய்வது என்று யோசிக்கிறோம். வேறு ஒன்றும் இல்லை' என்று பதில் கூறினாள்.

பிரபு 'இவ்வளவு தானு? இரண்டு பேரும் சமாதானமாகி விடுவது. அருகில் உள்ள இருவர் சண்டை பிடித்துக்கொண் டிருப்பது பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் நன்ருக இல்லை பாருங்கள். நான் வேண்டும் என்ருல் இருவருக்கும் மத்தியில் இருந்து சந்தி செய்து வைக்கிறேன்.'

பாவாயி 'என்ன அப்பா! பிரபுதான் இப்படிச் சொல்கிருர் களே! அவர்கள் வார்த்தைக்கு நாம் ஏன் எதிர் சொல்ல வேண்டும்?

சாமிநாதன் 'பாவாயி! நான் இப்படி நடக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை. அவன் எழவுக்குக்கூடப் போக முடியாது என்று எண்ணினேன். அநேக நாட்களாக எனக்குக்கூட சமா தானம் செய்து கொள்ள வேண்டும் என்றுதான் எண்ணம். ஆனல் அவன் எண்ணம் எப்படியோ என்று இருந்து விட்டேன். (பிரபுவை நோக்கி 'அவன் என்ன சொல்கிருன். அவனும் இதற்கு உடன்பட வேண்டுமல்லவா?'

பிரபு 'அவனும் நீ சொன்னது போலத்தான் சொன்னன். சமாதானத்துக்கு அவன் தயாராக இருக்கிருன். நீ நாளைக் காலையில் மாரியம்மன் கோவிலுக்கு வா. அவனிடத்திலும் சொல்லி விடுகிறேன். பிறகு எல்லாவற்றையும் முடித்து விடலாம்.

* * *

இவைகளெல்லாம் நடந்து இரண்டு மாதங்கள் ஆகியிருக்கும். இரண்டு நிலங்களுக்கும் மத்தியிலிருந்த வேலி அவ்விடத்தினின்றும் இப்பொழுது விடைபெற்றுக் கொண்டு விட்டது.



மாலைப்பொழுது. வயலின் ஒரு பக்கம் சின்னக் கவுண்டன் கிணற்றினின்றும் தண்ணீரை இறைத்துக் கொண்டிருந்தான். சாமிநாதன் தண்ணீரைப் பலவேறு வாய்க்கால்களில் திருப்பி விட்டுக் கொண்டிருந்தான். அவன் திடீரெனத் தன் தொழிலினின்றும் நின்று சின்னக் கவுண்டனை நோக்கி 'ஓய்! இங்கே வாரும். ஒரு

'வேடிக்கை' என்று கூப்பிட்டான். சின்னக் கவுண்டனும் அங்கு வந்தான். சாமிநாதன் 'பெண் சாதியும் புருடனும் எப்படி? அங்கே பாரும் ஐயா' என்று சற்று தூரத்தில் ஒரு பாணுக்குக் கீழே உட்கார்ந்திருந்த பாவாயியையும் வெள்ளையனையும் காட்டினன். சின்னக் கவுண்டன் பெருமையுடன் 'இது எல்லாம் எனது வெள்ளையனுடைய பிரபு வேஷத்தின் பயன் அல்லவா?' என்ருன்.

அப்பொழுது வெள்ளையன் பாவாயியை நோக்கி 'பாவாயி! நாம் இரண்டு மாதங்களுக்கு முன் எப்படி இருந்தோம். இப்பொழுது எப்படி இருக்கிறோம்' என்ருன்.

பாவாயி 'முன் தனி, இப்பொழுது ஜோடி'. வெள்ளையன் அன்று நீ உன் தகப்பனுருக்கு எதிரில் சிரித்தாயே அப்பொழுது எங்கு அவர் விஷயம் தெரிந்து கொண்டு விடுகிருரோ என்றிருந்தேன். நல்ல வேளை'.

பாவாயி 'நல்ல வேளையாவது கெட்ட வேளையாவது? தடுக்கி விழுந்ததும் கொண்ட காதல் அல்லவா நம்முடையது. அதனுல்தான் நம் எண்ணம் பூர்த்தியானது.

வேட்டைக்குப் போன வீரன்!

கிளி

[பாலதாசன்]

1. பச்சைப் பசுங் கிளியே—உன்னைப்
பார்க்கப் பார்க்க வெனக்கோர்
இச்சை மிகுந்திடு மால்—உன்றன்
இன்சொலைக் கேட்ப தற்கே.

2. கண்ணைக் குளிர் விக்கும்—பச்சைக்
கவினிற மெங்கே பெற்றாய்?
பண்ணைப் பணி விக்கும்—சொல்லின்
பக்குவ மார் கொடுத்தார்?

3. வெட்ட வெளி யதனில்—நீள
வேடிக்கை யாடு பல
இட்டத் தமர்க ளுடன்—நெஞ்சில்
இன்பந் தழைத் திருப்பாய்.

4. மரங்களின் பொந்தி லன்றோ—நின்றன்
வாழ்வின்பங் கண்டனை யால் !
உரங்கொளுங் கூட்டினிடை—அந்தோ
ஊரார் அடைத்தனரால்.

5. பசிக்குப் பழங்கள் தின்பாய்—எய்ப்புப்
பாறப் பறந்திருப்பாய்
இசிக்க உனையடைத்தே—பாலை
ஏந்திப் பயனென் கோலோ?

6. வானமுன் பேருலகம்—பச்சை
மாமர முன் சுவர்க்கம்
ஈனமிலாதபடி—இன்ப
ஏற்றம் பொருந்தியுளாய்.

7. பாழும் புவிமனிதர்—உன்னைப்
பண்ணுத கோலமெலாம்
தாழும் படியியற்றல்—நின்றன்
தலைவிதி கொல்லோ சொல்லாய்.

8. காமக் கடவுளுக்கே—தத்தாய்
கவினுறு நீ குதிரை
ஏமக் கரத்துமையாள்—உன்னை
ஏந்தி யிருப்பளன்றோ.

9. நாண்முழு துமுன்றனைக்—கண்டு
நாட்டங் குளிர்ந்திடுவேன்
பாண்மிழற்றும் நின்சொல்லைக்—கேட்டுப்
பரவச மாகுவனே.

10. மூக்குச் சிவந்தாலும்—நின்றன்
முகஞ்சிவக் காமலென்றன்
ஏக்க மகற்றுவதோர்—நல்ல
இன்மொழி கூறாயோ?

கவிச் சித்திரமும் பண்டைத் தலைவியரும்

[திரு. ஜே. சே. சௌரிராஜன்]

காலமோ, இளவேனில். பொழுதோ, சாயங்காலம். இடமோ, ஆனந்தப் பூங்காவனம். சூரியன் தனது கனக மயமான இளங் கிரணங்களை எங்கும் பரப்பிக் கண்டவர்தம் கண் களிப்பத் தன்னுள் அகப்பட்ட வஸ்துக்களை யெல்லாம் பொன் மயமாக்கிக்கொண் டிருக்கிறான். காற்றோ, தென்றல்; மந்த மாருதம் அந்தமாய் வீசா நிற்கிறது. அன்றலர்ந்த மல்லிகையின் நறுமணம், கவலை வாய்ப்பட் டயர்ந்திருக்கும் உள்ளத்தை ஊக்கி யெழச் செய்கிறது. நிமலனைக் காண விரும்பும் யோகிகளின் உள்ளம் போல், நிர்மலமாகக் களகள வென்ற சத்தத்தோடு தன் வழியே ஊர்ந்தேகும் நீரோடையின் கரையில் பெடையன்னம் நடமாடுவ தொப்ப ஒரு தலைவி தன் தோழியுடன் பூக்கொய்து கொண்டு வாரா நிற்கிறாள்; சரேலென்று ஏதோ ஒன்றை நினைத்தவள்போல் திடுக் கென நிற்கிறாள்; அயர்கிறாள்; சற்று விம்முகிறாள்; பூங்கொடி வாடு வது போல் உடல் சோர்கிறாள். அவள் திங்கள் நுதல் வேர் வோடு கிறது; தனபாரம் விம்மி விம்மி அடங்குகிறது. அவள் இருந்தாற்போ லிருந்து, திடுக்கிட்டவள் போல் மானை யொப்ப மிரள மிரள விழிக்கிறாள். பக்கத்தில் காணப்படும் மேடைமீது தன் வாடிய சரீரத்தைச் சாய்க்கிறாள்.

தன் தலைவிக்கு ஏற்பட்ட இவ்வலங் கோலத்தின் காரணத்தை அறிந்து கொள்ள ஆற்ற லற்ற தோழி, சோர்ந்து வீழ்ந்த அம்மெல் லியலாளை எடுத்துத் தன் மார்பின் மீது சார்த்திக் கொண்டு, 'அம்மணீ, உமக்கு நேரிட்ட தென்னை? இயம்புதிர்' என வினவலும், தலைவி பெருமூச் செறிந்து, 'ஏதடீ, தோழி, ஏமாந்தோம்! இனிக் காண்ப தெப்பொழுதோ! நமது அஞ்ஞானத்தின் மிகுதிதான் என்னே! நேற்றைத் தினம் கண்டதுதான் காட்சி! இதே இடந் தான் காணேடீ! இருவாய் வந்தாரே! என் முன்னே நின்றாரே! ஹா! என் செய்வேன்! அஃதொக்குஞ் சந்தர்ப்பம் இனித்தான்



தலைவியின் சோகம்

வாய்க்குமோ ! நற்சமயத்தைக் கைசோர விட்டேனே!' என்று தவிக்கிறாள்; அரற்றுகிறாள்.

'——இருவராய் வந்தார், என் முன்னே நின்றார்——'

தன் தலைவியின் மனநிலையை யறியாத அத்தோழி, 'வந்த விருவர் யாரே? எது செய்தார்?' எனலும், அம்மன நிலையில் அத் தலைவியின் மனக்கண்ணில் அவ்விருவர்தம் கட்டழகு தோன்ற லுறுகின்றது; அதில் ஈடுபட்டுத் தன் உடல் சோர வாய் குழற விளம்ப லுறுகின்றாள்.

'அன்னவரின் குஞ்சி யழகும் உரைத்தற் பாலதோ? அது மைவண்ணமே யாகும். வில் வீசும் கனமகர குண்டலங்கள் அவர் தம் காதுகளுக்கு அழகு செய்யும்; அவரின் துணை யாதென்று கேட்பாயோ? அஃது எய்வண்ண வெஞ்சிலையே யாகும். அவர்தம் மேனி பத்தரை மாற்றுப் பசும்பொன்னின் காந்தி யுடைத்து; மரகதக் கல்லின் பொங்குகின்ற இளஞ்சோதியும் அதுவே. இவ்வளவு கட்டழகோடு கூடிய இருவர் என் முன்னே நின்றார் நேற்றைக்கு ....ஹா' அப்படியே மெய் மறக்கிறாள்.

'——மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின் தாழ
மகரஞ்சேர் குழை யிருபாடிலங்கி யாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தார்என் முன்னே நின்றார்——'

மறுபடியும் புத்துயிர் பெற்றவள் போல், அவ்வடி வழகரின் அழகை உரைக்கிறாள்; 'மிளிர்ந்து செவ்வரி பரந்த கண்ணிணையும் அரவிந்தமே. கைவண்ணம் அன்றலர்ந்த தாமரைப் புஷ்பம்போ லிருந்ததே! அதரங்களின் அழகுதான் என்னே! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதே! திருப்பாதங்களின் மென்மையை உரைக் கத்தான் ஆமோ? இவ்வளவு கட்டழகோடு கூடிய அன்னவர் எங்கேனும் செல்லத்தான் கூடாதா? என் முன்னேயா வந்து நிற்க வேண்டும்?'

'——கைவண்ணம் தாமரை வாய்கமலம் போலும்,
கண்ணிணையு மரவிந்தம் அடியுமஃதே——'

'நிற்கத்தான் நின்றார். அவரை நான் பார்க்கத்தான் பார்த் தேன். அப்படியே அவரடி வீழ்ந்து, 'என் கண்ணாளா, உன் தஞ்சம்' என்றுதான் ஒரு வார்த்தை தவறியாவது அச்சமயம் என் வாயி லிருந்து வந்திருக்கக் கூடாதா? அதுவுமில்லை. உலகத்தின் அஞ் ஞானம், குளத்து நீரைப் பாசி மூடுவதுபோல் என் அறிவை மூடி விட்டதே. அவருக்குத் தேவருக்குள்ள சதுர்ப்புசந்தான்

மற்றுண்டோ? தேவரைச் சுற்றி வில் வீசும் தேசுந்தான் அவர் தம்பால் விளங்கிற்றுண்டோ? ஏதொன்றுங் காண்கிலேன். அடீ, தோழீ, தேவராவாகில் அவ்வளவு சுலபமாகப் புன்முறுவல் பூத்த முகத்துடன் என் முன்னால்தான் நிற்பாரா? இவை யனைத்தும் அப்போதென் மனக்கண்ணில் தோன்றாமல் மறைந்தனவே. தேவர் அவர், என்னை அங்கீகரிப்பரோ என்று அஞ்சினேனே, படுபாவி! என் மௌட்டியம்தான் என்னே! ஐயோ '

'——அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும், தோழீ
அவரை நாம் தேவரென் றஞ்சினோமே——!'

அவ்வடி வழகாது சௌலப்யமும், அச் சௌலப்யத்தைக் கைப்பற்றி அவரை யனுபவியாது உலக மாய்கையினால் கைசோர விட்டதால் அத் தலைவிக்கு உண்டான பச்சாத் தாபமும் கீழே குறிப்பிட்டிருக்கும் கவிச்சித்திரத்தில் எவ்வளவு அழகாக ஒருங்கே அமைக்கப் பெற்றிருக்கின்றன! அநுபவிப்போம், வம்மின்!

' மைவண்ண நறுங்குஞ்சிக் குழல் பின்தாழ
மகரஞ்சேர் குழையிருபா டிலங்கி யாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தார் என் முன்னே நின்றார்,
கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணிணையும ரவிந்தம் அடியுமஃதே
அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ
அவரை நாம் தேவரென் றஞ்சி னோமே!

* * *

இவர், பக்திமான்களும் பண்டை நந்தமிழ்ப் புலவர்களும் கண்ட தலைவியராவர். தற்காலத்து நாவலாசிரியரின் தலைவியரோ?





பெண்ணின் பெருமை

[இந்தியன்]

பெண்மைக்கோர் வணக்கம்

ஆண்மைக்கு அழகு செய்யும் பெண்மை. பிணியும் பசியும் தீர்த்திடும் பெண்மை. இன்சொல், அன்பு, இரக்கம் முதலிய இன்பமான குணங்களைக் கட்டித் தழுவும் பெண்மை. ஆருயிர்ப் பணியிலும் ஆத்ம முயற்சியிலும் மனிதனுக் குதவிடும் பெண்மை. அறவுணர்ச்சியையும் அன்புணர்ச்சியையும் பயன்படச் செய்யும் பெண்மை. மனிதனின் அறங்கட்கு முதற்றுணையாய் விளங்கிடும் பெண்மை. நல்லறங்கட்கே தாயகமாய் ஜ்வலிக்கும் பெண்மை. ஆடவன் வாழ்வை அன்பினி லுய்க்கத் தேடருந் திருவாய்த் திகழ்ந்திடும் பெண்மை. சக்தித்தாயின் தெய்வீக வடிவமாய்த் தோன்றிடும் பெண்மை. உலக வாழ்வை இன்ப வாழ்வாக்கி, உலகையே இன்பக் களஞ்சியமாக்கி மாந்தரை அமரராக்கும் சக்தியும் கடமையும் பெற்றுள்ள பெண்மைக்கோர் வணக்கம்!

பெண்மையின் பெருமை

மாதர் சக்தித்தாயின் திருவடிவங்க ளாதலின் உலகத் தாய்மார்களாக விளங்குகிறார்கள். மாதர்க ளனைவரும் தாயின் தெய்வீக பீடத்தை யலங்கரிக்கிறார்கள். பெண்மை சகல சக்திகளையுந் தன்னுள் ளடக்கித் திகழ்கின்றது. ஆனால் பெண்மை தாயாகும் போதோ அதன் பெருமை கற்பனை சக்தியையுங் கடந்து எல்லை யற்றதாகி விடுகிறது. உலகமே சக்தித் தாயின் திருவடிவம்—பெண்மையே லோக

மாதா வெனில் நாம் காணும் பெண்கள் அனைவரும் தாய்மார்களே யாவர். ஒரு சிறு பெண்ணை சந்தித்த போதிலும் பெரியார் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் 'தாயே' யென்று அடிபணிந்து வணங்கு வாராம். அவர் ஒரு சமயம் விபசாரி யொருத்தியைச் சந்தித்த காலத்தில் அவளை நோக்கி 'தாயே! நீ தெருவில் நிற்கும் ஸ்திரீயாயி னும் பெண்மைத் தெய்வத்தின் சாயல்—ஓர் காலத்தில் தாயாய் விளங்கினாய்—ஆதலால் உன்னைத் தாயெனப் பணிகிறேன்' என் றுரைத்தா ராயின் பெண்மையின் பெருமையையும் சக்தியையும் அளவிடுதற் கூடுமோ?

நரக வாழ்வு!

தவத்தோர் கண்ட அறத்தைக் காப்போர் இல்லறத்தோரே. உலகும் உலகின் பணியும் இல்லறத்தாலேயே இயலும். கடவுளின் இன்னருள் பெற்றது இல்லறமே யாகும். உலகில் இன்னுயிர் இருப் பதற்கும் பெருதுவதற்கும் இல்லறமே அடிப்படை. இல்லறம் நல்லறமாக பெண்மை அத்யாவசியம். பெண்மை யின்றேல் இல்லற மில்லை. பெண்மை யின்றேல் இல்லை யிவ்வுலகம். ஆண்மையும் பெண்மையும் அழகுடன் கூடி, கடவுட் பணிகள் சுடருறச் செய்து, தாமும் வாழத் தருமமும் வாழ, தாரணி வாழத் தாங்கிய தில்லறம். அறநெறிக் காதலர் ஒரு மனப்பாட்டுடன் தத்தம் நெறி யறிந்து புவிப்பணி போற்றின் இல்லறம் நல்லறமாகும். இத்தகைய இல் வாழ்வு வாழ்வதைவிட மேலான இன்பம் இல்லை. அது இவ்வுலக வாழ்வையே அமர வாழ்வாக்கும். மனம் வேறுபடின், ஆண் பெண் இருவருள் மாச்சர்யம், வீண் சந்தேகம், வெறுப்பு குடிகொண்டால் அவ்வாழ்வு நரக வாழ்விற் கொப்பாகும். இந் நரக வாழ்வு வாழ் வதைக் காட்டிலும் அக்கணமே துறவறம் பூணல் மேன்மையாகும்.

சக்தியின்றேல் சிவனுமில்லை!

பெண்மையே பாதி ஜனசமூகம். பெண்மையே பாரத தேவி யின் ஓர் கண். ஜனசமூகத்தில் பாதி பேர் நாசமடைந்தாரானால் அச் சமூகம் எவ்வாறு முன்னேறும்? நாடுதான் எவ்வாறு சீர்பெறும்? ஓர் உருவத்திற்கு ஓர் கண் பொட்டையானால் அவ்வுருவம் அழ கிழந்து மாசுறுமா அல்லவா? 'ஸ்திரீகள் எக்கேடு கெட்டு நாச மடைந்தா லென்ன? ஆண்களாகிய நாம் முன்னேறினால் போது மானது' என்று கூறுவது பொருந்துமா? இது ஆழ்ந்த சிந்தனையி லுதித்த பேச்சாகுமா? சக்தியின்றேல் சிவன் அசையவும் முடியுமா? ஓர் சிறு உதாரணம். ஜகத்குரு ஆதி சங்காச்சாரியார் எப்போதும் சிவனையே தோத்தரித்து வந்தார். அன்னையை மறந்தார். இதைக் கண்ட அன்னை ஆச்சாரியருக்கு நற்புத்தி புகட்ட வேண்டினாள். ஆச் சாரியர் நோய்வாய்ப் பட்டார். நெடுநாள் அன்னாகார மின்றி

தவித்தார். தேகம் மெலிந்து, பலங் குன்றிப் பாயும் படுக்கையு மானார். அன்னை வேறுருவங் கொண்டு ஆசாரியரை நோக்கி 'உண வருந்த எழுந்து உட்கார்' எனப் பணியவே, ஆச்சாரியர் 'அம்மணீ! சக்தி யில்லையே!' என்றார். அப்போது அன்னை 'இப்போதேனும் அறிந்தனையா சக்தியின் தன்மையை' என்று சொல்லிக் காட்சியளிக் கவே ஆச்சாரியர் உண்மை யுணர்ந்து, 'சக்தியின்றி சிவனும் அசைய முடியாது' என்று முதல் வரியாக ஆரம்பித்து ஸௌந்தர்ய லஹரி யை எழுதி முடித்தார். எனவே சக்தியின் திருவுருவங்களான பெண் மக்கள் சீர்பெற வேண்டும்; நலமுற வேண்டும்; நிகரிலா தோங்க வேண்டும். அப்போதுதான் ஆண் மக்களும் நலமுறுவர்; நாடும் நாட்டினரும் ஓங்குவர். பாரதர் கவனிப்பார்களாக.

பயில்வான்:—செட்டியாரே, என்னுடன் குஸ்தி போட வருகிறீரா?

செட்டியார்:—நான் தினமும் என் மனைவியோடு குஸ்தி போடுகிறதே போதும். அதில் உடம்பு மட்டு மல்ல ; நெஞ்சுகூடப் புண்ணா யிருக்கு.

—பி. ஜி. வெங்கடபதி

அவர்:—இந்தப் பெண்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதே கிடையாது சார்.



இவர்:—என்ன சார், அவர்கள் மேல் உங்களுக்கு அவ்வளவு வெறுப்பு?

இவர்:—பாருங்கள் சார்! என் மனைவி என்னை, 'எதற்கும் சமையல் செய்யக் கற்றுக் கொள்வது நல்லது. அதனால் கற்றுக் கொள்ளுங்கள்' என்றாள். நானும் கற்றுக் கொண்டேன்.

அவர்:—அப்புறம்.

இவர்:—சமையல்காரியை அவள் நீக்கி விட்டாள்!

—என். எஸ். வேங்கடராமன்

உபாத்தியாயர்:—மழை எவ்வாறு பெய்கிறது?

பையன்:—பூமி வெகு வேகமாக சுற்றுகிறதல்லவா, அதன் உடலிலிருந்து வியர்வைத் துளிகள் கிளம்புகின்றன. அதுதான் மழை.

—எம். வாசுதேவன்



ஒரு கதை

[திரு. ஐயாமுத்து]

எனக்குக் கதை சொல்லத் தெரியாது. தெரியாதவன் சொல்லும் கதைதான் எப்படி யிருக்கு மென்று கேளுங்கள்.

ஒரு ஊரில் ஒரு மனிதர் இருந்தார். அவர் ராம பக்தர். நெற்றியில் பட்டை நாமம் போட்டுக் கொள்வார். தாம் பார்க்கும் எல்லா வஸ்துக்களுக்கும் நாமம் போடுவார். நாமம் போட்டவர்களை யெல்லாம் கும்பிடுவார். கல், மரம், சுவர் எதற்கு நாமம் போட்டிருந்தாலும் அதைக் கும்பிடுவார். அந்த ஊரில் ஒரு வண்ணார் (வண்ணான் என்று ஒருமையில் சொன்னால் யாராவது கோபித்துக் கொள்வார்கள் என்று பன்மையில் சொன்னேன். அதுவும் தப்பு என்றால் சலவைத் தொழில் செய்பவர் என்று திருத்தி வாசித்துக் கொள்ளுங்கள்) இருந்தார். அவர் பெரிய போக்கிரி. அவர் தமது கழுதைக்கு ஒரு நாள் பட்டை நாமம் போட்டு நமது ராமபக்தர் முன்னிலையில் கொண்டு போனார். உடனே ராமபக்தர் கழுதையின் முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார்.

இவ்வளவுதான் கதை. காரண மில்லாமல் கதை வராது. ஆனால் நான் கூறப் போகும் காரணம் சரியாகவும் இராது.

சுயமரியாதைக்காரர்கள் முதலில் தங்கள் வாலை அறுத்தார்கள். என்ன குரங்குக்குத்தானே வால் அவர்களுக்கேது என்று

நீங்கள் ஆச்சரியப்படலாம். நான் விகடமாகச் சொன்னேன். விஷயத்தைக் கேளுங்கள். முதலியார், நாயுடு, செட்டியார், ரெட்டியார் என்று பெயருக்குப் பின்னால் வரும் வாலை அறுத்தார்கள். குரங்கு ஒரு கொம்பை விட்டதும் மறு கொம்பில் தாவும் வழக்கம்போல 'பெரியார்' என்ற வாலைச் சேர்த்துக் கொண்டார்கள். அதைப் பற்றிப் பலர் பல விதமாய்ப் பேசினார்கள். பின்னர் பெரியார் என்று சொல்லிக்கொள்வதில் அவர்களுக்கு வெட்கம் ஏற்பட்டது. அதனால் வாலைச் சுருட்டித் தலையில் வைத்தார்கள். இது உடனே 'தோழர்' என்று மாறியது.

ராமபக்தர் மரம், செடி, கொடி, கல், கழுதை முதலியவற்றிற்கும் நாமம் போட்டுப் பக்தியில் பரவசம் அடைந்ததுபோல, சுயமரியாதைப் பக்தர்களும் எல்லோர் தலையிலும் தோழர் பட்டத்தைச் சூட்டி சமதர்மத்தை வளர்த்து வருகிறார்கள். தோழர் காந்தி! தோழர் சங்கராச்சாரியார்! தோழர் வைசிராய்! தோழர் ஐந்தாம் ஜியார்ஜ் மன்னர்!

பாருங்கள்! என்ன பொருத்தம். இன்னும் சிறிது காலம் போனால் தோழர் சுப்ரமண்யக் கடவுள், தோழர் திருப்பதி மலை பாண்டவர், தோழர் ஏசுகிருஸ்து, தோழர் நபி நாயகம் என்று சொன்னாலும் சொல்வார்கள். யார் கண்டது?

ஒரே கொள்கையுடைய கூட்டத்தினர்கள் தங்களுள் ஒவ்வொருவரையும் தோழர் என்று அழைத்துக் கொள்வது முறை. அவர்கள் ஒருவரை யொருவர் அவ்விதம் அழைத்துக்கொள்வதில் அர்த்தமும், கௌரவமும் உண்டு. எல்லோரும் சுயமரியாதைக்காரர்களுக்குத் தோழர்களாகி விட்டால் பின்னர் பேச்சுமில்லை; சண்டையுமில்லை; விஷயமு மில்லை; விகடமுமில்லை; கதையுமில்லை; காரணமுமில்லை.

அந்தோ தெய்வமே!
மனிதனுக்கும்
சிங்கத்திற்கும் பயந்து
உன்னிடம் ஓடிவந்தால் நீயும் என்னை
பலி கேட்பதாக பூசாரி கூறுகின்றானே!
தெய்வமும் எனக்கு விரோதமானல்
பின்யாருதான் காப்பது!
R.V.V. Badhran.

மகத்தான நியாயங்கள்

[ஹைதர்]

மகான்களும், முனிவர்களும், வேதங்களும், கல் விக்ரஹங்களும் தோன்றிய நமது நாட்டிலே, 'ஏழை ஹரிஜனனைக் கண்டால் எழுபதடி பாய்ந்து ஓட வேண்டும்' என்று மூட சாஸ்திரம் எழுதப்பட்ட நமது தேசத்திலே நடைபெறும் மகத்தான நியாயங்கள் என்னவென்று பார்ப்போம்.

பிரபல பத்திரிகையான விதூஷகன் ஆசிரியர் முதலாவதாக எல்லோரும் இன்ப சாகரத்தில் மூழ்கி யிருக்க வேண்டும் எனத் தமது கொள்கையைக் கூறுகிறார். அடுத்த பக்கத்திலே தஞ்சை மிராசுதார்கள் துயரம் என்று போட்டிருக்கிறார். அடுத்த பக்கத்தில் இந்தியாவின் ஏழைகளுக்குக் கதி மோக்ஷமில்லையா? என்று கேள்வி கேட்கிறார். அடுத்த பக்கம் இந்த ஏழைகளுக்கு உணவு அளியுங்கள் என்று படம் போட்டிருக்கிறார். அதற் கடுத்தாற் போல் குதிரைப் பந்தயத்தின் கேடுகளைப்பற்றி நான்கு பக்கங்கள் விளக்கி யிருக்கிறார். அதற்கடுத்தாற்போல் ஜவகரிலாலின் பொதுவுடைமை, சமதர்மக் கொள்கைகளைப் பற்றி வான மளாவப் புகழ்ந்து போற்றி யிருக்கிறார். இப்படியே கடைசி பக்கத்திற்குச் செல்லுங்கள்.

கடைசி பக்கத்தில்தான் உங்களுக்கு ஒரே யடியாக அதிர்ஷ்டம் வருகிறது. தலைகீழ்ப் போட்டிப் பந்தயம். எட்டணா பிரவேசக் கட்டணம் எட்டாயிரம் ரூபாய் லாபம் என்று எழுதப்பட்டிருக்கும். அதோடு சிரமம் சிறிது! லாபம் பெரிது! என்ற கொட்டை எழுத்து ஆசை விளம்பரமும் உங்கள் கண்களைக் கவரும். பேராசை யாரை விட்டது? நீங்களும் உடனே பதினெட்டு விடைகள் தயார் செய்து அனுப்புகிறீர்கள். அடுத்த இதழிலே அதற்குப் பதில் வருகிறது. குருதை, கல்தை, கொங்கு என்பவை ஆசிரியரின் விடைகள். 'மேற்படி வார்த்தைகள் உலகத்தில் உண்டா?' என்று ஆசிரியரைக் கேட்டால் வழக்கச் சொல் என்றும், குழந்தைகள் கூறும் மழலைச் சொல் என்றும் சமாதானம் கூறுகிறார். பரிசுகள் வழக்கம் போல்

உற்றார் வைப்பாட்டி உறவினருக்குக் கொடுக்கப்படுகின்றன. இது விகடப் பத்திராதிபரின் முன்னுக்குப் பின் முரணான மோசடி நியாயம்.

*　　*　　*

எங்கும் வியாபார மந்தமும், பணத் திண்டாட்டமும் ஏற்பட்டிருக்கும் இந்நாளில் ஏழை வியாபாரி ஆழ்ந்து யோசனை செய்கிறார். துணிகளை ஏலம் விட்டு பொருள் திரட்டலாம் என்ற தீர்மானத்தோடு ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று ஏலம் விடுகிறார். கடைசியாக முரடர்கள் நிறைந்த ஒரு கிராமத்தில் மூட்டையை அவிழ்த்து ஏலம் போட ஆரம்பிக்கிறார்.

'சகோதரர்களே! ஏலம் போடுவதற்கு முன்னால் ஒரு விதியைக் கூறுகிறேன். நீங்கள் ஏலம் கேட்கும் தொகை எங்களுக்குக் கட்டுமானால் அதைக் கொடுப்பேன். எனக்குக் கட்டாவிடில் ஒரு ரூபாய்க்குக் காலணா வீதமும் மேற்கொண்டு ஐந்து ரூபாய் வரையிலும் ஓரணா வீதமும் உங்களுக்கு என் குற்றத்திற்காக அபராதம் கொடுப்பேன்' என்ற பூர்வ பீடிகையுடன் ஏலம் ஆரம்பமாகிறது. இவர்கள் ஏலம் ஒரு புது தினுசு. மேலேயிருந்து விலையைக் குறைப்பார்கள். மீண்டும் விலை யேற்றப்படும். ஏலம் ஆரம்பமாகிறது.

'பத்து ரூபாய்! ஐந்து ரூபாய்! இரண்டு ரூபாய்! ஒரு ரூபாய்! இரண்டணா! கேளுங்கள் ஐயா!' என்று ஏலம் விடுபவர் கான்பூர் சால்வையை விலை கூறுகிறார். அந்த நாட்டுப் புறத்திலே நாலணாவிற்கு மேல் அந்த சால்வையை ஒருவரும் விலை கேட்கவில்லை. ஏல வியாபாரி அந்த விலை தமக்குக் கட்டாது என்று கூறி அபராதத் தொகையை ஏலம் கேட்டவருக்குக் கொடுத்துத் தமது வருத்தத்தை யறிவிக்கிறார். ஆனால் கள்ளுக்கடை தாஸர்களும், மாரியாத்தாள் பக்தர்களுமாகிய அவர்கள் நாலணாவிற்குக் கொடுக்காத அந்த வியாபாரியை, அவரது மூட்டையைப் பிடுங்கி வைத்துக்கொண்டு விரட்டியடிக்கின்றனர். இது கள்ளுக்கடை மஹான்களின் பெரிய நியாயம்.

*　　*　　*

எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் எக்னேஸ்வரன் ஒரு மண்டைக் கர்வம். அவர் உபாத்தியாயராக மூன்றும் வகுப்பிற்கு வந்து மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை. அவர் பையன்களை மிருகங்கள் போல் நினைத்துத் தண்டனை கொடுக்கிறார். நினைத்தால் பையன்களை 'ஸ்டான்ட் அப் ஆன் தி பெஞ்ச்' என்று கட்டளையிட்டு நூறு அடி அடிப்பார். அவர் மாணவரா யிருந்தபோது அனுபவித்த அடிகளை யெல்லாம் பையன்கள் மேல் தீட்டி விடுவார். அவர் கொடுக்கும் தண்டனைக்கு அப்பீலே கிடையாது. தெருவில்கூட கழுதையை அடிப்பது போல் பையன்களை அடிப்பார். அதில் அவருக்கோர் கர்வம்.

*　　*　　*

இந்தியாவில் சாமியார்களுக்கு மட்டும் ஒரு ஸ்பெஷல் நியாயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாமியார்களென வெளிவரும் சில போலிகள் தெருவிலே நிர்வாணமாய்ப் போகலாம். வீதியில் போகிறவனைக் கூப்பிட்டு 'கந்தன் உனக்கு அருள் கொடுக்கிறாரப்பா! பயப்படாதே. நீ எடுத்த காரிய மெல்லாம் ஜயத்துடன் முடியும். கந்தன் உன்னை நாலணு கேட்கிறார். கொடுக்கிறாயா?' என்று கேட்பார். அந்த ஏமாந்த சோணகிரி அவர் கையில் நாலணாவைக் கொடுப்பதுமன்றி, காலில் வீழ்ந்து நமஸ்காரம் செய்து விட்டுப் போகிறான். சாமியார் சாயுங்காலம் மதுக் கடையில் 'டிரிங்'கில் ஆழ்ந்திருப்பார். இந்த சாமியார்தான் தெய்வம். அவரை யாரும் ஒன்றும் கேட்பதில்லை. அவர் குற்றத்தையும் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் பெரிய தெய்வ மல்லவா?

ஆண்களுக்கோர் நியாயம். பெண்களுக்கோர் நியாயம். ஏழைகளுக்கோர் நியாயம். பணக்காரர்களுக்கோர் நியாயம். ஆராயப்புகின் எல்லாம் அநியாயம். எல்லாம் சுயநலம். இதுவும் புண்ணிய தேசம் தான். தவத்தோர் நிறைந்த நாடுதான். பரிசுத்தமான நாடுதான். இனி நமக்கென்ன குறை?

இவர்:—உங்களுக்கு ஜோசியம் தெரியும் என்று எனக்கு ஏன் சொல்லவில்லை?

அவர்:—என்ன? ஜோஸ்யமா? எனக்குத் தெரியும் என்று உங்களுக்கு யார் சொன்னது? எனக்கு அதைப் பற்றி ஒன்றுமே தெரியாதே.

இவர்:—ஒன்றும் தெரியாதா? நேற்று 'குழந்தை விழப் போகிறது பார்த்துக் கொள்' என்று சொன்னீரே, அப்படியே நடந்தது. உமக்கு ஜோசியம் தெரிந்திரா விட்டால் எவ்விதம் அந்த உண்மையை நீர் சொல்லி இருக்கக் கூடும்?

—என். எஸ். வேங்கடராமன்

பட்டிக்காட்டான்:—சோறு எங்கே விக்கும் ஐயா ?

வாயாடி: —தொண்டையிலே.

—கே. ஆர் புருஷோத்தமன்

குழந்தை வளர்ப்பு

[மறையோலி]

தெரிந்து கொள்ள ஆவல்

தனக்குத் தெரியாத நூதனமான விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முயலுவது சிறு குழந்தை முதல் பெரியோர் வரைக்கும் சகஜமே. இந்த ஆவலின் உரத்தைப் பொருத்தது குழந்தையின் அறிவுவிருத்தி. இன்னும் பேச ஆரம்பிக்காத ஒரு குழந்தையிடம் சப்திக்கும் கிலுகிலுப்பை ஒன்றைக் கொடுத்தால், அது உடனே அக்கிலு கிலுப்பைக்குள் எது சப்திக்கிறது? எவ்வாறு சப்திக்கிறது? என்று அறிந்து கொள்ள முயலும் ஆவலினால் அவ்வஸ்துவை உடைத்துத் தகர்த்து விடுகிறது. குழந்தை நாடியதை அது கற்றுக் கொள்ளுகிறதோ? இல்லையோ? அது தற்பொழுது நம் கேள்வியில்லை. குழந்தையின் அத்தகைய ஆவலைப் பற்றியே நாம் இப்பொழுது பேசுகிறோம். இத்தகைய ஆவல் சமூக வாழ்க்கைக்கும் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் அவசியமா? அவசியமெனில் அந்த ஆவலை எவ்வாறு வளர்ப்பது? என்பவைகளை இங்கே கவனிப்போம்.

இந்த ஆவலானது குழந்தையின் வாழ்க்கையில் அடக்கவொண்ணாத ஒரு தாகம். குழந்தை பார்க்கும் வஸ்துக்கள் எல்லாம் அதற்குப் புதிதே. ஆதலின் ஒவ்வொரு வஸ்துவும் அதற்கு ஸ்வாரஸ்யமுள்ளதே. குழந்தை முதன் முதலாக ஒருவர் முகத்தை உற்று நோக்கும்போதே, அதாவது சுமார் மூன்று மாதத்திலேயே, இந்த ஆவல் ஏற்படுகின்றது எனக் கூற வேண்டும். உண்மையாகப் பார்க்குமளவில் அது இறக்கும் வரை மறைவதுமில்லை என்றே கூற வேண்டும். தான் காணும் பொருள்களின் குணங்களை அறிந்து அப்பொருள்களைத் தனக்கு உபயோகித்துக்கொள்ள முயலுவதற்காகவே இயற்கையின் இயல்பாடமைந்த ஆவல் இது. ஆதலின் இந்த ஆவலைச் சாந்தி செய்வது பெற்றோரின் கடமையாகும். அக்கம் பக்கத்திலுள்ள பொருள்களைப் பற்றியும் அவைகளின் குணவிசேஷங்களைப் பற்றியும் அறிவைப் பரவச் செய்ய இந்த ஆவல் மிக உபயோகமுள்ளது. குழந்தைகளின் கேள்விகளுக்குத் தக்கவாறு பதிலளிக்கு முறையே கல்வி கற்றுக் கொடுக்கும் முறையில் ஒன்றாகும்.

இவ்வாவல் இயற்கையி னியல்பாயானது எனச் சொன்னோம். ஆதலின் பெற்றோர் தம் அனுபவங்களையும் அறிவையும் குழந்தைக் குக் கற்றுக் கொடுக்க இது நல்ல சாதகமாகும். இது வயதிற்கு வயது மாறும். ஏனெனில் குழந்தை ஒரு பொருளைப்பற்றித் தெரிந்து கொண்டவுடன் மற்றொன்றைப் பற்றித் தெரிந்து கொள்ள அவாவு வது முறையே. ஆகவே இந்த ஆவலின் வகையும் வலியும் நாளுக்கு நாள் மாறும்.

இந்த ஆவலில் மற்றோர் விஷயமுண்டு. இது இயற்கையிலே யுள்ளது. அல்லாமலும் அடக்க வொண்ணாதது. ஆகவே ஊன்றிய கவனமும் உரத்த ஸ்வாரஸ்யமும் கூடவே இருந்தாக வேண்டும். எக்காரியத்திற்கும் இன்றியமையாத மேற் சொன்ன இரண்டு குணங்களும் இந்த ஆவலால்தான் முதன்முதல் ஏற்படுகிறது. வான நூல், கணித நூல், ரசாயன நூல், ஜீவவர்க்க நூல், பூகோள நூல், இலக்கியம் என்ற எண்ணிறந்த நூல்களின் ஆராய்ச்சியில் ஆயுள் பரியந்தம் பச்சை மரத்தாணிபோல் மனம் பதிந்து, உலக விஷயத்தை உட்கொள்ளாது வாழும் சில அறிஞர்கள் இந்த ஆவலின் திறத்தை யும், உலகோபகாரத் தன்மையையும் நன்குவிளக்குகின்றனர். எனவே குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவான இந்த ஆவலைப் பெற் றோர்கள் வளர்ப்பது அவசியமாகும்.

குழந்தைப் பருவத்தில், அதாவது ஐம்புலனாட்சிப் பருவத்தில், இந்த ஆவல் பல திறப்பட்டது. ஐம்புலன்களுக்குக் கிட்டும் எந்த விஷயத்தையும் தெரிந்து கொள்ள ஆவல். குழந்தையின் வயது அதிகரிக்க அதிகரிக்க, ஐம்புலனாட்சி சிறிது வலிமை குன்றும். இப் பருவத்தில் குழந்தைகள் ஒவ்வொரு பொருள்களைப் பற்றியும், அது என்ன? இது என்ன? அது எவ்வாறு வேலை செய்கிறது? என்ற பல்வேறு கேள்விகள் கேட்டு விடை யளிக்கப்பட்டு அறிவு வளரச் செய்து கொள்ளும். சிறிது வயது அதிகமாக, குழந்தையின் ஆவல் தடைபடா திருந்ததானால், தன் இயல்புப்பற்றுக் கியைந்த சிலவற் றையே நாடும். உதாரணமாக, சில சிறுவர்கள் பெரியோரின் சரிதைகள், தேசச் சரிதைகள் முதலியவைகளிலே ஈடுபட்டு நிற்பர். சிலர் கணித நூலில் முன்னூற்று நிற்பர். சிலர் ஆடல் பாடல்களில் தேர்ச்சிக்கு ஆசிப்பர். வேறு சிலர் விளையாட்டுக்களில் முன்னணி எய்தும் முயற்சியில் மூழ்குவர். 'உலகம் பலவிதம்' அல்லவா? ஆதலின் இப்பருவம் கடந்த பின் யாதாவது ஒரு சில துறைகளிலேயே பல கேள்விகளைக் கேட்க ஆரம்பிக்கும். அவையும் நாளடைவில் சுருங்கி ஒரு துறையிலேயே நாடும் கேள்விகளாக மாறும். இத்துறை எது என்று நிர்ணயித்துக் கூறுவது இயலாது. அது சந்தர்ப்பம், சமீபத்தி லுள்ளவர்களின் கொள்கை, தூண்டுதல், குழந்தையின் தேகவன்மை, இயல்புப்பற்று முதலியவைகளில் சம்பந்தப்பட்டது.

இந்த ஆவல் குழந்தைப் பருவத்தில் வெற்றுக்கேள்விகள் ரூபமாகப் புலப்படும். 'அப்பா, அந்த மின்சாரவண்டி எவ்வாறு ஓடுகிறது? மின்சாரம் என்ருல் என்ன? அதை நம் வீட்டிற்கு ஏன் கொண்டுவரக் கூடாது?' என்று குழந்தைகள் கேட்கும். பெற்ரோர்கள் தத்தம் வன்மைக்குத் தக்கவாறும், குழந்தைக்குப் புலப்படுமாறும் சிறிது சிறிதாக விளக்க வேண்டும். தமக்கே தெரியாவிடினும், 'தெரியாது' என்று சொல்வதில் தோஷமும், ஈனமும் இல்லை. அவ் விஷயத்தை அறிந்த தம் நண்பர்களிடமாவது அனுப்புவது நல்லது. அன்றேல் தக்க வயது வந்தவுடன் புத்தகங்களிலிருந்து தாமே கற்றறிந்து கொள்ளுமாறு செய்தல் உசிதமாகும்.

இதனல் குழந்தை கேட்கும் எத்தகைய கேள்விகளுக்கும் பதில் உரைக்க வேண்டுவ தவசியமெனக் கொளல் கூடாது. மடமையினுலும், வேடிக்கைக்காகவும் சில குழந்தைகள் கேள்வி கேட்பதுமுண்டு. அது அறிந்து விடை யளித்தல் நலமாகும். அல்லாமலும் குழந்தைதானே ஊகித்தறிந்து கொள்ளக்கூடிய விஷயத்தை, அறிந்து கொள்ளுமாறும் செய்ய வேண்டியது பெற்ருேர் கடமையாகும். குழந்தையின் கேள்விகளுக்குப் பதிலுரைப்பதில், இரண்டு விஷயங்கள் கவனிக்க வேண்டும். அவை கேள்விகளைப் பாகுபடுத்தி வேண்டாத கேள்விகளைத் தவிர்க்கச் செய்தலும், நேராக உண்மையுரைத்தலுமாம்.

மேற்கூறிய ஆவலானது குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு எவ்வளவு நன்மையோ, அவ்வளவு உபத்திரவம் அக் குழந்தையின் பெற்ருேருக்கு. அது உண்மையில் கஷ்டமே. எனினும் கஷ்டம் இல்லாமல் சுக முண்டா? பெற்ருேருக்கும், குழந்தையின் கேள்விகளுக்கெல்லாம் அதைத் திருப்தி செய்யுமாறு பதில் அளிப்பது என்பதும் இல்லாமற் போகலாம்.

படித்து அறியத் தக்க பருவம் வரை படங்களினுலும், வேடிக்கை, கண் காட்சிகளினுலும், கதைகளினுலும், இந்த ஆவலை நசிக்காது வளர்த்து வருவதால், அறிவு தானகவே பரந்து விகஸிக்கும். படித்துக் கிரகிக்கத் தக்க பருவம் வந்ததும், பெற்ருேர் தம் பொறுப்பையும் கஷ்டத்தையும் சிறிது குறைத்துக்கொண்டு குழந்தையின் ஆவலைத் தீர்த்து அறிவைப் பெருக்க புத்தகங்களிலுள்ள எண்ணிறந்த பொக்கிஷங்களைத் திறந்து காட்ட வேண்டும். இச் சமயமே, ஓர் துறையில் ஆவலையும் ஊக்கத்தையும் திடப்படுத்துவதற்கு முக்கியமானது. அதற்குள் ஒரு யுவகனது மனோவல்லமையும், இயல்புப் பற்றும் எத்துறையில் வலுத்திருக்கிறது எனப் பெற்ருேர் ஒருவாறு ஊகித்துக்கொள்ள போதுமான இடமும் காலமு முண்டு. அதை அறிந்து, அத்துறையில் அவனது ஊக்கம், கவனம், பற்று முதலியவை பலப்பட்டு வளருமாறு பணிப்பது பெற்ருேர் கடனகும்.

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருக்கச் செயல்'

—குறள்

பல துறைகளில் பெருங் கியாதியை அடைந்து வியக்கத் தக்க அபிவிருத்தியைக் காட்டியுள்ள பெரியோரின் வாழ்க்கை வரலாறுகள் மேற் சொன்னவைகளை நிரூபித்துக் காட்டுகின்றன. எனவே இந்த ஆவலானது ஒருவனது பிரத்தியேகத் திறமைகளை (சிறப்பியல்புகளை)ப் புலப்படுத்துவதற்கு உபகாரணமாயும், அத்திறமைகளைத் திடப்படுத்துவதற்கு ஒரு வழியாகவும் ஆகிறது.

குழந்தைப் பருவம் கடந்த பிறகு, இந்த ஆவல் வேறு ரூபமாகக் காணப்படும். கதைகள், சரிதைகள் கேட்க விரும்பல், சுற்றுப் புறத்திலுள்ளவைகளைப் பற்றி விவரமாக அறிந்துகொள்ளல், மலைக் காட்சி, காடுகளின் காட்சி முதலிய இயற்கை அழகுகளின் காட்சி இன்பத்தைப் புத்தகங்களிலிருந்து அறிந்து கொண்டபின், பிரத்தியட்சமாய்ப் பார்க்க அவாவுதல், சஞ்சாரம் செய்ய இச்சித்தல் முதலியவை போன்ற பல்வேறு வகையாகக் காணப்படும்.

இவைகளிற் பெரும்பாலும் எல்லோருக்கும் கிட்டியவையே. தற்காலத்தில் ஸினிமாப் படக்காட்சிகளாலும், பேசும் படக்காட்சிகளாலும் கிட்டாதவை மிகச் சில. சொற்பச் செலவில் அற்ப நேரத்தில், அநேகம் விஷயங்களை நாம் அறிவிக்க இயலுறுமாறு இருக்கிறது. கண்கூடாகப் பார்த்தல், பின்பு எவ்விஷயத்தையும் மறக்காமல், மனத்தில் ஊன்றி நிற்கச் செய்யப் பேருதவியாகும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆதலின் சிறுவர்களைக் கூடுமானவரை வெவ்வேறு காட்சிகளைப் பார்க்க அனுப்புவது நலந் தரும்.

பற்பல துறைகளில் துணிந்து, ஊணுறக்கந் துறந்து விசாரஞ் செய்யும் பெரியோரைத் தூண்டுவதும் மேற்கூறிய ஆவலே.

வெவ்வேறு சாஸ்திரங்களில் ஆராய்ச்சித் துறைகள் இருப்பது நாமறிந்ததே. இவைகள் எதைக் காட்டுகின்றன? அந்தந்த நூல்களில் இன்னும் மெம்மேலும் புதியவைகளைக் கண்டுபிடிக்க, பிடித்து உலுப்பும் ஆவலைத் துணை செய்யும் உபகரணங்களே யாகும், இவ்வாராய்ச்சி நிலயங்கள்.

நாகரிக மேன்மை, தற்கால சாஸ்திரப்பேரறிவு முதலியவைகளுக் கெல்லாம் காரணம் மேற்கூறிய ஆவலின் தூண்டுதலேயாகும்.

ஆகவே மேற்கூறிய குழந்தையின் ஆவலை வளர்ப்பதற்குப் போதுமான சந்தர்ப்பங்களும், சௌகரியங்களும் பெற்றோர்கள் இயற்றுவது தகைமையாகும்.

அநுபவங்களைப் பெருக்குமாறும், ஆவலை ஊக்குமாறும் தொழில் முறைகளில் பயிற்றல், பிரயாணம் செய்யச் செய்தல், சினிமா பேசும் படக்காட்சி முதலியவைகளைப் பார்க்கச் செய்தல், பிரயாண சம்பந்தமான புத்தகங்களைப் படிக்கச் செய்தல், சமாசாரப் பத்திரிகைகளை வாசிக்கச் செய்தல் முதலிய சில முக்கியமாகும்.

பேராசையுள்ள குள்ளநரி

By Pandit S. S. Arunagirinathar

[All Rights Reserved by the author]

ஒரு காட்டில் ஒரு குள்ளநரி இருந்தது. அந்தக் குள்ளநரிக்கு ஒரு நாள் தின்பதற்கு ஒன்றும் அகப்படவில்லை. அதனால் அதற்கு அதிக பசி உண்டாயிற்று. இரைக்காக அது எல்லா இடங்களிலும் அலைந்து திரிந்தது. கடைசியாக அது ஒளிந்து ஒளிந்து ஓர் ஊருக்குள் போயிற்று.

ஊரின் கடைசியில் ஒரு கோழி உலவிக்கொண்டு இருந்தது.

அந்தக் கோழியைக் குள்ளநரி பார்த்தது. உடனே அது ஒருவருக்கும் தெரியாமல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தக் கோழியைக்

கௌவிக்கொண்டது. பிறகு அது ஒரே ஓட்டமாக ஊரைவிட்டு ஓடியது. அது ஓடும்போது அதன் வாயில் இருந்த கோழி செத்துப் போயிற்று.

காட்டுக்குள் போய்க் கோழியைக் கடித்துக் கடித்துத் தின்னலாம் என்று குள்ளநரி நினைத்தது. அதனால் அது எங்கும் நிற்காமல் ஒரே ஓட்டமாக ஓடியது. அது ஓடிய வழியின் பக்கத்தில் ஓர் ஆறு உண்டு. அந்த ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டு இருந்தது. ஆற்றங்கரை ஓரத்தில் தண்ணீரில் ஒரு பெரிய மீன் துள்ளித் துள்ளிக் குதித்தது. அந்த மீனை குள்ளநரி பார்த்தது. அதையும் பிடித்துத் தின்ன அந்தக் குள்ளநரி ஆசைப்பட்டது.

உடனே குள்ளநரி தன் வாயில் இருந்த கோழியைத் தரையில் வைத்தது. பிறகு அது மீனைப் பிடிக்க ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. அதனிடம் அகப்படாமல் மீன் தண்ணீரில் மறைந்துவிட்டது. அந்தச் சமயத்தில் ஒரு கழுகு ஆகாயத்தில் பசியோடு பறந்துகொண்டு இருந்தது. குள்ளநரி தரையில் வைத்த கோழியை அந்தக் கழுகு

பார்த்தது. உடனே அது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தக் கோழியைத் தூக்கிக்கொண்டு பறந்து போயிற்று.

அதைக்கண்ட குள்ளநரி ஏமாந்து ஆகாயத்தைப் பார்த்தது!

அளவுக்குமேல் ஆசைப்பட்டால் உள்ளதும் போய்விடும்.

சோதிடம் சோணாசலம்

[ஸன்]

உங்களுக்கு வருஷ வாரி பலன் பார்க்க வேண்டியிருந்தாலும் சரி, மாத வாரி பலன் பார்க்க வேண்டியிருந்தாலும் சரி, சோதிடம் சோணாசலப் பண்டிதரிடமே செல்லுங்கள்.

சோணாசலப் பண்டிதர் என்றாலேயே ஆ! அவரா? மகா சாமர்த்திய சாலியாயிற்றே என்று ஒரு சிறு குழந்தையும் சொல்லும். சோதிடம் சொல்வதில் மகா பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவனுக்கு நிகர் இந்த ஜில்லாவிலே ஒருவர்கூட இல்லை. உங்கள் முகத்தைப் பார்த்த உடனேயே உங்கள் அதிர்ஷ்டத்தைக் கூறி விடுவார். கைரேகைகளைப் பார்த்தவுடன் கடகரேகை, மகா ரேகை, அக்ஷ ரேகை என்று அலசி பாட்டாய்ப் பாடுவார். சோணாசலப் பண்டிதர் பெயரும் கீர்த்தியும் பெருகவே, அவர் அளவற்ற இறுமாப்பு அடைந்தார். அன்றையலிருந்து தினசரி பத்திரிகையிலும் தமது விளம்பரத்தைப் பிரசுரித்தார். சோணாசலத்தின் கர்வத்தை அடக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானித்தோம். அடுத்த நாள் கீழ்க்கண்டபடி ஒரு கடிதம் எங்களால் அனுப்பப்பட்டது.

விசிரி,

5—7—33.

அன்பார்ந்த,

அகிலமெலாம் புகழ்ப்பெற்ற சோதிடப்புலி சோணாசலப் பண்டிதருக்கு, அடியேன் விசிரி நெட்டைவாலார் எழுதியது. உபயகுசலோபரி. என்னுடைய ஜாதகக் குறிப்பை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அதன் மாதவாரி பலனை உடனே எழுதி வி. பி. யில் அனுப்பக்கேட்டுக் கொள்ளுகிறேன். இதன் பலன்களைப் பார்த்துக் கொண்டு இன்னும் எங்கள் வீட்டார்களுடையவும் நண்பர்களுடையவுமாகிய இருபது ஜாதகங்களுக்கும் பலன் எழுதவேண்டி

யிருக்கிறது. தயவு செய்து உடனே வி. பி. யில் ஜாதக பலனை அனுப்பவும்.

தங்கள் உண்மையுள்ள,

நெட்டைவாலார்.

பத்து தினங்கள் சென்று வி. பி. வந்து சேர்ந்தது. எங்கள் மீட்டிங்கில் 'பாஸ்' செய்ததுபோல அதைக் கொஞ்சம்கூட யோசிக்காமல் திருப்பி யனுப்பி விட்டோம். பின் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் வந்தது.

சோதிடபுரி,
15—7—33.

ஸ்ரீமான் நெட்டைவாலாருக்கு,

தங்கள் விருப்பப்படியே வெகு நன்றாய் ஜாதகம் கணித்து அனுப்பி யிருந்தும், வி. பி. திரும்பிவந்த காரணம் தெரியவில்லை. இந்தக் கவர்ன்மெண்டின் கீழ் உள்ள எல்லாத் தபால்காரர்களும் சுத்த சோம்பேறிகள். அவர்கள் உங்களைக் கேட்காமல்கூட வி. பி. யைத் திருப்பி யனுப்பி யிருப்பார்கள். ஆகவே தாங்கள் எழுதினால் மீண்டும் வி. பி. யை யனுப்புகிறேன்.

தவிர நீங்கள் இருபது ஆர்டர்கள் அனுப்பினால் 33-கமிஷன் அளிக்கிறோம்.

இப்படிக்கு,
தங்களன்புள்ள,
சோணசலம்.

இக்கடிதம் எங்கள் கூட்டத்தில் படிக்கப்பட்டது. எங்கள் சபையோரெல்லாம் கை தட்டி நகைத்தனர். மீண்டும் ஒரு கடிதம் பண்டிதருக்கு அனுப்பப்பட்டது.

வி சி ரி,
19—7—33.

அன்பீர்,

தங்கள் கடிதம் கிடைத்தது. எனக்கு சோதிடமோ, அல்லது ரேகையோ பார்த்து பலன் அறிய வேண்டுமென்ற ஆவல் கிடையாது. தங்கள் எதிர் கால சோதிடத் திறமையை அறியும் பொருட்டே அந்த ஆர்டரை அனுப்பினேன். இப்பொழுது தங்கள் சோதிடம் மூன்று இடத்தில் பொய்த்துப் போய்விட்டது. ஒன்று எனக்குச் சோதிடம் பார்க்க வேண்டிய அவசியமே யில்லை. இரண்டு தபால்காரன் என்னிடம் வி. பி. வந்த செய்தியை யறிவித்தான்.

மூன்று என்னிடம் இருபது ஆர்டர்களில்லை. இனி நீர் இவ்வாறு ஏமாற்றுதல் வித்தை செய்தால் இதை விளம்பரக் கட்டணத்தோடு விளம்பரப்படுத்தி விடுவேன்.

நெட்டைவாலார்.

அன்றையிலிருந்து சோணாசலப் பண்டாரின் விளம்பரத்தைக் காணோம். பதிலையுங் காணோம். சோதிடப் புலியும் குகையில் உறங்க ஆரம்பித்து விட்டது.

சதாசிவன்:—அடே ராமா! என் ஆத்துக்காரி அழகாக இல்லையே. அழகு பெறுவதற்கு என்ன செய்வது!

ராமன்:—அழகு பெற வேண்டுமானால் பதினைந்து நாளைக்குச் சாதமெதுவும் சாப்பிட விடாதே.

சதாசிவன்:—அவ்விதம் செய்வதால் இறந்துவிட மாட்டாளோ?

ராமன்:—ஏன் இறக்கிறாள்! 'உண்டி சுருங்கல் பெண்டிற் கழகு' என நமது மூதாட்டி கூறியபடி அழகு பெறுவது நிச்சயம்.

—RM. SM. கதிரேசன்

உபாத்தியாயர்:— சிறுவர்களே மோக்ஷத்துக்குப் போக இஷ்டப்படுகிறவர்கள் கையைத் தூக்குங்கள்.

வகுப்பில் (ஒருவன் தவிர) எல்லோரும் கையைத் தூக்கினார்கள்.

உபாத்தியாயர்:— ஏன், நீ மோக்ஷத்துக்குப் போக விரும்பவில்லை?

பையன்:—இல்லை சார். எங்கம்மாள் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வரச் சொன்னாள் சார்.

—ஜி. சுப்பையராஜு



ராமன்:—இன்றுடன் உன் சந்தோஷமானதும் கவலையற்றதுமான நாட்கள் போய்விடுகின்றன.

கிருஷ்ணன்:—நீ சொல்வது விந்தையாயிருக்கே. நாளைக்குத் தானே எனக்குக் கல்யாணம்.

ராமன்:—எனக்குத் தெரியும். அதனால்தான் சொன்னேன்.

—மே. ஜானகிராமன்

கந்தன்:—நண்பா! கள் குடிப்பது மகா பாவம்.

நந்தன்:—அதைத்தான் நான் தள்ளிவிட்டேனே!

கந்தன்:—எங்கே! வயிற்றினுள்ளா?

—ஜே. பி. கிருஷ்ணன்

ஒரு பிரசங்கி பிரசங்கம் செய்து கொண்டே வந்தார்:

எதிர்க்கக்ஷி ஆள்:— எருமைக் கடா! மீது மழை பொழிவதைப் போல்! சும்மா வழவழ வென்று பேசாதீர்.

பிரசங்கி:—ஓ! நீர் எருமைக் கடாவா? அப்படியானால் இதோ நிறுத்தி விட்டேன்.

—எம். தனலக்ஷ்மி

வெகு நாளாக இராமு காய்ச்சலால் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. சில நாள் கழித்து வந்தான். ஹிஸ்டரி வாத்தியார் அவனைப் பார்த்து' இராமு நீ எவ்வளவு நாளாக வரவில்லை' என்றார்.

ராமு:—சார்? அசோகர் கலிங்க தேசத்தைப் படை யெடுத்து ஜயித்ததிலிருந்து வரவில்லை, எனச் சாதுர்யமாகப் பதிலளித்தான்.

—ஆர். எஸ். சாமிநாதன்

ஆசிரியர்:—பையா! இந்தப் பிளாக் போர்டின்மேல் 'கோணம்' களுள் ஒன்றை வரை.

பையன்:—(பிளாக் போர்டில் வரைந்தது) கும்பகோணம்.

வி. ஏ. எம். எஸ். தீன்.

புருஷன்:—அடி. ஒரு படி பால் வாங்கிக் கொடுத்தேனே. இங்கே ஒரு கோப்பையில்தானே கொஞ்சம் கொண்டுவந்து வைத்திருக்கிறாய். மீதி பாலை என்ன செய்தாய்?

மனைவி:—குடித்து விட்டேன்.

புருஷன்:—அவ்வளவையும் எப்படிக் குடித்தாய்?

மனைவி:—இப்படித்தான் குடித்தேனென்று அதையும் எடுத்துக் குடித்து விட்டாள்.

வி. ஏ. எம். எஸ். தீன்.

புஷ்பபாய்:—எண்டீ! கட்டழகி, கடைக்குப் போய் பம்பாய் பட்டு வாங்கி வருவதாகச் சொன்னாயே. என்னப்பட்டு வாங்கிக் கொண்டு வந்தாய்?

கட்டழகி:— சொல்லுவதைக் கேள் அடி அம்மா! பட்டு வாங்கவில்லை. ஆனால் கடையிலுள்ள ஜன நெருக்கத்தினால் அதிக கஷ்டப் பட்டுக் கொண்டு வந்தேன்.

—எஸ். ஜே. ராஜ்

கிட்டன்:—ஓய். உம் பேரென்ன?

மாமா:—செங்கல் ராவ்.

கிட்டன்:—அப்படியானால் எத்தனைச் செங்கல்ராவ் சேர்ந்து ஒரு சுவர்ராவ் ஆகும்?

—டி. ஆர். செல்லம்மாள்

வழிப்போக்கன்:—என்ன ஐயர்வாள்! உஷ்ணம் அதிகமாயிருப்பதால், தங்களால் பொருக்க முடியவில்லையோ?

ஐயர்:—உஷ்ணம் அப்படி ஒன்றுமில்லை. இன்று ஓர் இடத்தில் வாதகஷணையும் சாப்பாடும் அதிகம். அதனால் நடக்கவும் படுக்கவும் மிகக் கஷ்டமா யிருக்கிறது.

வழிப்போக்கன்:—அப்படி ஏன் கஷ்டப்பட வேண்டும். வாயில் இரண்டு விரலை விடுங்கள். வயிற்றி லிருப்பது வெளியில் வந்ததும் கஷ்டம் நீங்கும்.

ஐயர்:—அடே! பைத்தியமே! வாயில் இரண்டு விரல் போக வழி யிருந்தால் இரண்டு வடைகளை விட்டிருப்பேனே. —வி. சுந்தரம்

டாக்டர்:—என்னை டெலிபோனில் அழைத்தது தாங்கள் தானா? உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?

செட்டியார்:—மெலிந் திருக்கும் எனது தேகத்தை அபி விருத்தி செய்யலாம் என எண்ணி உங்களை அழைத்தேன். நீங்கள் என்னைவிட மெலிந்திருக்கிறீர்களே! நீங்கள் முதலில் தங்கள் தேகத்தைப் புஷ்டி செய்துகொண்டு என்னிடம் வாருங்கள்.

—எம். வாசுதேவன்

மனைவி:—காபி வைப்பதற்கு எவ்வளவு நேரம்?

புருஷன்:—கைக் குழந்தை பாலுக்கு அழுகிறதே!

மனைவி:—நீரே கொடுத்து விடும்.



—பி. ஜி. வேங்கடபதி

நீதிபதி:—கொலை நடந்த இடத்திற்கு நீ சென்றாயா?

குற்றவாளி:—ஆம்! போனேன்.

நீதிபதி:—உன்னை யார் அங்கு அழைத்துச் சென்றது?

குற்றவாளி:—இங்கு வந்து கைகட்டி நிற்க வேண்டுமென்று போட்டிருந்த என் தலைவிதிதான்.

—திருவை கே. வைத்தியநாதன்

மானேஜர்:—அடே பியூன், ஏன் இன்று 2 மணிக்கு வந்தாய்?

பியூன்:—அம்மாளுக்கு வேலை செய்துவிட்டு வந்தேன்.

மானேஜர்:—என்னடா, உனக்கு நான் எஜமானனா? அல்லது அம்மாள் எஜமானியா?

பியூன்:—எனக்கு ஐயா எஜமான். ஐயாவுக்கு அம்மா...!

—வி. சுந்தரம்

ஒருவர்:—காணுததை யெல்லாம், கந்த புராணத்தில் காணலாம்.

மற்ருெருவர்:—ஐயா! அப்படியானுல் என்னுடைய சட்டை ஒன்று காணுமல் போய்விட்டது. தயவு செய்து அது அங்கு இருக்கிறதா என்று பாருங்கள்!

—ஜே. பி. கிருஷ்ணன்

ராமசாமிப் பிள்ளை 'குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு வா' என்று தன் வேலைக்காரனுக்குக் கட்டளை யிட்டார்.

வேலைக்காரன் குதிரையை மரத்தில் கட்டிப்போட்டுவிட்டு 'குதிரையே! இதான் தண்ணீர் பார்த்துக்கோ' என்று நான்கு முறை அதற்குத் தெரியும்படி தண்ணீரைக் காட்டினுன்.

—எம். வாசுதேவன்

குடிகாரன் குடித்து விட்டு வீட்டில் ஆடுவதைப் பார்த்த

மனைவி:—இன்னுமா நீங்கள் குடிப்பதை விடவில்லை?

குடிகாரன்:— உனக்குத் தெரியாது கேளுடி! 'நான் மட்டும் குடிக்கிறே னென்று நினைக்காதே கண்ணு! மூன்று நான்கு தலை முறையாக நடக்குதே கண்ணு!'

—சி. மதுரை

தகப்பனுர்:—டேய் கிச்சு எங்கேபோ யிருந்தாய்?

கிச்சு:—ராமுவுடன் போயிருந்தேன்.

தகப்பனுர்:—டேய் ராமு எங்கே சென்றிருந்தீர்கள்?

ராமு:—'நான் கிச்சுவுடன் போயிருந்தேன்.

தகப்பனுர்:—நீங்கள் இருவரும் எங்கேபோ யிருந்தீர்கள் என்ருல்............'

ராமு கிச்சு:—சேர்ந்துபோ யிருந்தோம்.

—ஆர். எஸ். சாமிநாதன்

உபாத்தியாயர்:—ராமா, இடாலி எங்கிருக்கிறது?

சாப்பாட்டு ராமன்:—காப்பிக்கிளப்பில் ஸார்.

—கே. ஆர். புருஷோத்தமன்

தந்தை:—அவன் லீலாவை மணம் புரிந்துகொண்டால் தம்பிடி கூட அவனுக்கு ஆஸ்தி வைக்கமாட்டேன். இதை அவனிடம் கூறி விடு.

தாய்:—இதை லீலாவிடமே கூறிவிடுகிறேன்.

—மே. ஜானகிராமன்

புருஷன்:—ஏண்டீ, பலகாரம் ஒன்றும் செய்யாமல் வெறும் மாவில் உப்பைப் போட்டு வச்சுருக்கே?

அசட்டு மனைவி:—நீங்க உப்பு மாத்தானே கேட்டியள்.

—வி. எம். ராஜன்



ஜட்ஜ்:—கைதியே! உனக்கு ஆறு மாத தண்டனை விதிக்கிறேன். நீ ஏதாவது சொல்ல வேண்டிய திருக்கிறதா?

கைதி:—ஒன்று மில்லை எஜமான். சிறையில் என்னுடைய அறுபதாவது ஆண்டு முடிவடைகிறது. எனது சஷ்டிபூர்த்தி விழாவைத் தமிழ்நாடு முழுதும் கொண்டாட ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

—எம். வாசுதேவன்

பையன்:—என்னை அக்கா கழுதை என்று சொன்னாள் (என அழுதான்)

தந்தை:—நீ கழுதை யல்ல. கண்ணாடியில் பார். நீ சரியான மனிதன்.

—பி. ஜீ. வேங்கடபதி

தாத்தா.—ஏண்டா முத்து, இன்றைக்கென்ன பள்ளிக்கூடம் இல்லையா? அதுதான் கழுதை மேய்க்க புறப்பட்டு விட்டாயோ?

பேரன்:—என்ன தாத்தா என்ன? அது எங்கே யிருக்கு? வேலையில்லாத் திண்டாட்டக் காலமல்லவா! இப்போதே புகுந்து கொள்ளல் நன்மைதானே?

—நாராயண ராயர்

ஆசிரியர்:—சதா நீர் கொட்டிக்கொண் டிருக்கும் இடத்தைப் பார்த் திருக்கிறாயா?

பையன்:—ஆ ஹா! பார்த்திருக்கிறேன். என் பாட்டனார் நாசித்துவாரத்தி லிருந்து பொடி கலந்த நீர் ஓயாமல் கொட்டிக் கொண்டே யிருக்கும்.

—திருவை. கே வைத்தியநாதன்



மனேஜர்:—ஏண்டா கழுதை. உன்னை யார் என் வீட்டுக்கு வரச் சொன்னது.

பியூன்:—ஐயாதான் வரும்படிச் சொன்னீர்கள்.

—வி. சுந்தரம்

பிரயாணம் செய்பவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் 'என்ன ஐயா இந்த ஸ்டேஷனுக்கு ஒவ்வொரு வண்டியும் நேரங் கழித்து வருகின்றன' என்றார்.

ஸ்டேஷன் மாஸ்டர்:—ரயில் சரியான நேரத்திற்கு வந்து விட்டால் இங்கே கட்டி யிருக்கும் தங்குமிடங்கள் (Waiting rooms) எப்படி உபயோகப்படும்?

—ஏ. எஸ். சாமிநாதன்



கிள்ளைவிடு தூது

[திரு. டி. எஸ். ஸ்ரீபால்]

1. பச்சைநிறக் கிளியே—பன்மொழி
பயின்றநற் கிளியே
இச்சை கொண்டே பலரும்—போற்றிடும்
இன்பத்தொனிக் கிளியே

2. மானிடக் கூட்டமெலாங்—கிளியே
மாண்பொடு வாழுதற்கே
ஊனமிலாச் சட்டங்கள்—கிளியே
ஒழுங்கா யமைத்துக் கொண்டார்

3. ஊமைப் பிராணிகளாய்க்—கிளியே
உழைக்கு மெம்மவர்க்கோ
நாமத்துக் காகினுமே—கிளியே
நாட்டிலோர் சட்டமில்லை

4. சட்டசபை சென்றே—கிளியே
சந்ததம் வாதிக்கவே
திட்டமுட னுனையே—கிளியே
தேர்ந்தெடுத்தோம் வாராய்!

5. மாஞ் செடி கொடிகள்—கிளியே
மானிடர்க் காகாரமே
அறங் குறைந்தவர்கள்—கிளியே
ஐயோநம் புண்ணையுண்பார்

6. கோயிலென் றொன்றைக்கட்டிக்—கிளியே
குட்டிச் சாமிகள் நட்டு
வாய்மை யற்றோ ரெம்மைக்—கிளியே
வதைக்கும் விதம் கேளாய்

7. குட்டிகுடிக்குந் தெய்வம்—கிளியே
கொல்லா துறுப்பறுக்கும்
அட்டைபோலக் கடித்துக்—கிளியே
ஆட்டி வதைக்குந் தெய்வம்

8. சொல்ல நாவரவில்லை—கிளியே
சூலாட்டைக் கொல்லும் தெய்வம்
பல்லினாலே குடலைக்—கிளியே
பற்றியிழுக்குந் தெய்வம்.

9. ஈட்டியாலெம்மைக் குத்தி—கிளியே
ஏந்தித் திரியும் தெய்வம்
ஊட்டிதனைப் பற்றியே—கிளியே
உளியாலே கொத்துந் தெய்வம்

10. கல்லில் தலை பிணைத்தே—கிளியே
கழுத்தை வெட்டுந் தெய்வம்
எல்லைக்கல் சுற்றியெங்கள்—கிளியே
இரத்தச் சோறுண்ணுந் தெய்வம்

11. அன்பே சிவமென்னுங்—கிளியே
அரனுடைக் கோயிலெலாம்
துன்பமியற்றுந் தெய்வம்—கிளியே
தொத்திப் பலி வாங்கும்

12. வயிறு மெரிகின்றதே—கிளியே
வாழவும் ஆசையில்லை
உயிரைக் காத்திலேந்தி—கிளியே
ஓடி யலைகின்றோம்

13. எத்தனைநாள் பொறுப்போம்—கிளியே
இந்தத் தெய்வங்கள் தொல்லை
சத்திய சட்டசபைக்—கிளியே
சார்ந்துநீ செப்பிடுவாய்

காய்ச்சல்

[டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ஜெர்மனி தேசத்தில் அவதரித்த லூவிஸ்கூனி என்பவர் 'சைன்ஸ் ஆப் ஈலிங்' என்னும் ஒரு நூல் எழுதியிருக்கின்றார். அந் நூலில் கூறியவண்ணம் சகல தேசத்தவர்களும் அனுபவத்தில் செய்து பார்த்து குணத்தைக் கண்டிருக்கின்றனர். அவர் கூறும் சிகிச்சையை மக்களிடம் செய்துவரும் வைத்தியர்களும் எல்லா நாட்டிலும் காணப்படுகின்றனர்.

அவர் கூறும் நோயின் காரணங்களையும் அவற்றிற்குச் சொல்லிய சிகிச்சைகளையும் அனுசரித்து ஒரு சிலவற்றை இங்கே கூறுகிறேன்.

காய்ச்சல் என்பது சரீரத்தில் காணப்படும் அளவுக்கு மீறிய காங்கையே யாகும். சாதாரண மனிதருக்கு (98½ டிக்கிரி) உஷ்ணம் சரீரத்தில் இருப்பது பொருத்தம். அதற்குமேல் 100-ம் 104-ம் ஆக உஷ்ணம் காணப்பட்டால் அது சமயம் காய்ச்சல் என அழைக்கப் படுகின்றது.

இதனையே ஆதாரமாய் வைத்துக்கொண்டு அதிக உஷ்ணம் சரீரத்தில் காட்டப்படுவதையே காய்ச்சல் எனக்கூறினால் காய்ச்சலானது பல பெயர்களால் அழைக்கப்பட வேண்டிய காரணமே இல்லை. ஆதலால் அதிகப்படியான உஷ்ணத்தை மாத்திரம் காய்ச்சல் என்று சொல்லிவிட முடியாது. எனவே காய்ச்சல் என்பதற்குக் காரணம் கண்டு பிடிக்க முயலும்போது சரீரத்தின் உள் பாகத்திலே ஓரிடத்தில் இரணம் ஏற்பட்டிருப்பதாய் உணருகிறோம். அந்த இரணமானது இருக்கும் இடத்தை யனுசரித்து பெயர்களை வைக்கின்றனர். அதன்படி இந்தியர் 64 காய்ச்சல் என்று சொல்லுகின்றனர். இதில் முக்கியமாகச் சில பெயர்களே பெரும்பாலும் கூறப்படுவதாய்த் தெரிகின்றது. மேல் நாட்டு வைத்தியர்களும் காய்ச்சலின் பெயர்கள் சுருக்கமாகவே வைத்திருக்கின்றனர். அவற்றுள் சுவாசக் குழாயில் ஒரு பக்கம் ஏற்பட்ட இரணத்திற்குச் சிங்கல் நிமோனியா (கபசுரம்) இரண்டு பக்கம் ஏற்பட்ட இரணத்திற்கு டபுல் நிமோனியா (கபவாதசுரம்) வயிற்றில் பித்தப்பையில், மலப்பையில், கல்லீரலில், மண்ணீரலில், கர்ப்பப்பையில், சிரசில் ஆகிய இடங்களில்

உண்டாகும் இரணங்களுக்கு ஏற்றவாறு பெயர் வழங்கப்படுவது வழக்கத்தி லிருந்தாலும் அவற்றின் சிகிச்சை மாத்திரம் பல வகையாகக் காணப்படுகின்றது. சாதாரணமாய் ஆங்கில வைத்தியர்கள் அதிகப்படியான காய்ச்சல் இருக்குமாளுல் மூளையில் கோளாறுகள் ஏற்பட்டுவிடும் எனக் கருதி காய்ச்சலைக் குறைக்கக் காய்ச்சலின் காரணத்தைக் கவனியாமல் தற்காலிக அவசர நிமித்தம் தலையில் ஐஸ் கட்டுவதும், பெஞசிடின், ஆஸ்பைரின் முதலான மருந்துகளை உபயோகிப்பதும் சர்வ சாதாரணமாய் இருக்கின்றது. இம் முறையை ஓமயோபதி வைத்தியர்களும், ஜல சிகிச்சை வைத்தியர்களும், நேச்சரோபதி சிகிச்சையாளர்களும் அழகாகக் கண்டிக்கின்றனர்.

காய்ச்சலின் காரணம் கண்டுபிடிக்க முடியாத காலத்தில் வைத்தியர்கள் பொதுவாகக் காய்ச்சலைத் தணிக்கக்கூடிய மருந்துகளைக் கொடுப்பது வழக்கமாய் இருக்கின்றது. இவ் வழக்கம் மேல் நாட்டார்களிடம் அதிகமாய்க் காணலாம். காய்ச்சல் நீடித்த காலத்தில் தான் காய்ச்சலின் காரணத்தை யறிய இரத்த பரிசோதனையும் கோழை பரிசோதனையும் செய்ய முயல்கின்றனர். அப் பரிசோதனையால் இரத்தத்தில் இருக்கும் புழுக்களினிடத்தில் காணப்படும் விஷத்தைக் கொண்டு நோயைக் கண்டுபிடிக்கின்றனர்.

மேல் நாட்டார் நோயின் காரணம் கண்டு பிடிக்கும் வரையில் காய்ச்சலைக் குறைக்கக்கூடிய மருந்துகளாகிய ஆஸ்பரின் பெஞசிடின், ஐஸ் முதலான மருந்துகளைக் கொடுப்பதுபோல இந்திய வைத்தியர்கள் நோயின் காரணம் கண்டுபிடிக்கும் வரையில் காய்ச்சலைத் தணிக்கக் கூடிய மருந்துகள் கொடுப்பதற்குத் தக்க மருந்துகள் இல்லையெனச் சிலர் நினைக்கின்றனர். அது முற்றும் தவருகும்.

பெஞசிடின், ஆஸ்பைரின் மருந்துகளுக்குச் சமானமான மருந்து இந்தியாவில் இருக்கின்றது. அது எதுவெனில் மருதம் பட்டையே யாகும். (அர்சுஞ டெர்மினேட்டா)

மருதம் பட்டையை ஒரு பலம் எடுத்துக்கொண்டு இடித்து $\frac{1}{4}$ படி ஜலம் விட்டு $\frac{1}{8}$ படியாகக் காய்ச்சி ஒரு அவுன்சு விகிதம் 4 மணிக் கொரு தரம் கொடுக்க ஆஸ்பைரின் எப்படி வேர்வையை உண்டுபண்ணிக் காய்ச்சலைக் குறைத்து உடம்பு வலி, தலை வலிகளைப் போக்குகின்றதோ அதன்படியே இக் கியாழமும் செய்கின்றது. ஆதலால் மருதம் பட்டை ஆஸ்பைரின் மருந்தின் குணத்திலும் தாழ்மைப்பட்ட தாகாது என்பதுடன் ஆஸ்பைரினைப்போல் இருதய பலயீனத்தை உண்டு பண்ணுது என்பதால் உயர்வுடையதாம்.

காய்ச்சலின் வேகம் தணிய மிளகு கியாழத்தில் நல்ல வெல்லம் சேர்த்துக் கொடுப்பது வழக்கம்.

வியர்வையால் காய்ச்சலைக் குறைக்க வேது பிடிப்பது வழக்கம் அத்தகைய வேது பிடிப்பதில் பலவகை யுண்டு. வெந்நீராவி, செங் கல்லைச் சுட்டு நீரில்போடும் வகையில் உண்டாகும் ஆவி, தீபத்தின் புகையால், (தீபவத்தியில், கரிமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி முதலான வஸ்துக்களைச் சுத்தின வத்தியைக் கொளுத்தல்) பாலின் ஆவி ஆகிய இவைகளால் காய்ச்சலைத் தணித்து விடுதல்.

மூலைப்பாலைத் துணியில் நனைத்துத் தலையிலும் நெற்றியிலும் போடுதல். வயிற்றிலும் மாரிலும் வெந்நீர் ஒத்தடம் கொடுத்தல். சுத்த நீரால் உடம்பைத் துடைத்தல் ஆகிய காரியங்ககளால் காய்ச்சலைக் குறைப்பது வழக்கம். (தொடரும்)

பெரியசாமியின் மனைவி கோயிலுக்குப் போவதற்காகப் பழம் தேங்காய் முதலியவை சேக ரித்து வைத்திருந்தாள். பெரிய சாமி அவைகளை எடுத்துத் தின்ன ஆரம்பித்தான். அதை யறிந்த அவன் மனைவி கோபத்துடன்:- 'நான் சாமிக்கு வைத்திருந்ததை நீங்களேன் தின்கிறீர்கள்' என் ருள்.

பெரியசாமி.—நீ சாமிக்குத் தானே வைத்திருந்தாய்? அதனுல் தான் நான் தின்கிறேன். நான் மட்டும் பெரிய சாமி யல்லவா? கோயிலில் இருந்தால்தான் சாமியா?

—கா. குமரன்

அரிசி கடைக்காரர்:—ஏன் ஐயா! எல்லாச் சாமானும் மலிவா யிருக்கிறதே. இட்டலி மட்டும் ஏன் காலணுவுக்கு இரண்டு வீதம் கொடுக்கக் கூடாது?

ஹோட்டல்காரர்:—ஐயா! நீங்கள் மட்டும் ஏன் அணுவுக்கு நாலு படி அரிசி வீதம் விற்கக் கூடாது?

—திருவை. கே. வைத்தியநாதன்

கட்டுரை எழுதும் நேயர்களுக்கு

[திரு. நா. மதுரமுத்துப்பிள்ளை]

பத்திரிகாயுகம் என்று கருதப்படும் இக்காலத்தில் நமது தாய்ப் பாஷையில் வெளிவந்துலவும் தினசரி வாரப் பத்திரிகைகளும், மாதாந்த சஞ்சிகைகளும் மிகப் பல. இவைகளில் பற்பல விதமான நோக்கங்களும் மனப்பான்மையும் கொண்டவர்கள் கட்டுரைகள் எழுதிவருகின்றார்கள். இக் காலப் போக்கையும் சீர் திருத்தங்களையும் உள்ளுரையாக வைத்து இலக்கண வழுவின்றி அறிவாளிகள் படித்து மகிழும் விதமாகக் கட்டுரை எழுதுவோர் சிலர். விஞ்ஞானம், ரஸாயனம், சங்கீதம், கணிதம், சிற்பம் முதலிய கலைகள் சம்பந்தமான கட்டுரை எழுதுவோர் மிகச் சிலர். தமது பெயர் பத்திரிகையில் வெளிவருவதைப் பார்த்து மகிழுவ தொன்றையே பிரதான நோக்கமாகக் கொண்டு ஆபாசக் களஞ்சியமான—சாரமில்லாத கட்டுரைகளை எழுதியனுப்புவோர் மிகப் பலர். இவர்களில் சிறு பான்மையோருடைய கோரிக்கைகளாவது ஈடேறி விடுகின்றன. இவர்களின் கட்டுரைகளையும் சிற்சில சமயங்களில் ஏற்றுக் கொண்டு தங்கள் பத்திரிகைகளில் வெளியிடும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

கட்டுரைகள் எவ்விதம் எழுதப்படவேண்டும் என்பதைப்பற்றி ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் புகழ் பெற்ற பத்திரிகாசிரியர்களும் பேரறிஞர்களும் பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களிலொருவரான W. T. ஸ்டெட் (W. T. Stead) என்ற பெரியார் சொல்லுவதைக் கவனியுங்கள்:—

‘நீங்கள் பத்திரிகைகளுக்குக்கட்டுரை எழுதி முடித்தவுடன் அதை ஒரு தூரதேசத்திற்குத் தந்தியில் உங்களுடைய சொந்தச் செலவில் அனுப்பப்போவதாகப் பாவித்துப் பாருங்கள். அப்பொழுது என்ன செய்வீர்கள்? சொற்பெருக்க முள்ள வார்த்தைகளையும் அனாவசியமான பிரயோகங்களையும் நீக்கி விடுவீர்களல்லவா? கட்டுரை எழுதுவதிலும் இதே முறையைத்தான் கைக்கொள்ள வேண்டும். வழுவின்றி சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே

சிறந்தது. கடினமான பதங்களைக் கொண்ட நீண்ட வாக்கியங்களை எழுதுவதற்குச் சிரமப்படுவதைப் பார்க்கிலும் சுலபமான வார்த்தை களாலமைந்த சுருக்கமான வார்த்தைகளே மேல். உங்களுக்குப் போதிய பழக்கமில்லாத விஷயங்களை எழுதுவதில் நேரம் போக்க வேண்டாம். முதன் முதலாகக் கட்டுரை எழுத ஆரம்பிப்பவர்கள் தங்கள் முயற்சியில் பெரும்பாலும் வெற்றி யடைவதில்லை. இதற் காக மனத்தளர்ச்சி யடையக்கூடாது. உங்கள் கட்டுரைகள் பல தடவைகளிலும் அங்கீகரிக்கப்படாமல் குப்பைக்கூடைகளில் இடந் தேடிக் கொள்ளலாம். ஆயினும் நீங்கள் மனச்சோர்வுறுமல் மென் மேலும் மேற்கண்ட விதிகளை யனுசரித்து எழுதிக்கொண்டே இருந் தால் காலக்கிரமத்தில் உங்களுக்கு வெற்றி கிடைப்பதற்குச் சந்தேக மில்லை.'

பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட்டுரை எழுதுவதால் மட்டும் மாத மொன்றுக்கு 100 பவுனுக்குக் குறையாமல் ஊதியம் பெற்றுவரும் கிரண்ட் ரிச்சர்ட்ஸ் (Grant Richards) என்னும் ஆங்கில பேரறிஞர், 'சஞ்சிகைகளுக்குக் கட்டுரை எழுதும் விதம் எப்படி?' (How to write for magazines) என்று தாம் எழுதிய புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிருர்:—

'கட்டுரை எழுதுபவர்கள் தங்கள் வியாசத்தை எந்தப் பத்தி ரிகைகளுக்கு அல்லது சஞ்சிகைகளுக்கு அனுப்புகிருர்களோ அந்தப் பத்திரிகை அல்லது சஞ்சிகையின் கொள்கை என்னவென்பதை முதலில் கவனிக்க வேண்டும். பிறகு அவைகளில் பிரசுரிக்கப்பெறும் ஒவ்வொரு கட்டுரையும் எத்தனைப் பக்கங்களில் அடங்கி இருக்கின்றது என்பதையும் நன்கு கவனிக்க வேண்டும். பொது ஜனங்கள் விரும்பி வாசிக்கக்கூடிய கவர்ச்சியுள்ள விஷயங்களையே எழுத வேண்டும். இவ்விதிகளை நன்கு அனுசரித்து எழுதுபவர்களின் கட்டுரைகளையே பத்திரிகாசிரியர்களால் அங்கீகரிக்கப்படும்.'

கட்டுரை எழுதுபவர்கள் தங்கள் மனத்திலெழும் விஷயங்களை விளக்கமாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும், வெளிப்படை யாகவும் எழுத வேண்டும். எழுதுபவர்களின் மனத்தின்போக்கு, கல்வியின் தன்மை, குணங்கள் முதலியவற்றை அன்னேரது கட் டுரையே பிரதி பிம்பிக்கச் செய்கிறது. ஆகையால் பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுத விரும்பும் நண்பர்கள் இவ்விதிகளைக் கவனித்தால் கட்டாயம் அவர்கள் வெற்றியடையக்கூடும் என்பதற்கையமில்லை.

வெறும் பேச்சுகள்

[திரு. டி. என். கிருஷ்ணசுவாமி]

ஜனசமூகம் அழிவில்லாத சமாதானத்திற்கும், நிரந்தரமான சுகத்திற்கும் தன்னைத் தகுதியுள்ளதாகச் செய்துகொள்ள முயன்றும் அடிக்கடி அந்த முயற்சியில் தோல்வி யடைகிறது.

உலகத்தின் தற்கால சீர்கேடான நிலைமைக்குக் காரணங்கள், பொறாமையும், அதிருப்தியும், வஞ்சகமும் சுயநலமுமே. சில சமயம், இவைகளினால் அகோர யுத்தங்களில் கணக்கற்ற ஜனங்கள் மடிகின்றனர். யுத்தத்தில் வெற்றியடைந்த தேசங்கள் ஒரு பொழுதும் சுகத்தை அடைந்ததில்லை. ஏனென்றால், பகைவர்களின் நெஞ்சம், எப்பொழுதும் பழி வாங்குவதிலேயே கண்ணா யிருக்கும்.

ஆழ்ந்த சிந்தனையினால் உலக யுத்தங்கள் ஏற்படுவதில்லை. உலக க்ஷேமத்தில் கருத்தா யிருப்பவன் ஒருக்காலும் யுத்தம் புரிய மாட்டான். யுத்தங்களுக்கு அடிப்படையான காரணங்கள் பொறாமையும், சுயநலமும், அதிருப்தியுமே. அவைகளை விலக்குவதற்கு மனிதன் யுத்தத்தைத் தவிர வேறு எவ்வித முயற்சியும் செய்திருப்பதாகத் தோன்றவில்லை.

நியாயத்தை ரக்ஷிப்பதில் யுத்தங்கள் தேவையில்லை. அதற்கு மன வலிமையும், சத்தியத்தில் நம்பிக்கையும், ஆத்ம சக்தியுமே போதுமானவை. 'எதிரியின் மன நிலையைத் திருப்புவதற்கு, ஆத்ம சக்தியையும், அஹிம்சையையும் தவிர வேறு சிறந்த ஆயுதங்கள் இல்லை.'

ஒன்றும் தெரியாத கூலிக்குச் சண்டை செய்யும் மனிதர்களின் நாசத்திற்கு அவைகளுக்குக் காரணமான ராஜ தந்திரிகள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்? சாதாரண ஜனங்களின் ராஜ தந்திரிகளுடைய மதிப்பு அவைகளைப் போற்றுவனவாகவே யிருக்கும். ஏனென்றால், அவர்கள் ராஜதந்திரிகளின் மீது வைத்துள்ள நம்பிக்கை சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற தூண்டுதலினால்தான்

ஒரு தேசத்திய ஜனத்தொகையில் ஒவ்வொருவனும் மற்றொரு தேசத்தில் வாழும் மனிதர்களுக்கு எதிரியாக இருப்பது எப்படி முடியும்?

எனவே கூலிக்குப் போர் புரியும் ஜனங்களின் வீண் நாசத்திற்கு ராஜதந்திரிகள் காரணமாகின்றனர். வேண்டுமானால் ராஜதந்திரிகள் அவர்களுக்குள்ளே போர் புரியட்டும்! லக்ஷக்கணக்கான ஜனங்களைக் கூலிக்காக நாசமுறுத்துவதைவிட அதுவே மேல். ஆகையினால், ஒவ்வொரு தேசமும் அதனுடைய யுத்தசேனைகளைக் கலைத்தல் அவசியம். எப்பொழுது யுத்தசேனைகள் அவசியமில்லையோ, அப்பொழுது ஆயுதங்களினாலும் பிரயோசனமில்லை. ஆனால் உள் நாட்டில் நடைபெறும் திருட்டு, கொலை இவைகளுக்காகவும் சமூகத்தில் நடைபெறும் சிறு குற்றங்களுக்கும் ஒரு போலீஸ்படை தேவை; சம சொத்துரிமையும், சம சுதந்திரமும் இருந்தால் அதுவும் தேவையில்லை.

உலகத்தில், ஒவ்வொரு தேசமும் அதனுடைய சௌக்கியத்தைக் கோருவது மல்லாமல் உலக க்ஷேமத்தையும் கவனித்தல் வேண்டும். உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் அதிருப்தி யில்லாது தனது கடமையை யாற்றவேண்டிய சாதனங்கள் ஏற்படுமாயின் அப்பொழுதுதான் உலகம் உன்னத நிலையை அடைந்திருக்கிறது எனலாம்.

இவைகளை யோசித்தால், இப்பொழுது ஜினீவாவில் நடக்கும் ஆயுதப்பரிகாரணப் பேச்சுகள் 'வெறும் பேச்சுகள்' என்பதில் சந்தேகமே யில்லை.

ஓர் அறை வேண்டும்!





'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்'

[நளினம்]

I

'மண்பிறந்த மறிகடல்சூழ் உலகத்தில் வாழ்பவரில்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயரம் யார்பட்டார்'

'எனக்கு இப்பொழுது வயது முப்பது. எனது தாய் தந்தையர்க்குப் பிறந்து இறந்தவர்கள் போக, மூன்று பெண்களும், இரு ஆண்களும் இருந்தாலும், அவர்களில் என்னையே அவர்களது ஜீவ மணியாகப் போற்றி, ஜீவமணி என்றே பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தார்கள். யான் மகளிர்க்குரிய பருவத்தை யடைந்து, பதினான்கு வயது முற்றுப் பெற்றதும், எனது பெற்றோர்கள் என்னை உருவுந் திருவுங் கல்வியு முடைய ஒருவனுக்கு விவாகம் செய்துதர முயன்றார்கள். என்னருமைத் தாய்க்கோ என்னை அவரது அண்ணன் மகனுக்கு மணஞ் செய்வித்து மகிழ; விருப்ப மதிகம். ஆனால் என் தந்தைக்கு அவர்களிடத்தில் சம்பந்தம் வைத்துக்கொள்ளப் பிடிக்கவில்லை. அவருக்குச் செல்வ மில்லா விடினும், சிறந்த கல்வியும், தகுதியும் வாய்ந்த ஒருவனுக்கே என்னை விவாக முடிக்கத் திடமான உறுதியிருந்து வந்தது. எனக்கு மட்டும், எனது அம்மான் மகனைக் கணவனாகப் பெற அச்சமயம் விருப்பம் இருந்தது. ஏனென்றால் இளமைப் பருவத்தில் யானும், எனது அம்மான் மகனும் ஒன்றாக விளையாடி நெருங்கிப் பழகி வந்தமையால், அக்காலங்களில் வஞ்சகனாகிய அவன் என்னிடம் காதல் வார்த்தைகள் பல பேசி என்னையே விவாகஞ் செய்து கொள்வதாகவும், எக்காரணங் கொண்டும் வேறு பெண்களை

மணப்பதில்லை யெனவும், எனது தந்தை வேறு யாருக்காயினும் என்னை விவாகஞ் செய்து கொடுத்தாலும் தான் என்னை அவ்வயலானிடமிருந்து மீட்டுத் தன் காதலியாக்கிக் கொள்வதாகவும் வாக்

திருமணக் காட்சி

குறுதி கூறி, என்னை மயக்கி அவன் வசப்படுத்தி யிருந்தான். ஆதலால்தான், நான் என் தந்தை விருப்பத்துக்கு மாறாக அவனை மணக்க விரும்பினேன். ஆனால் கடைசியாக என் பதினைந்தாவது வயது

ஆரம்பத்தில் என் தந்தை ஸ்கூல்பைனல், வாசித்தவனும், தகுதி வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவனும், அழகில்லா விட்டாலும், கம்பீரத் தோற்றமுடைய 25 வயதுக்கு மேற்பட்டவனுமான ஒரு வாலிபனுக்கு விவாகஞ் செய்து தந்து அவாது எண்ணத்தை முடித்தார். அச்சமயம் என் அம்மான் மகனிடத்துக் கொண்ட பிரேமையினுல் என் மன நிலை மாறியிருந்ததால், யான் இவ்விவாகத்தில் மகிழ்ச்சி கொள்ளவே யில்லை. எனக்கு விவாகம் நடந்ததாகவே நான் எண்ணவில்லை. என் தாயின் வருத்தத்துக்கோ அளவில்லை. என் திருமணத்திற்கு எனது அம்மான் வீட்டார் வரவில்லை. மற்றும் உறவினர்களில் சிலரும் இப்புது சம்பந்தத்தால் என் தந்தையோடு மாறுகொண்டு விவாகத்துக்கு வராது நின்று விட்டனர். இதனிடையே ஒன்று கூற மறந்துவிட்டேன். எனக்கு இரு தமக்கையர் இருப்பதாகச் சொன்னே னல்லவா! அவர்களில் பெரிய தமக்கைக்கு விவாகமாகி நெடுநாளாகியும் பிள்ளை யில்லை யாதலால், அவாது கணவன் தனக்கு இரண்டாந்தாரமாக என்னை மணஞ் செய்து கொடுக்கும்படி கேட்டிருந்தார். எனது பெற்றோர்கள் அவாது வேண்டுகோளுக் கிணங்கி மறுத்து விட்டனர். எனினும், அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இவ் விஷயத்தைப் பற்றி என் பேற்றோர்களிடம் பேசி முடிவில் பயன் காணுது சண்டையிட்டுப் போவது வழக்கமாகமா யிருந்தது. இந்நிலையில் எனக்கு விவாகஞ் செய்ய நிச்சயித்திருப்பதைக் கடித மூலமாக என் தந்தை அவருக்குத் தெரிவித்ததும் அவர் அடங்காகக் கோபங்கொண்டு ஆர்ப்பரிக்கலானுர். முடிவாக என் தந்தையின் உறுதியைக் கண்டு அவர் தான் விவாகத்துக்கு வர முடியாதென்று எழுதி விட்டார். எனவே அவரும் எனது தமக்கையும் என் விவாகத்தில் கலந்துகொள்ள வில்லை.

இவ்வித கோலாகலத்தோடு என் விவாகம் முடிந்தது. எனக்கு விவாகஞ் செய்ய எனது பெற்றோர்கள் பேச்சு நடத்தியதி லிருந்தே எனக்குச் சனியன் பிடித்தது போலும்.

அது கிடக்க, மாப்பிள்ளை வீட்டில் மணம் நடந்து மறுநாள், மணமக்களாகிய யாங்க ளிருவரும் உறவினரோடு எனது இல்லத்துக்கு அழைத்து வரப்பட்டோம். மூன்ருவது நாளாயிற்று. தந்தை

யால் வரிக்கப்பட்ட எனது கணவனுக்குத் திடீரென்று வாந்திபேதி என்னும் கொடிய நோய் கண்டு எதிர் பாரா வகையில் இறந்தார். மரணத்துக்குப் போராடும் நிலையில் அவர் என்னைப் பார்க்க விரும்புவதாக உறவினர்கள் என்னிடமும், என் தந்தையிடமும் சொன்னார்கள். ஆனால் யான் அவரைக் காண முடியாதென்று மறுத்து விட்டேன். என் தந்தையும் யான் அவரைப் பார்க்கக்கூடாதென்று தடை யுத்தரவு போட்டு விட்டார். விவாக காலத்தில் மணவறையில் அவரது பக்கத்தில் யான் தலைகுனிந்த வண்ணமாக உட்கார்ந்ததும், மணவறையைச் சுற்றி வருகையில் அவரோடு கைகோத்து வந்ததும் தவிர, எங்களிடையே பேச்சு வார்த்தைகூட நிகழவில்லை. இவ்வித நிலையில் அவர் புதுமணப் பெண்ணாகிய என்னைக் காணவோ என்னோடு பேசவோ எவ்வளவு ஆவல் கொண்டிப்பார் என்பதும், அதிலும், இனித் தான் இவ்வுலகில் உயிர் வாழ முடியாது என்ற நிலையில் என்னைப் பார்த்துப் பேசுவதில் எத்துணை விருப்ப மிகுதி யிருக்குமென்பதும் எனக்கு இப்போதுதான் தெரிகிறது. ஆனால் அச்சமயம் எனக்கு அவரைப் பார்க்கவோ, பேசவோ விருப்பமேயில்லை. எனவே என் மனத்தில் அவர் உருவம் பதியவேயில்லை. இப்போது நினைத்துப் பார்த்தாலும் இறந்த என் கணவர் உருவம் எவ்வாறிருக்கும் என்பதை யூகித்துப் பார்க்கக்கூட முடியவில்லை. அவரைப் பார்க்க யான் விரும்பவில்லை என்பதைக் கேட்டதும், மரணப் படுக்கையி லிருந்த அவரது மனம் என்ன பாடு பட்டிருக்கும்? எவ்வாறு நொந்து புண்பட்டிருக்கும்? அவரை யான் பார்க்க விரும்பா விட்டாலும், அவர் விருப்பத்தை நிறைவேற்ற யான் அவரிடம் சென்று அவருக்குக் காட்சி தந்தால், அதனால் எனக்கு என்ன பாதகம்

'மணமகனே பிணமகனாய்'

நேரிட்டுவிடும்? என்னைக் கண்டதனால் அவரது அல்லலுற்ற ஆன்மா அமைதியை யன்றோ அடைந் திருக்கும்? இதனை யெல்லாம் நான் அப்போது நினைந்து பாராது பேதமை யறிவால் பிடிவாதங் கொண்டு அவரது மரண வேண்டுகோளை மறுத்து பாவியானேன். ஐயோ! அக்கொடுமையை இப்போது நினைத்தாலும் என் கண்களில் நீர் ததும்புகின்றது. என் உள்ளம் உருகிப் பாகாய் ஓடுகிறது. அத் தீவினைதான் இப்போது என்னை நலிந்து துன்புறுத்துகிறது என்று கூட யான் எண்ணுகிறேன். போனது போக.

எனது கணவர் இறந்து, பிரேத அடக்கமும், மற்றும் பல சடங்குகளும் முறையே நடந்தன. என்னை ஊரிலுள்ள பலரும் வந்து துக்கம் விசாரித்தார்கள். வந்தவர்களோ டெல்லாம் என் தாயும், மற்றவர்களும் கலந்து துக்க முற்றார்களே யன்றி, யான் இந்த இழவுப் போராட்டங்களில் கலந்து கொள்ளவேயில்லை. என் கணவன் இறந்ததி லிருந்து யான் தனி அறையில் தவசிபோல மௌனமாக இருந்து வந்தேன். எனக்கு விவாகமானபோது யான் எவ்வாறு அதை விவாகமாக நினைக்கவில்லையோ, அதுபோலவே, என் கணவன் இறந்ததைப் பற்றியும் யான் கவலை கொள்ளவில்லை. என் கணவன் மரணத்தால் எனக்கு எத்துணை நஷ்டம் என்பதையும் அப்போது யான் அறியவில்லை. அச்சம்பவத்தை யான் சாதாரண விளையாட்டாகவே எண்ணினேன்.

பின்னர் எனது புக்ககத்தில் காரியமெல்லாம் முடிந்த பிறகு, எனது மாமியார் என்னைத் தம்முடன் விட்டு வைக்கும்படி பெற்றோர்களிடம் கேட்டு, தம் கணவர் இறந்த பிறகு, தம் ஓரே பிள்ளையை ஆதாரவாகக் கொண்டிருந்ததாகவும், அப்பிள்ளையும் எதிர் பாரா வகையில் இறந்து விட்டமையால் என்னைத் தம்முடன் விட்டு வைத்தால் தமக்கு உதவியாகவும் பொழுது போக்காகவும் இருக்குமெனவும், தான் என்னை அருமையாக வளர்ப்பதாகவும் சொன்னார். அவர் சொல்லிய வண்ணமே அருமையாக என்னைப் பாராட்டி வளர்ப்பார் என்பது அவர் இரண்டு நாளில் என்னிடம் காட்டிய ஆர்வமும், தாயினும் சாலப் பரிவும் எடுத்துக் காட்டியது. என்றாலும் என் தந்தையார் இதற்கும் ஒப்பவில்லை. எனவே அவ்வம்மையார் வாடிய முகத்தோடு வருந்தி எங்களை வழி யனுப்பினர்.

பெற்றோர் துக்கமும், உற்றார் ஆரவாரமும் ஒருவாறு ஓய்ந்தது. என் தந்தை மட்டும் எனக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி மிக வருந்தினார். தாம் எண்ணிய எண்ணத்தைப் பல போட்டிகளுக்கிடையே முடித்து விட்டதாகக் கருதி மகிழ்ந்த தம் எண்ணத்தில் மண் விழுந்ததே என்று ஏங்கி யயர்ந்தார். அறிவிலும் உலகானுபவத்திலும் மிகுந்த அவரது நண்பர்களெல்லாம் நடந்துபோன சம்பவத்தைப்

பற்றி வருந்தி யாவதொன்றுமில்லை யென்றும், இளம்பருவமுடைய எனக்கு மறுமணஞ் செய்தலே நல்லதென்றும் யோசனை கூறினர். இவ்விடத்தில் என் தந்தையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவது அவசியமென்று கருதுகிறேன். அவர் உயிரிரக்கத்தையே அடிப்படையாகக் கொண்ட சைவ சமயத்தைச் சார்ந்தவர்; புல்முதல் மனிதன் ஈறாகவுள்ள உயிர்களின் துன்பத்தைத் துடைப்பதே கடவுளுக்கு வழிபாடு செய்வதாகுமென்று எண்ணுபவர்; ஓரறிவுயிர்க்கும் மனத்தாலும் துன்பஞ் செய்ய நினைக்கக்கூடாது என்றும், எல்லா உயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகுபவரே அந்தணரென்று சொல்லப் படுதற் குரியார் என்றும் வலியுறுத்திக் கூறும் திருக்குறளை இடையறாது ஓதுபவரும், பிறர்க்கு எடுத்து உரைப்பவருமாவார். அதுவொன்றோ; என் மூதாதையர் ஊண் உண்பதில்லை; யானும் உண்ணவில்லை என்று கூறி, உயிர்களைக் கொடுமைப்படுத்தி வருத்தும் ஒரு சிலர்போ லல்லாது, புலால் உண்ணும் குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, ஊன் என்பது உயிர்க்கொலைக்கு ஏதுவாயிருக்கிற தென்னும் உண்மையை யுணர்ந்து, புலால் உண்ணும் வழக்கத்தை விடுத்து, தாம் மாத்திரமல்லாது தம் குடும்பத்தாரையும் 'சைவர்கள்' ஆக்கிய அருளாளர். இவர் பல சைவசபைகளில் ஈடுபட்டுச் சமயத்தொண்டு செய்து வந்த தல்லாது, அறிஞர் அவைகளில் விரிவுரைகளுஞ் செய்து வந்தார். ஆதலால் இவருக்கு உத்தியோகத் துறையில் மட்டுமல்லாது, இச்சைவ சபைகள் வாயிலாகவும் நண்பர்கள் பலர் இருந்துவந்தனர். அவர்களில் சிலர் எனது குடும்ப நண்பர்களாகவு மிருந்தனர். எனவே அவர்களுக்கு என்னைப் பற்றியும், என் வீட்டாரைப் பற்றியும் நன்கு தெரியும். அவர்கள் எனக்கு மறுமணஞ் செய்வது அவசியம் என்று என் தந்தைக்கு வலியுறுத்தியபோது அவர் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சாதிக்கட்டுப்பாட்டுக்கு மிகவும் பயந்தார். உற்றாரெல்லாம் தம்மை யுதறித் தள்ளி விடுவார்கள் என்று தயங்கினார். உறவினர்களோ, என் தந்தை கல்வியாலும், உத்தியோகத்தாலும் மற்றவர்களைக் காட்டிலும் மேம்பட்டிருத்தலைக் கண்டு பொறாமை கொண்டு பலவிதத்திலும் எங்கள் குடும்பத்திற்குத் தொந்தரவு விளைத்துவந்தனர். எங்களுக்குத் துன்பம் நேருவதை அவர்கள் இன்பமாகக் கருதினர். இவ்வித உற்றார்களுக்கும், அவர்களது கட்டுப்பாட்டுக்கும் பயந்து வந்த அவரது அறியாமையை என்னென்பது! எனவே அவர் சமயத்தின் மீதும் சாஸ்திரத்தின் மீதும் பழியைப்போட்டு, பெண்களுக்கு மறுமணஞ் செய்வது தவறானது என்று தமது நாவன்மையால் பல காரணங்களைக் காட்டி அவர்கள் யோசனைகளைப் புறந்தள்ளினார். இவரது குறுகிய நோக்கத்தைக் கண்டு சிலர் இவரிடத்து நட்புக்கொள்வதையும் விட்டொழித்தனர்.

இதனிடையே, யான் எனது அம்மான் மகனுக்கு என் மன நிலையைத் தெரிவித்து, விரைவில் வந்து என்னை மறு மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளை இன்றிருந்தே தொடங்க வேண்டுமென்றும் வற்புறுத்தி இரகசியமாகச் செய்தி சொல்லி யனுப்பினேன். ஏனென்றால் அவன் யான் மங்கைப் பருவமடைவதற்கு முன் பலகால் என்னிடம் வலியுறுத்திக் கூறி யிருந்த உறுதி மொழிக ளனைத்தும் உண்மையென நம்பியிருந்தே னாகையால் யான் என் மனநிலையைத் தெரிவித்தனுப்பியதும், அவன் என்னை விவாகஞ் செய்துகொள்வதற்கான ஏற்பாடுகளை யுடனே தொடங்கி முடிப்பான் என்ற திடமான எண்ணங்கொண் டிருந்தேன். மேலும் அவனது தந்தை சிறந்த செல்வந்தர். அவருக்கு அவன் ஒரே பிள்ளை. அவன் விருப்பப்படியே அவர் நடப்பவர். அவர்கள் உறவினர்களுக்குப் பயப்படவேண்டிய அவசியமுமில்லை.

ஆனால் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் யான் விடுத்த செய்திக்குப் பதிலும் அனுப்பவில்லை; என்னை விவாகஞ் செய்து கொள்வதற்கு முயற்சி செய்ததாகவுந் தெரியவில்லை. மீண்டுமொரு முறை அவனிடம் ஆளை யனுப்பினேன். யான் சொல்லி யனுப்பிய செய்தியைக் கேட்டுக்கொண்டு, தான் நேரே வந்து என்னைப் பார்த்துப் பேசுவதாகச் சொல்லி ஆளைத் திருப்பி யனுப்பி விட்டான். அவன் விவாக முயற்சிகளை யெல்லாம் முடித்துவிட்டு மகிழ்ச்சிச் செய்தியோடு என்னிடம் வருவான் என்று யான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில், அவனது தந்தையின் உத்தியோக மாற்றங் காரணமாக அவன் குடும்பத்தினர் தம் சொந்த வீடு முதலியவைகளை வாடகைக்கு விட்டு விட்டு வெளிநாடு சென்றனர். இது எனக்குப் பெரிய ஏமாற்றத்தை யுண்டுபண்ணியது. எனினும், அவன் எத் துணை காலமாயினும் என்னை வந்து மணஞ்செய்து செல்வான் என்று அப்போதும் நம்பி மனந் தேறினேன். இவ்வாறு மூன்று ஆண்டுகள் கழிந்தன. இதனிடையே என் நிலைக்காக எனது தாயே உண்மையாக வருந்தி வந்தார். என் இளமைச் செவ்வியையும், எதிர் பாராது யான் அடைந்த கோலத்தையும் நினைந்து நினைந்து பலகால் என்னைப் பார்த்து அவர் கண்ணீர் வடிப்பதுண்டு. எந் தந்தையோ என்னைப்பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை. எப்போதாகிலும் ஒரு நாள் நினைந்துகொண்டு என் தாயோடு தாம் எண்ணிய எண்ண மெல்லாம் பாழாய்ப் போனதாகக் கூறி வருந்துவார். யானோ அச் சமயம் என் விதவைத் தன்மையின் பயங்கர நிலையை முற்றும் உணர்ந்தே னில்லை. பிள்ளைமை யறிவால் யான் அதை நினைந்து பார்த்ததற்கும் ஆற்றல் வாய்க்கப் பெறு திருந்தேன். எனக்கு இருந்ததெல்லாம் ஒரே யொரு கவலைதான். என் அம்மான் மகன் தகவல் சொல்லி யனுப்பவில்லையே! அவன் எப்போது வந்து விவாகஞ் செய்து கொள்வான் என்பதே என் கருத்தில் முக்கியமாக

இருந்தது. யான் எண்ணுகிறபடி உண்மையில் என் அம்மான் மகன் விவாகஞ்செய்வதா யிருந்தால் அது அவ்வளவு எளிதில் நடக்கக்கூடிய காரியமா? அதற்கு எதிர்ப் பில்லாமல் இருக்குமா? என்பதைப்பற்றி யெல்லாம் யான் நினைந்து பார்க்கவே யில்லை. மங்கைப் பருவமடைந்தும், இத்துணை வெள்ளையறிவுட னிருந்ததற்கு எனக்கு உலகானுபவம் இல்லாதிருந்ததுதான் காரணமாகும் என்பதை நீங்க ளறிவீர்கள். யான் ஆரம்பக் கல்வி முறையில் ஐந்தாவது வகுப்புவரைதான் வாசிக்க வைக்கப்பட்டேன். அவ் வகுப்புப் பாடபுத்தகங்களைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது. உலக நடவடிக்கையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு எனக்கு வசதி கிடையாது. யான் கிணற்றுத் தவளையாகவே இருந்தேன். நான்கு மதிற்சுவர்க்குட் பட்ட என் வீடுதான் எனக்குப் பெரிய உலகம். யான் மட்டும் அவ்வாறு அறியாமையில் மூழ்கி யிருந்தே னென்று நினைக்காதீர்கள். என் சகோதரர்களும் அவ்வாறுதான் இருந்தார்கள். என்னைவிட அவர்களுக்கு அவர்கள் செய்யும் வேலைதான் தெரியும். இதைக்கொண்டு என் பெற்றோர்களின் தன்மையையும் அவர்கள் மனப்பான்மையையும் நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

இந்தப் படத்தில் உள்ள
இரண்டு பெண்களைக்
கண்டு பிடிக்கவும்.

கமிஷன் பேட்டி

[இருடியம்]

கஜினி முகமது இந்தியாமீது பதினெட்டுத் தடவைகள் படையெடுத்து வந்து கடைசியாக இந்தியாவை ஜெயித்ததாகக் கதை சொல்லுகிறார்கள். நான் சென்னை சர்விஸ் கமிஷனுக்குப் பதினெட்டுத் தடவைகள் போனேன். பதினெட்டாவது தடவைகூட எனக்கு வேலை கொடுக்கவில்லை. எனக்கு யாரை உபமானம் கூறுவதென்று புரியவில்லை.

ஆனால் கமிஷனால் ஒரு சிறந்த நன்மையை நான் அடைந்தேன் என்பதை என்னால் மறுக்க முடியாது. பேட்டிக்குப் போகும் காரணத்தால் தமிழ் நாட்டிலுள்ள பதினெட்டுப் புதிய நகரங்களைப் பார்த்தேன். இனிமேல் நான் போகும் செலக்ஷன்களுக்கு என்னை ஆந்திர நாட்டுக்குத் தருவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

நான் சென்ற ஒரு பேட்டியைப்பற்றி நேயர்களின் பிரயோஜனத்துக்காகக் கீழே தருகிறேன்.

ஒரு நாள் 'மண்டு' பேபரில் கீழேகண்ட விளம்பரத்தைப் பார்த்தேன். 'ஒன்பது தத்துவ சாஸ்திர ஆசிரியர்கள் தேவை. பிரவேசக் கட்டணம் பத்து ரூபாய். யாதொரு காரணத்தாலும் பிரவேசக் கட்டணம் திருப்பி யனுப்பப்பட மாட்டாது.'

நான் தத்துவ சாஸ்திரத்தில் எம். ஏ., பட்டம் பெற்றவன். ஆகவே மேற்படி விளம்பரத்தைப் பார்த்ததும் உடனே வேலை கிடைத்துவிட்டதுபோல் ஆடினேன், பாடினேன், ஆனந்தக் கூத்தாடினேன். என்னிடம் ஒரு தங்க மோதிர மிருந்தது. (யுனிவர்சிடிக்கும், சர்விஸ் கமிஷனுக்கும் செலவு செய்தது போக என்னிடம் மீத மிருந்த ஆஸ்தி இது ஒன்றுதான்) அதை உடனே விற்று கஜானாவில் பத்து ரூபாய் கட்டி அப்பிளிகேஷனை அனுப்பினேன்.

அன்றிரவு முழுவதும் வேலைகிடைத்ததும் எனக்குக் கிடைக்கும் எண்பது ரூபாய் சம்பளத்தை எவ்வாறு செலவு செய்வதென்றும், என்னுடைய செலவுக்காக அடகுவைக்கப்பட்ட எனது மனைவியின்

நகைகளில் எதை முதலில் மீட்பதென்றும் கனவு கண்டுகொண்டிருந்தேன்.

மறுநாளேயிலிருந்து கமிஷன் மெம்பர்களால் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு என்னைத் தயார் செய்யத் தொடங்கினேன். 'உஷ்ண மானிக்கும் ஆகாய விமானிக்கும் என்ன வித்தியாசம்?' 'எக்ஸ்ரேயுக்கும் ஒய்ரேயுக்கும் என்ன சம்பந்தம்?' 'ஆர்க்கிமிடிஸ் சித்தாந்தத்திற்கும் விவேகானந்தர் வேதாந்தத்துக்கும் என்ன வித்தியாசம்!' 'நோபல் பரிசை 'இருடிய'த்திற்குக் கொடுக்காமல் ஏன் ராமனுக்குக் கொடுத்தார்கள்?' முதலிய கேள்விகளுக்குப் பதில் தெரிய நான் எம். ஏ. பரீக்ஷைக்குப் படித்த பாடங்கள் பூராவையும் படித்தேன்.

இதைத் தவிர அயல்நாடுகளிலிருந்து வரும் தத்துவ சாஸ்திர பத்திரிகைகளைக் கொண்டு கீழே கண்ட கேள்விகளைப் படித்தேன். 'கொக்கிப் புழுவின் நீளம் என்ன?', காலரா கிருமியின் கனம் என்ன?', 'சந்திரமண்டலத்தில் சர்விஸ் கமிஷன் உண்டா?' முதலியன.

ஒரு மாதம் சென்று எனக்கு ஒரு 'ராஜாங்க சர்விஸ்' கார்டு வந்தது. அதில் சர்விஸ் கமிஷன் மெம்பர்கள் எனக்கு அடுத்த திங்கட் கிழமை பேட்டியளிப்பதாகத் தெரிய வந்தது.

பேட்டி என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே நமக்கு ஒரு கர்வமும் பெருமிதமும் உண்டாகிறது. ராஜாக்களுக்கும், மகா ராஜாக்களுக்கும், மந்திரிகளுக்கும், மாஜி மந்திரிகளுக்கும், சட்டசபை வீரர்களுக்கும், வட்டமேஜை புலிகளுக்கும், கிடைக்கக்கூடிய தனிப்பெரும் பெருமையாகிய 'பேட்டி'எனக்குக் கிடைத்து விட்டால் நான் எப்படி சந்தோஷ சாகரத்தில் முழுகாமலிருக்க முடியும்?

இரண்டு நாட்கள் முன்னதாகவே புல்சூட், பூட்சு, தொப்பி முதலியவை எரவல் வாங்கிக்கொண்டு சென்னைக்குப் பிரயாணமானேன். திங்கட்கிழமை மாலை சர்விஸ் கமிஷன் ஆபீசைத் தேடிக்கொண்டு தேனாம்பேட்டை ரோடு வழியாகப் போய்க்கொண்டிருந்தேன். ஒரு பெரிய கட்டிடத்தின் முன்பாக சுமார் ஆயிரம் இளைஞர்கள் 'சர்ஜு' 'பிளேசர்' 'நேவி புளூ' முதலிய உடைகளில் தங்களை அலங்கரித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்தேன். அவர்கள் ஏதாவது அழகுப் போட்டிக்கு போட்டிப் போடுகிறார்களா அல்லது ஏதாவது ஒரு நவீன நாகரிக மங்கை சுயம்வரம் வைத்திருக்கிறாளோ என்று நினைத்தேன். அருகே சென்று விசாரித்ததில் அதுதான் சர்விஸ் கமிஷன் கட்டடம் என்றும், அந்த இளைஞர்கள் என்னைப்போலவே கமிஷன் பேட்டிக்கு வந்திருப்பதாகவும் அறிந்தேன்.

சரியாக இரண்டு மணிக்கு மெம்பர்கள் வந்தார்கள். 'காலிங்பெல்' அடிக்கப்பட்டது. ஒவ்வொரு வாலிபரும் நெம்பர் பிரகாரம் பேட்டிக்குச் சென்றனர். அவர்கள் திரும்பி வந்ததும் பார்லிமெண்டு மீட்டிங்கிலிருந்து திரும்பிவரும் முதன் மந்திரியை மொய்த்துக்கொள்ளும் பத்திரிகை நிருபர்களைப்போல் நாங்கள் சூழ்ந்து கொண்டு

கேள்வி விவரங்களைப்பற்றிக் கேட்டோம். ஆனால் ஒருவராவது பதில் சொல்லவில்லை.

கடைசியாக நான் போகவேண்டிய முறை வந்தது. நான் சென்றவுடன் ஒரு மெம்பர் 'வாங்க மிஷ்டர் 'இருடியம்' உட்காருங்கள்' என்று வெகு நாள் பழகின நண்பர்போல் வரவேற்றார். (கமிஷனில் எனக்கு இதுதான் திருப்தி. வேலை கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் சந்தோஷமாகவாவது வரவேற்கிறார்களல்லவா? உடனே கேள்விகள் கேட்கத் தொடங்கினர்.

கேள்வி.—'உனது பெயரென்ன?' எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'வாங்க மிஸ்டர் ரேடியம்' என்று வரவேற்ற மெம்பர் அதற்குள் நமது பெயரை மறந்து விட்டாரா? இது கனவோ? நினைவோ? என்று குழப்ப மடைந்தேன். குழப்பத்தில் எனது பெயரை மறந்து விட்டேன். என் தந்தைக்குத் தந்தி யடித்து எனது பெயரை மறு தந்தியில் தெரிவிக்கும்படிச் சொல்லலாம் என்று நினைத்தேன். சட்டென்று ஒரு நல்ல யோசனை தோன்றியது. மெம்பர் கையிலுள்ள என் அப்ளிகேஷனை வாங்கிப் பார்த்தேன். நல்ல வேளையாக எனது பெயர் 'இருடியம்' என்று எழுதப்பட்டிருந்தது. மனத்தைத் திடப் படுத்திக்கொண்டு 'எனது பெயர் தாங்கள் சற்று முன்பு கூறினீர்களே அதுதான்' என்றேன். பின்னர் கீழ்க் கண்ட சம்பாஷணை நடந்தது.

கேள்வி:—உமக்கு நீந்தத் தெரியுமா?

பதில்:—என்னைப் படகு ஓட்டச் சொல்லப் போகிறீர்களா?

கேள்வி:—கொக்கு பார்த்திருக்கிறீரா?

பதில்:—நான் வேட்டையாட வேண்டுமா?

கேள்வி:—நீர் ஏன் எம். ஏ. படித்தாய்?

பதில்:—தெரியாமல் படித்து விட்டேன். மன்னிக்க வேண்டும். நான் இனிமேல் எம். ஏ. வரை படிக்கவே மாட்டேன்.

* * *

'சரி. நீர் போய்விட்டு வாலாம்' என்று வழியனுப்பினார்கள்.

ஒரு மாதம் சென்று எனது சர்ட்டிபிகேட்டுகள் திருப்பி யனுப்பப் பட்டன. அத்துடன் கமிஷன் மெம்பர்கள் எனக்கு வேலை கொடுக்காததைப்பற்றி வருந்துவதாகவும் எழுதி யிருந்தது.

எனக்கு வேலை கிடைக்காததுகூட வருத்தமில்லை. (கமிஷன் புண்ணியத்தில் மாதத்திற்கு ஒரு செலக்ஷன் வைக்கிறார்கள். எனக்கு வயது 23 தான் ஆகிறது. இன்னும் 24 செலக்ஷன்களுக்குப் போக முடியும்) ஆனால் கமிஷன் மெம்பர்கள் எனக்காக வருந்தப் பட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்வது பரிதாபமா யிருக்கிறது.

அடுத்த செலக்ஷனுக்குப் போகும்பொழுது பெயர் முதலியவற்றைச் சரியாய்த் தெரிந்துகொண்டு போகிறேன்.

முந்துங்கள் ! முந்துங்கள் !!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அநுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா ? இல்லையேல் உடனே எழுதி வாவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அநுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை ரூபா		1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1–12—0

தபால் சார்ஜ் வேறு

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

லெனின்

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் $2\frac{1}{2}$ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

காங்க்ரீன்

என்னும்

இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் S. ரங்காச்சாரியவர்களுக்கும் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினல் இரணம் ஆறிவிடும்.

சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த

ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆறாமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் சொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

விலாசம் :—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வர வழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தியுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆறுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனைகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானுள். இரண்டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்... கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும் போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோஸஸ் கம்...ி

கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட் டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சினேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32 கார்ட்டன் வூட்ராப் கம்பெனி, மதராஸ்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனுல் நான் எதிர் பார்க்காத வண்ணம்

குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே !

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானுபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்[illegible] ரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழ[illegible] காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோ[illegible] காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொ[illegible]து கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆத[illegible] அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் [illegible]ளையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours fai hfully

E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.